ஐந்திணைப் பதிப்பகம்

# தெலுங்கு இலக்கிய விருந்து

டாக்டர் சி. ஆர். சர்மா

# தெலுங்கு இலக்கிய விருந்து

கட்டுரைகள்

டாக்டர் சி. ஆர். சர்மா
சிறப்புப் பேராசிரியர், தெலுங்குத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

ஐந்திணைப் பதிப்பகம்
தொலைபேசி : 84 94 10
279, பாரதி சாலை,
திருவல்லிக்கேணி
சென்னை - 600005.

முதற்பதிப்பு—சூலை 1991
உரிமை ஆசிரியருக்கு

ஐந்திணை : 84

விலை ரூ 16-00

Published by :
KUZHA. KATHIRESAN

Phone : 849410
AINTHINAI PATHIPPAGAM
279, Pycrofts Road
Triplicane, Madras - 5

அச்சிட்டோர் : தொ.பே. : 47 78 20
சாலை அச்சகம், 11 திருவீதியான் தெரு,
கோபாலபுரம், சென்னை-86 [சாலை 256]

# முன்னுரை

தெலுங்கும் தமிழும் ஓரினத்தைச் சேர்ந்த பழம்பெரு மொழிகள். மொழி, இலக்கியம், சமயம், கலாச்சாரம் முதலிய துறைகளில் இவ்விரு மொழிகள் பேசுவோருக்கிடையே தொடர்பு உண்டு. எனினும் தமிழ் இலக்கியத்தைப் பற்றித் தெலுங்கர்களுக்கோ, தெலுங்கு இலக்கியத்தைப் பற்றித் தமிழர்களுக்கோ தெரியவேண்டிய அளவில் தெரியவில்லை என்பது உண்மை. தெலுங்கு இலக்கியத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட இந்தக் கட்டுரைத் தொகுப்பு தமிழில் எனது நான்காவது புத்தகம். இதற்கு முன் வெளிவந்துள்ள ஆயிரம் தலை நாகம், தெலுங்கு இலக்கியப் பலகணி முதலியவற்றை ஆதரித்து என்னைப் பெருமைப்படுத்திய வாசகர்கள் இதனையும் ஆதரிப்பார்கள் என நம்புகிறேன்.

அன்புகூர்ந்து இக்கட்டுரைகளை வாசித்துப் பயனுள்ள கருத்துகளை அளித்த அருமை நண்பரும், தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தமிழ் இலக்கியத் துறையில் பணியாற்றி வருபவருமான டாக்டர் வ. குருநாதன் அவர்களுக்கும், இந்நூலிற்கு அணிந்துரை அளித்து என் பணியைச் சிறப்பித்த சிறந்த எழுத்தாளரும், சிறப்புப் பேராசிரியருமான டாக்டர் இராம. பெரிய கருப்பன்—'தமிழண்ணல்' அவர்களுக்கும் பணிவார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலில் கூறவேண்டியதை கடைசியாகக் கூற ஆசைப்படுகிறேன். புத்தக வெளியீடு மிகவும் சிரமமாக இருக்கும் இந்நாட்களில் இந்த இலக்கியக் கட்டுரைத் தொகுப்பினை வெளியிட முன்வந்துள்ள ஐந்திணைப் பதிப்பகத்தாருக்கு, குறிப்பாக நண்பர் திரு குழ. கதிரேசன் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மதுரை, அன்பன்
24-4-'91 சி. ஆர். சர்மா

'தமிழண்ணல்'
முனைவர் இராம. பெரியகருப்பன்

'ஏரகம்'
384, சதாசிவ நகர்
மதுரை - 625 020

# அணிந்துரை

திரு சி. ஆர். சர்மா அவர்கள் சாகித்திய அக்காதெமியின் சென்னை அலுவலகத்தில் 25 ஆண்டுகள் பணியாற்றியவர். ரா. பி. சேதுப்பிள்ளை, தெ. பொ. மீ., மு. வ. போன்ற தமிழறிஞர்களுடன் நெருங்கிப் பழகியவர். தெலுங்குமொழியில் புகழ்பெற்ற எழுத்தாளரும் பேராசிரியருமான இவர், தமிழிலும் நன்கு எழுத வல்லவர். தமிழ் இலக்கியச் சீர்மைகளை இவர் தெலுங்கில் பல நூல்களாகவும் கட்டுரைகளாகவும் எழுதிப் பரப்பிய பெருமைக்குரியவர். மிக நல்லவர், இனியவர், பண்பாளர்.

தெலுங்கில் 'திருக்குறளைத்' திறம்பட மொழிபெயர்த்துள்ளார். தமிழ்ப் பல்கலைக்கழகமும் தெலுங்குப் பல்கலைக் கழகமும் இவருக்குப் பரிசளித்துப் பாராட்டியிருப்பதிலிருந்து, இவர்தம் பெருமையை அறியலாம். இப்போது தெலுங்கு மொழிக்கான சிறப்புநிலைப் பேராசிரியராக, பல்கலைக் கழக மானியக்குழு, இவரை நியமித்துள்ளது.

அண்மையில் தெலுங்கில் 'தமிழவிந்து' (தமிழ்விருந்து) என இவர் எழுதிய நூல் போலவே, இந்நூல் 'தெலுங்கு இலக்கிய விருந்தாக'த் தமிழில் வெளிவருகிறது. இத்தகைய இரு இந்தியமொழிப் புலமையாளர்களால், இந்திய இலக்கியம் செழுமையுறும். ஒப்பியல்துறைக்கு இவர் பணி, பெரிது. தமிழ் - தெலுங்கு ஒப்பிலக்கியப் பெரும்பணிக்குத் தக்க கால்கோள்களிட, தமிழன்னை இவருக்கு நீண்ட ஆயுளும் நிறைசெல்வமும் நல்குவாளாக என இறைஞ்சி வாழ்த்துகிறேன்.

தமிழண்ணல்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | முன்னுரை ... | iii |
| | அணிந்துரை ... | v |
| 1. | தெலுங்கு மொழி ... | 1 |
| 2. | தெலுங்கு இலக்கியம் ... | 7 |
| 3. | தமிழ்-தெலுங்கு காப்பியங்களில் ஒற்றுமை-ஒப்பீடு ... | 24 |
| 4. | தமிழர்களின் தெலுங்கு மொழித் தொண்டு ... | 38 |
| 5. | 'கந்துகூரி'யின் சிந்தனைகள் ... | 52 |
| 6. | தெலுங்கு நாட்டின் பாரதியார் ... | 63 |
| 7. | மக்கள்கவிஞர் வேமன்னா ... | 73 |
| 8. | தெலுங்கு இலக்கியத்தில் ஒரு மேரு ... | 77 |
| 9. | தெலுங்கில் பாரதியார் ... | 84 |
| 10. | தமிழகம் அறிந்த தெலுங்குக் கவிஞர்கள் ... | 89 |

# தெலுங்கு இலக்கிய விருந்து

டாக்டர் சி. ஆர். சர்மா

# 1

# தெலுங்கு மொழி

நம் நாட்டில் தோன்றிய சிறந்த அரசர்களுள் ஒருவரும் பன்மொழிப் புலவருமாகிய ஸ்ரீ கிருஷ்ணதேவராயர் தெலுங்கில் கோதையின் திருக்கதையை—ஆமுக்த மால்யதாவைப் பெருங்காப்பியமாக வரைந்துள்ளார். வடமொழியிலும் மிகுந்த புலமை பெற்றிருந்த அம்மன்னரது தாய்மொழி கன்னடம் என்று சிலர் கூறுவது சிறிது வியப்பாக இருக்கும். 'ஆனால், நாட்டுமொழிகளிலே தெலுங்கு மேன்மையானது' (தேசபாஷலந்து தெலுகு லெஸ்ஸ) என்று அவர் கூறியதில் வியப்போன்றுமில்லை. ஏனெனில், அவர் தெலுங்கு மொழியில் பேரன்பு கொண்டவர். அவர் அரசு புரிந்த காலம்தான் தெலுங்கு இலக்கியத்தின் பொற்காலம் எனக் கருதப்படுகிறது. அவரது அவையில் தெலுங்குக் கவிஞர்கள் பலர் இருந்தனர். இத்தகைய சிறப்புமிக்க மன்னர் பெருமான் தெலுங்கு மொழியைப் புகழ்வதோடு மட்டுமல்லாமல், தெலுங்கில் சிறந்த காப்பியமும் படைத்துள்ளார்.

ஸ்ரீகிருஷ்ணதேவராயரைப் போலவே மகாகவி பாரதியாரும், தெலுங்கினைச் 'சுந்தரத் தெலுங்கு' என்று போற்றியுள்ளார். பிறமொழி வல்லுநர்களால் போற்றப்பட்ட தெலுங்கின் இனிமை மேல்நாட்டு அறிஞர்களையும் மிகவும் கவர்ந்துள்ளது. ஹென்றிமாரீஸ் என்பவர் இவ்வாறு கூறுகிறார்: "தெலுங்கு மொழி செவிக்கு மிகவும் இனிமையானது; பாமரர்களின் இதழ்களிலும் அஃது இனிமையாக ஒலிக்கும்; இதனைக் கிழக்கு, நாடுகளின் இத்தாலிய மொழி

என்று கூறலாம். மொழிவளத்திலும், இலக்கிய வளத்திலும் தமிழ் சிறந்ததாக இருக்கக் கூடும்; ஆயினும் இனிமைக்குப் பெயர் போனது தெலுங்கு மொழி.'' இவ்வண்ணமே திராவிட மொழிகளுக்குச் சிறந்த தொண்டு புரிந்த இராபர்ட் கால்டுவெல்லும் கூறியுள்ளார். மொழி வளத்தில் தமிழுக்கு அடுத்ததாக இருப்பினும், இனிமையில் தெலுங்கு மொழிக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்பது அவரது கருத்து. ஆகவே, தமிழைப் போலத் தெலுங்கும் ஓர் இனிய பழைய மொழி என்று கூறுவது பொருந்தும்.

அறிவியலைக் கற்பிப்பதற்குத் தெலுங்கு மிகவும் பயன்படும் என்று சிறந்த விஞ்ஞானி ஜே பி. எஸ். ஆல்டேன் கருதியதைக் காணலாம். "வெளிநாட்டுப் பொருள்களை ஒதுக்கி வைப்பதுபோல் வெளிநாட்டுச் சொற்களை ஒதுக்கி வைத்தல் இயலாது. பிற இந்திய மொழிகளை விடவும் தெலுங்கு அவற்றை எளிமையாக உட்கொள்ளுகிறது. ஆதலால் அறிவியல், மருத்துவம், பொறியியல் முதலியவற்றைக் கற்பிப்பதற்கு இந்தியுடன் அது போட்டியிடக் கூடும்.''

தமிழைப் போலவே, தெலுங்கும் ஒரு தேன்மொழி. அதற்குத் தெனுகு, திரிலிங்கம், ஆந்திரம் என்னும் பெயர்களும் உண்டு. இவற்றில் தெலுங்கு என்னும் சொல் மிகப் பழமையானது. ஆந்திரமும் திரிலிங்கமும் (காளேசுவாம், தாட்சாராமம், சீபருவதம் என்னும் மூன்று சிவத்தலங்களுக்கு இடைப்பட்ட நாடு) வடமொழிச் சொற்களாகும்.

இந்திய அரசியல் சட்டத்தில் குறிக்கப்பட்ட பதினைந்து மொழிகளுக்குள் தெலுங்கும் ஒன்று. சிறப்பாக ஆந்திரப் பிரதேசத்தில் அது வழக்கில் இருந்தாலும், அதனைப் பேசுவோரை நம்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் காணலாம். இன்று ஏறத்தாழ ஆறுகோடி மக்கள் தெலுங்கு மொழியைப் பேசுகின்றனர். எனவே, நம் நாட்டில் இந்திக்கு அடுத்தபடியாக மிகுதியாக மக்கள் பேசும் மொழி தெலுங்கு எனக் கூறுவது மிகையாகாது.

தெலுங்கு பேசப்படும் ஆந்திரமாநிலத்திற்கு வடக்கில் மத்தியப் பிரதேசமும், ஒரிசா மாநிலமும், கிழக்கில் வங்காள விரிகுடாவும், தெற்கில் தமிழ்நாடும், மேற்கில் கர்னாடக, மகாராட்டிர மாநிலங்களும் எல்லைகளாகத் திகழ்கின்றன. வட, தென் இந்தியப் பகுதிகளுக்கு நடுவில் தெலுங்கு மாநிலம் உள்ளது. இதனால் தெலுங்கர்களில் திராவிட, ஆரிய பழக்க வழக்கங்கள் காணப்படுகின்றன. அவ் வண்ணமே திராவிட மொழியான தெலுங்கில் வடமொழி, பிராகிருதம், அராபியம் முதலிய மொழிகளைச் சேர்ந்த சொற்களும் ஏராளமாகக் காணப்படுகின்றன.

தெலுங்கு மொழியின் தோற்றத்தைப் பற்றிச் சில கருத்து வேறுபாடுகள் உள்ளன. அது திராவிட மொழி என்றும், ஒருவிதமான பிராகிருத மொழி என்றும், வடமொழியைப் பின்பற்றிய மொழி என்றும் கருத்துக்கள் காணப்படுகின்றன. ஆயினும் தெலுங்கு மொழி திராவிட இனத்தைச் சார்ந்தது என்பதுதான் பலராலும் ஏற்கப்பட்ட கருத்து. அது மத்திய திராவிட மொழி என்று இன்றைய மொழியியலறிஞர்கள் கூறுகின்றனர். உண்மையில் தெலுங்கிலுள்ள அடிப்படைச் சொற்கள், வினைச்சொற்கள், ஒட்டுநிலை அமைப்பு முதலியவற்றை ஆராயும் பொழுது தெலுங்குமொழி திராவிட இனத்தைச் சார்ந்ததாகப் புலப்படும்.

தெலுங்கு மொழியின் வரலாற்றில் கீழ்க்கண்ட முக்கிய காலக் கட்டங்களைக் காணலாம். 1. கி. பி. 1100 வரை பிராகிருத மொழியின் செல்வாக்கு. 2. கி. பி. 1100-1900 வடமொழியின் செல்வாக்கு- 3. பின்னர் ஐரோப்பிய மொழிகளின்—சிறப்பாக ஆங்கிலத்தின்—செல்வாக்கு.

தெலுங்கு நாட்டின் முதல் அரசர்கள் ஆந்திர சாதவாகனர் எனக் கருதப்படுகின்றனர். அவர்கள் கையாண்ட மொழி பிராகிருதம். அம்மொழியில் எழுதப்பட்ட "காதா சப்தசதி"யில் (700 செய்யுட்கள் கொண்ட காப்பியம்) தெலுங்குச் சொற்கள் பல இடம் பெற்றுள்ளன. அம்மன்னர்களின் காலத்திலேயே தெலுங்கு இலக்கியம் தோன்றி

இருக்கலாம். ஆனால் அதற்குத் தக்க சான்றுகளைக் காட்ட இயலவில்லை.

சாதவாகனர்களுக்குப் பின்னர் வந்த மன்னர்களின் காலத்தில் தெலுங்கில் கல்வெட்டுகளும் எழுதப்பட்டன. பழைய தெலுங்குக் கல்வெட்டுக்களில் 'ழ' என்னும் எழுத்தும் இருக்கின்றது. பிற்காலத்தில் அது மறைந்து போய் விட்டது. எனவே 'சோழ' போன்ற சொற்கள் தெலுங்கில் 'சோள, சோட' என்று ஆயின. அதாவது ழகரம் தெலுங்கில் 'ள' கர 'ட'கரமாகத் திரிந்தது.

வடமொழியில் ஐம்பது எழுத்துக்களும், பிராகிருத மொழியில் நாற்பது எழுத்துக்களும் இருந்தாலும், தெலுங்கு மொழியில் முப்பத்தாறு எழுத்துக்கள்மட்டும் இருக்கின்றன. அவை :-அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ ஔ, அம் அஃ, க, க$^{3}$, ச, ச$^{3}$, ஜ, ஜ$^{3}$, ட, ட$^{3}$, ண, த, த$^{3}$, ந, ப, ப$^{3}$, ம, ய, ர,ல, வ, ஸ. ஹ, ள,.வடமொழிச் சொற்கள் சேரச் சேர க$^{2}$, க$^{4}$,ச$^{2}$. ச$^{4}$, போன்ற எழுத்துக்களும் சேர்ந்து இவ்வாறு இன்றைய தெலுங்கு மொழிக்கு ஐம்பத்தைந்து எழுத்துக்கள் உண்டாயின.

தெலுங்கு எழுத்துக்களில் பல்லொலிகளான ச. ஜ என்பவை இருக்கின்றன. இவ்விரண்டு ஒலிகளும் மற்றத் திராவிட மொழிகளிலோ வட மொழிகளிலோ இல்லை.

தெலுங்குச் சொற்களைத் தத்சமம். தத்பவம், தேசியம் கிராமியம் என்ற நான்கு பிரிவுகளாக இலக்கண ஆசிரியர்கள் பிரிப்பர். சமஸ்கிருத, பிராகிருத மொழிகளைச் சார்ந்த சொற்களை அப்படியே எடுத்துக் கொண்டதால் அவை தத்சமமாயின. சான்றுகள்:

| சமஸ்கிருதம் | பிராகிருதம் | தெலுங்கு |
|---|---|---|
| ராம: | —— | ராமுடு (இராமன்) |
| அக்னி | அக்கி | அக்கி (தீ) |
| ஸ்ரீ | சிரி | சிரி(திரு) |

சமஸ்கிருத பிராகிருத மொழிகளிலிருந்து பிறந்த தெலுங்குச் சொற்களைத் தத்பவம் என்பர்.

| சமஸ்கிருதம் | பிராகிருதம் | தெலுங்கு |
|---|---|---|
| ஆகாச: | —— | ஆகஸமு (ஆகாயம்) |
| குட்யம் | —— | கோட (சுவர்) |
| ப்ருதிவீ | புடவி | புடமி (புடவி, பூமி. நிலம்) |

தெலுங்கு நாட்டில் வழக்கிலுள்ள சொற்களுக்குத் தேசியம் என்று பெயர். சான்றுகள்:

| | |
|---|---|
| ஊரு | (ஊர்) |
| இல்லு | (இல், வீடு) |
| தூட | (கன்று) |

தெலுங்கு இலக்கணத்திற்கு மாறுபட்ட சொற்களைக் கிராமியம் என்பர். அதாவது வழக்கிலுள்ள பேச்சுமொழி (கொச்சை மொழி) தான் கிராமியம். இந்தச் சொற்களைப் பழைய இலக்கண நூலாசிரியர்கள் ஒத்துக்கொள்ளா விட்டாலும், இன்றைய தெலுங்கு எழுத்தாளர்களும், புலவர்களும் பலர் பேச்சுமொழி நடையில் நூல்களை அமைக்கின்றனர். பழைய மரபில் எழுதும் எழுத்தாளர்களும் இருக்கின்றனர்; ஆனால் அவர்களது எண்ணிக்கை மிக்க் குறைவு. தெலுங்கு நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள், தெலுங்குப் பேச்சு மொழியில் எழுதப்படுகின்றன. எனவே பேச்சுமொழியை இன்று எல்லோரும் ஒப்புக்கொண்டதாகக் கூறலாம்.

கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் கிடுகு வேங்கட ராமமூர்த்தி என்னும் புலவர் பேச்சுமொழி இயக்கத்தைத் தோற்றுவித்தார். பழைய தெலுங்கு இலக்கியங்களில் பேச்சு மொழியைச் சார்ந்த வழக்குச் சொற்களை எடுத்துக் காட்டி, அவர் தம் இயக்கத்திற்கு வலுவூட்டினார். அவ் வியக்கத்தின் தொடக்கத்தில் பெரும் எதிர்ப்பு இருந்தது. அவரது கொள்கையைப் புலவர்களும் எழுத்தாளர்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. தெலுங்கு நாட்டில் பேச்சுமொழி அந்தந்தப் பகுதிகளில் வெவ்வேறாக இருக்கிறது என்றும், ஆகையால் நடையில் ஒத்த தன்மை இருக்க வேண்டும் என்றும் அவர்கள் கருதினார். இதிலும் ஓரளவு உண்மை

இல்லாமல் இல்லை. அதாவது இராயலசீமையில் (சித்தூர், கடப்பை, கர்நூல், அனந்தபுரம் மாவட்டங்களில் வழங்கப் படும் சில தெலுங்குச் சொற்கள், கிருஷ்ணா கோதாவரி முதலிய மாவட்டங்களில் வாழ்வோர்க்கு எளிதில் விளங்கா. அது போலவே தெலிங்கானாவை (பழைய ஹைதராபாத் மாநிலத்தை)ச் சார்ந்த சில வழக்குச் சொற்கள் மற்றப் பகுதி களில் சிறிது விந்தையாக ஒலிக்கப்படும். எருமை என்னும் தமிழ்ச் சொல்லுக்குத் தெலுங்கு நாட்டில் எனிமு, கேதெ பரீரெ என்னும் சொற்கள் அந்தந்தப் பகுதிகளில் வழங்கப் படுகின்றன. இப்படிப்பட்ட சில வேறுபாடுகள் சில சொற் களில் காணப்பட்டாலும் தெலுங்கு நாட்டில் எந்தப் பகுதியில் பேசினாலும் அது தெலுங்கு மொழிதான்.

இன்றைய தெலுங்கில் வட்டார வழக்குகள் நாளுக்கு நாள் குறைந்த கொண்டே வருகின்றன. விஜயவாடாவில் அச்சிடப்பட்ட தெலுங்கு நாளிதழை எல்லோரும் படித்து அறிந்து கொள்கின்றனர். கடப்பை வானொலி நிலையத்தில் அஞ்சல் செய்யப்படும் தெலுங்கு நிகழ்ச்சிகளை அனை வராலும் அறிந்து கொள்ள முடிகிறது. நாள், வார, மாத இதழ்களும் வானொலி நிலையங்களும், தொலைக்காட்சி நிலையமும் பொதுநிலைப் பேச்சுவழக்குத் தெலுங்கை உருவாக்குகின்றன. தெலுங்கு நாட்டிலுள்ள பல்கலைக்கழ கங்களும் பேச்சு மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன. எனவே, தெலுங்கில் ஒரு நிலையான பேச்சு மொழி விரை வில் உண்டாகி பேச்சு மொழிக்கும் எழுத்துமொழிக்கும் உள்ள வேற்றுமை குறையும் என்று கருதலாம். ★

# 2

# தெலுங்கு இலக்கியம்

நம் நாட்டின் மிகப் பழைய மொழிகளில் தெலுங்கு ஒன்றாயினும், அதன் இலக்கியம் ஆயிரம் ஆண்டுகள் வரலாறு கொண்டது தான். தமிழிலும் கன்னடத்திலும் இயற்றியதைப் போலவே, சமணர் தெலுங்கிலும் சில நூல்கள் இயற்றியுள்ளதாகத் தெரியவருகிறது. ஆனால் அந்நூல்கள் கிடைக்கவில்லை. எனவே தெலுங்கில் மிகப் பழைய இலக்கியம் காண முடியவில்லை. வலிவும் சிறப்பும் பெற்று விளங்குகிற தெலுங்கு இலக்கிய வரலாற்றினைக் கீழ்க்கண்ட ஒன்பது காலக்கட்டங்களாகப் பிரித்து ஆராயலாம் :

1. முக்கவிஞர் காலம்
2. பால்குரிகி சோமநாதரும் சைவக் கவிஞர்களும்
3. ஸ்ரீநாதரின் காலம்
4. ஸ்ரீ கிருஷ்ண தேவராயரின் காலம்
5. வேமன்னாவும் பிற சதகக்கவிஞர்களும்
6. தென்னகத் தெலுங்கு இலக்கியம்
7. சி.பி.பிரவுணும் மற்ற ஐரோப்பியப் புலவர்களும்
8. கந்துகூரி வீரேசலிங்கம் காலம்
9. இக்கால இலக்கியம்

## 1. முக்கவிஞர் காலம்

நன்னய்யா, திக்கன்னா, எர்ரன்னா என்னும் மாபெரும் புலவர்களைக் 'கவித்திரயம்' (முக்கவிஞர்கள்) என்று கூறுவது வழக்கம். பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்த நன்னய்யா முதல் தெலுங்குக் கவிஞர். அவருக்கு முன்னால் கவிஞர்கள் சிலர் வாழ்ந்தனர். கல்வெட்டுக்களில் தெலுங்குச் செய்யுட்கள் இடம் பெற்றுள்ளன. எனினும் அந்நாட்களிலே வாழ்ந்த கவிஞர்களைப் பற்றியும் அவர்கள் படைத்த காப்பியங்களைப் பற்றியும் செய்திகள் அவ்வளவாகத் தெரிய வரவில்லை. தெலுங்கு யாப்புகளில் இயற்றப்பட்டுள்ள பல பாடல்களின் பெயர்கள் மட்டும் தெரிய வருகின்றன. எனவே நன்னய்யாக் கவிஞருக்கு முன்பல பாடல்கள் வழக்கில் இருந்தனவாகக் கூறுவதில்ஐயப்பாடு எதுவும் இல்லை.

வியாசர் வடமொழியில் இயற்றிய மகாபாரதத்தைத் தழுவி நன்னய்யா தெலுங்கில் பாரதம் எழுதத் தொடங்கினார். அவர் மூன்று பருவங்கள் மட்டுமே முடித்தார். மற்றப் பருவங்களைப் பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த திக்கன்னாவும் எர்ரன்னாவும் முடித்து வைத்தனர். இம்மூன்று கவிஞர்களையே முக்கவிஞர் என்பர். இன்றைக்கும் முக்கவிஞர் எழுதிய இந்தப் பாரதத்தைத் தெலுங்குப் புலவர்கள் வேதமாகக் கருதுகின்றனர். அவ்வளவு செல்வாக்கு அவர்களின் படைப்புக்குக் கிட்டியுள்ளது. "கேட்டால் பாரதம் கேட்க வேண்டும், உண்டால் வடை உண்ணவேண்டும்" என்னும் சுவைமிக்க தெலுங்குப் பழமொழி தோன்றுவதற்கு இந்தப் பாரதம் காரணமாயிற்று. (சேலம் மாவட்டத்தில் 'கேட்டால் பாரதம் கேட்கவேண்டும், உண்டால் கரும்பு உண்ண வேண்டும்' என்று இந்தப் பழமொழி வழக்கில் உள்ளது).

நன்னய்யா சிறந்த கவிஞர். பல சாத்திரங்களிலும் வல்லுநர். அத்தகைய வித்தகர் மாபாரதம் போன்ற இதிகாசத்தை அந்நாட்களில் மொழிபெயர்க்க முன்வந்துள்ளது தெலுங்கர்களின் பேறு எனக் கூறலாம். சுவை

படக் கதையினைக் கூறுவதில் அவருக்கு அவரே நிகர் என்றாலும் அது மிகையாகாது.

நாடகப்பாங்கிலே கதையைக் கூறுவதில் திக்கன்னா புகழ் பெற்றவர். அவரது கதாபாத்திரங்கள் நம்முடன் பேசுவதைப்போல் காணப்படும். சிறிய சிறிய சொற்களின் வாயிலாக அவர் சிறந்த கருத்துக்களை வெளிப்படுத்தி யுள்ளார். அவரது தெலுங்குப் பற்று குறிப்பிடத்தக்கது. முழுக்க முழுக்கச் செய்யுள் வடிவிலேயே அவர் உத்தர ராமாயணமும் இயற்றியுள்ளார்.

எர்ரன்னாவும் மிகச்சிறந்த புலவர். வண்ணனை செய்வதில் அவர் காட்டிய திறமை போற்றத்தக்கது. அரவிலாசம், நரசிம்ம புராணம் போன்ற மற்ற இலக்கியச் செல்வங்கள் அவருடைய படைப்புக்களாம்.

வியாசர் அருளிய பாரதத்தைத் தழுவி இந்திய மொழி களில் இயற்றப்பட்டு முழுமையாகக் கிடைத்த பாரதங் களில் முக்கவிஞர் எழுதிய தெலுங்கு பாரதம் முதலாவது எனக் கூறுவது பொருத்தம். தெலுங்கு பாரதம் துல்லிய மான மொழிபெயர்ப்பு அன்று. சில இடங்களில் மூலத்தைச் சுருக்கியும், சில இடங்களில் புதிய செய்திகளைச் சேர்த் தும் முக்கவிஞர்கள் தம் பாரதத்தைப் படைத்துள்ளனர். வியாசபாரதத்திற்குத் தென்னகப்பிரதிகளும் வடநாட்டுப் பிரதிகளும் உள்ளன. இந்தப் பிரதிகளுக்கிடையிலே ஒற்றுமை இல்லை. இவற்றை முக்கவிஞர்கள் பார்த்திருக் கக் கூடுமெனக் கருதப்படுகிறது.

திக்கன்னாவின் கதைப்பாத்திரங்கள் எவ்வண்ணம் உரையாற்றுமென்பதற்குக் கீழ்க்கண்ட செய்யுள் ஒரு எடுத்துக்காட்டாகும்.

திரௌபதி வீமனுடன் கீசகனைப் பற்றிக் கூறும் போது, காட்டிற்குச் செல்லுமுன் குந்தியம்மை சகாதே வனைத் தன்னிடம் ஒப்படைத்தாளெனக் கூறுவாள். குந்தி கூறியதாவது :

"இவன் (சகாதேவன்) மிகச் சிறுவன். ஒன்றும் அறியாதவன், வரும் துன்பத்தை ஊகிக்கும் தன்மை இல்லாதவன். இதயம் மிகவும் மென்மையானது. நான் அழைத்தால் ஒழிய அவனுக்குப் பசியின் வேளையும் தெரியாது. இத்தகைய மகனைவிட்டுப் பிரிவதற்கு என் மனம் துன்பமடைகின்றது; எனினும் உன்னைக் கண்டு ஆறுதல் அடைகின்றது."

என்பதாம். இத்தனைக் கருத்துக்களும் நாலடிகளில் அடங்கியுள்ளன. 'உன்னைக் கண்டு என் மனம் ஆறுதல் அடைகின்றது' என்னும் சொற்றொடர் வாயிலாகத் திரௌபதியின் உயர்ந்த பண்பாட்டைக் கவிஞர் வெளிப்படுத்தியுள்ளார்.

## 2. பால்குரிகி சோமநாதரும் சைவக்கவிஞர்களும்

நன்னய்யாவைப் பின்தொடர்ந்து 13-ஆம் நூற்றாண்டில் தோன்றிய கவிஞர்கள் சைவநெறியைச் சார்ந்தவர்கள். சைவப் புலவர்களில் மிகச் சிறந்தவர் பால்குரிகி சோமநாதர். அவர் கன்னடத்திலும் வடமொழியிலும் சிறந்த புலவர். சமயத்தில் மட்டுமன்றி தெலுங்கு யாப்புகளிலும் மிகவும் பற்றுக் சொண்ட அவர் திவிபத (ஈரடி) என்னும் தெலுங்கு யாப்பில் பசவபுராணம், பண்டிதாராத்திய சரித்திரம் என்னும் பெரும் நூல்களை இயற்றினார். அந்த நூல்களில் தெலுங்கு, தமிழ், கன்னட மாநிலங்களைச் சேர்ந்த சிவனடியார்களைப் பற்றி விளக்கமாகக் கூறியுள்ளார். அறுபத்து மூவர் நாயன்மார்களைப் பற்றித் தெலுங்கு மக்களுக்கு முதன்முறையாகத் தெரியப்படுத்தியவர் சோமநாதரே ஆவார். அவரைப் பின்பற்றிப் பிற்காலத்தில் தெலுங்குக் கவிஞர்கள் சில நாயன்மார்களைப் பற்றி எழுதியுள்ளார்கள்.

12 படலங்களில் குமாரசம்பவம் என்னும் சுவைமிக்க காப்பியத்தை இயற்றிய நன்னிசோடரும் சிறந்த கவிஞர். அவர் தெலுங்குச் சோழர் மரபைச் சார்ந்தவர். அவரது காலத்தைப் பற்றிக் கருத்து வேறுபாடுகள் உள்ளன. 10-ஆம் நூற்றாண்டு முதற்கொண்டு 13-ஆம் நூற்றாண்டு

முடியவுள்ள காலக்கட்டத்தில் இடையில் அவர் வாழ்ந்த தாகக் கருதப்படுகின்றது.

இச்சைவப்புலவர்கள் சிறப்பு மிக்கவர்களாகத் திகழ்ந் தாலும், மற்றச் சமயங்களை இகழ்ந்து கூறும் இவர்கள் பண்பு போற்றத்தக்கது ஆகாது.ஆயினும் தெலுங்கு மொழி யின் பேரில் இவர்கள் வைத்த பற்றும்,எந்த மாநிலத்தையும், மொழியையும் சேர்ந்தாலும் சைவத் தொண்டர்கள் அனை வரும் ஓர் குலத்தைச் சார்ந்தவர்கள் என்னும் இவர்களது பரந்த மனப்பான்மையும் போற்றத்தக்கன.

### 3. ஸ்ரீநாதரின் காலம்

தெலுங்கு இலக்கியத்தில் 15-ஆம் நூற்றாண்டு குறிப் பிடத்தக்கது. இந்த நூற்றாண்டில் ஸ்ரீநாதர், போதன்னா என்னும் இரண்டு மாபெரும் புலவர்கள் தோன்றினார்கள். அவர்களால் தெலுங்கு இலக்கியம் வலிவு பெற்றது. கவியரசர் என்னும் விருதைப் பெற்ற ஸ்ரீநாதர் தெலுங்கிலும் வடமொழியிலும் மிகச்சிறந்த புலவர். அவர் சிருங்கார நைஷதம் (நைடதம்), அரவிலாசம் போன்ற காப்பியங்கள் படைத்தார். புலவர்களுக்கு இவை ஔடதங்கள் போன் றவை. அவர், ‘பல நாடிவீரச் சரித்திரம்’ என்னும் நூலை யும் எழுதியதாகக் கருதப்படுகின்றது. அது மொழிபெயர்ப்பு நூல் அன்று. தெலுங்கு நாட்டில் ஒரு பகுதியைச் (பலநாடு- இன்றைய குண்டூர் மாவட்டம்) சேர்ந்த வீரர்களின் வரலாற்றை அந்தக் காப்பியம் சித்திரிக்கின்றது.

போதன்னா மகாபாகவதம் எழுதியுள்ளார். பிறப்புக் கவிஞரான அவர் ஒரு சிறந்த தொண்டரும் ஆவார். அந் நாட்களில் அரசவைகளில் கவிஞர்களாக இருப்பது மதிப் பிற்குரியதாகக் கருதப்பட்டது. ஆனால் போதன்னா தமக்கு அரசவைக்கவிஞர் என்ற பதவி வாய்த்தும் அதனை ஏற்கா மல் ஏழைப் புலவராகவே காலம் கழித்ததை இலக்கிய வரலாற்றிலேயே ஒரு அபூர்வ நிகழ்ச்சியாகக் குறிப்பிட லாம். அவரது பாகவதம் இன்றைக்கும் பலரால் விரும்பிப் படிக்கப்படுகின்றது. வடமொழியில் இராமாயண, பாரதங்

களுக்கு இருக்கும் செல்வாக்கு பாகவதத்திற்கு இல்லை. ஆனால் தெலுங்கு பாகவதம் ஒரு சிறந்த இலக்கியமாகக் கருதப்படுகின்றது. அதுவே மிகச் சிறந்த தெலுங்கு நூல் என்று எண்ணுவோரும் உள்ளனர். பாகவதத்திற்குப் பெரும்செல்வாக்கைத் தேடித்தந்தவர் போதன்னா என்று ஐயமின்றி கூறலாம்.

## 4. ஸ்ரீகிருஷ்ணதேவராயரின் காலம்

தெலுங்கில், 'பிரபந்தம்' என்னும் காப்பிய வடிவம் மிகச் சிறப்பாக விளங்குகிறது. 16-ஆம் நூற்றாண்டில் பல பிரபந்தங்கள் தோன்றியுள்ளன. எனவே, இந்தக் காலத்தைப் பிரபந்தக்காலம் என்றும் கூறுவது வழக்கம். எனினும் பிரபந்தங்கள் எழுதிய பெரும் புலவர்களை ஆதரித்துத் தாமும் ஒரு புலவராகத் திகழ்ந்த ஸ்ரீ கிருஷ்ண தேவராயரின் பேரில் இந்தக் காலத்தை அழைப்பது பொருத்தமாக இருக்கும்.

கிருஷ்ணதேவராயரின் தாய்மொழி கன்னடமாக இருந்தும், அவர் தெலுங்கில் மிகச் சிறந்த புலமையைப் பெற்றுள்ளார். அவரது தெலுங்குப் பற்று மிகவும் போற்றத்தக்கது. நாட்டு மொழிகளில் தெலுங்கு மொழி சிறந்தது (தேசபாஷ லந்து தெலுகு லெச்ச)என்று கூறியவர் அம்மன்னரே. சூடிக்கொடுத்த நாச்சியாரான ஆண்டாள் திருக்கதையைச் சுவைபட ஆமுக்தமால்யதா என்னும் காப்பியமாகச் சித்திரித்துள்ளார். கன்னடத்தைத் தாய் மொழியாகக் கொண்ட ஒரு கவிஞர் தமிழ் நாட்டைச் சேர்ந்த பெண்பால் புலவரைப்பற்றித் தெலுங்கில் சிறந்த காப்பியம் தீட்டித் தேசிய ஒருமைப்பாட்டிற்கு வழிகாட்டினார் என்று அவரைக் கூறுவது மிகையாகாது. தமிழிலேயோ, தெலுங்கிலேயோ ஆண்டாளைப் பற்றி எழுந்த காப்பியங்களுள் முதல் காப்பியம் இதுதான்.

கிருஷ்ணதேவராயரின் அவையில் அல்லசானி பெத்தன்னா, முக்குதிமன்ன போன்ற மாபெரும் கவிஞர்கள் இருந்தனர். அவர்களை அஷ்ட திக்கஜங்கள் (எட்டு திக்கு

களுக்கும் எட்டுயானைகள் போன்ற கவிஞர்கள்) என்று அழைப்பார்கள்.

அந்தக் காலத்திலேயே பிங்கலி சூரன்னா என்னும் கவிஞர் வாழ்ந்தார். அவர் தூய தெலுங்கு எனப்படும் 'அச்ச தெலுகு' வில் முதன்முதலாக ஒரு காவியம் படைத்தார்.

தமிழ் மக்களுக்கு விகடகவியாக அறிமுகமான தெனாலி ராமலிங்கக் கவிஞர் அந்தக்காலத்தில் வாழ்ந்த பெரும் புலவர்களில் ஒருவர். உண்மையில் அவர் விகடகவி அல்லர். அவர் இயற்றிய பாண்டுரங்க மகாத்மியம் என்னும் காப்பியம் பெருங்காப்பியமாகக் கருதப்படுகிறது. தெலுங்கு ஐம்பெரும் காப்பியங்களில் இஃது ஒன்று.

## 5. வேமன்னாவும் பிற சதகக் கவிஞர்களும்

தெலுங்கு இலக்கியத்தில் நூற்றுக்கணக்கான சதகங்கள் தோன்றியுள்ளன. இன்றைக்கும் இந்த இலக்கிய வகையில் எத்தனையோ நூல்கள் வெளிவருகின்றன. எனவே இந்த இலக்கிய வகை தெலுங்கு மக்களை மிகவும் கவர்ந்த ஒன்றாகும்.

சதகத்தில் நூறு செய்யுட்கள் இருக்க வேண்டும். ஒவ்வொரு செய்யுளிலும் 'மகுடம்' அமைந்து இருக்க வேண்டும். தெலுங்குச் சதகங்களில் பக்தி, சிருங்காரம், நீதி, வேதாந்தம் போன்ற பல நெறிகள் காணப்படுகின்றன.

17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வேமன்னா, சதகம் என்னும் வகையில் நூல் எழுதவில்லை. ஆயினும் அவர் நூற்றுக்கணக்கான செய்யுட்கள் பாடியுள்ளார். அவை அனைத்திற்கும் 'விசுவதாபி ராவ வினுரவேம' என்னும் மகுடம் பொதுவாக அமைந்துள்ளது. ஆதலின் அவரைச் சதகப் புலவராகக் கருதுகின்றனர். அவரது பெயர் தெரியாத தெலுங்குக் குடிமகன் இருக்கமாட்டான். வேமன்னா செய்யுட்கள் தமிழ், ஆங்கிலம், வடமொழி

போன்ற பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. 1892-ஆம் ஆண்டிலேயே வேமன்னா செய்யுட்களின் தமிழாக்கம் ஒன்று வெளிவந்துள்ளது.

வேமன்னா மனிதாபிமானம் கொண்ட மக்கள் கவிஞர். சமுதாயத்தில் காணப்பட்ட கெட்ட பழக்கவழக்கங்களைக் கடுமையாகவே சாடினார். 'வேமன்னா பத்தியங்கள் வெடி குண்டுகளைப் போன்றவை' என்று அறிஞர் அண்ணா அவர்கள் கூறியது மிகவும் பொருத்தமானது. எடுத்துக் காட்டாக அவரது இரண்டு மூன்று செய்யுட்களின் பொருளைப் பார்ப்போம்:

"அன்னையை அறியாதவன் கடவுளையும் அறியான்;
மண்ணுலகத்தை அறியாதவன் விண்ணுலகத்தை
அறியான்;
மண்ணையும் விண்ணையும் அறியாதவன்
தன்னையும் அறியான்."

"பாற்கடலில் பள்ளிகொண்ட பெருமாள்
ஆயன் பாலுக்காக ஏன் ஆசை கொண்டான்?
அண்டை வீட்டான் பொருள் இனியதல்லவோ?".

"கல்லில் உருவம் செதுக்கி அதனைக்
கோவிலில் வைத்து
மனிதன் பூசைகள் புரிகின்றான்;
இறைவன் தன்னுள் இருக்கின்றான் என
அவன் அறியான்."

"குண்ட'யை (பானையை) கும்ப மென்பார்
(வடமொழியில்)
'கொண்ட'யை (குன்று) பருவத மென்பார்;
உப்பினை லவண மென்பார்.
இவை ஒன்றல்லவோ?

மொழிகள் வெவ்வேறாயினும் உட்கருத்து ஒன்றுதானே!

வேமன்னாவுக்கு முன்னால்,—அதாவது 12-ஆம் நூற்றாண்டிலேயே தெலுங்கில் சதகம் தோன்றியது. விருஷாதிப சதகம், சுமதி சதகம் மற்றும் குறிப்பிடத்தக்க பல சதகங்கள் தோன்றியுள்ளன. பத்தென்னா என்பவர்

எழுதிய சுமதி சதகத்தை எழுமூர் சமரபுரி முதலியார் தமிழில் மொழிபெயர்த்து அதனை **1903**-இல் வெளியிட்டார்.

''தான் உண்ணாமலும் பிறருக்குக் கொடுக்காமலும் சேர்த்து வைப்பவனுடைய பணம் கடைசியில் அரசனுக்கோ திருடர்களுக்கோ போய்ச் சேருகிறது. அது எப்படியென்றால் தேனீக்கள் சேமிக்கும்தேன் கடைசியில் யாருக்கோ போய்ச் சேருகிறது.''

இவ்வாறு அருமையான கருத்துக்கள் எத்தனையோ சுமதி சதகத்தில் இடம் பெற்றுள்ளன.

## 6. தென்னகத் தெலுங்கு இலக்கியம்

விசயநகரப்பேரரசு வீழ்ந்த பின்னர், தென்னகத்தில் உள்ள மதுரை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மைசூர் போன்ற பல இடங்களில் உள்ள அரசர்கள் தெலுங்கு இலக்கியத்தைப் பேணிக் காத்தனர். எனவே, அவர்கள் காலத்தில் தோன்றிய இலக்கியம் தென்னகத் தெலுங்கு இலக்கியம் என அழைக்கப்படுகின்றது. **16, 17**-ஆம் நூற்றாண்டுகளில் பல தெலுங்குக் குடும்பங்கள் தமிழகத்தில் மதுரை, தஞ்சை போன்ற பல இடங்களில் குடியேறின. அவர்களின் பின்னோர் தமிழகத்தையே தம் தாயகமாகக் கருதியுள்ளார்கள். தமிழ்நாட்டில் வாழும் சிறுபான்மையர்களில் பெரும்பான்மையோர் தெலுங்கு பேசும் மக்களே ஆவர்.

பல காரணங்களைக் கொண்டு, தென்னகத் தெலுங்கு இலக்கியம் சிறப்பு மிக்கது. தென்னகத்தில் தெலுங்கு இலக்கியம் வளர்ந்த காலத்தில்தான் முதன் முறையாகத் தெலுங்கில் உரைநடை நூல்கள் எழுதப்பட்டன. மதுரையை ஆண்ட விசுவநாத நாயக்கரின் ஒரு அலுவலர், 'ராய வாசகம்' என்னும் உரைநடை நூலினை எழுதினார். தெலுங்கு யாப்புகளில் நூல்கள் பல இயற்றப்பட்டன. பல யக்ஷகான நூல்கள் வெளிவந்தன.பெண்பால் புலவர்கள் பலர் எழுத்துத்துறையில் ஈடுபட்டனர். வெவ்வேறு இனங்

களைச் சேர்ந்த பலர் காப்பியங்கள் இயற்றியுள்ளார்கள். சில புலவர்கள் பேச்சுத் தெலுங்கைச் சேர்ந்த சொற்களைக் கையாண்டார்கள். அரசர்களின் வரலாறுகளுக்குக் காப்பிய வடிவம் (நாயகாப்யுதயம்) கொடுக்கப்பட்டது. மதுரை, தஞ்சாவூர் மட்டுமன்றி, புதுக்கோட்டை, செஞ்சி, துறையூர் போன்ற பல இடங்களிலும் தெலுங்கு இலக்கியம் சிறப்பாக வளர்ந்தது. நாயக்கர்களுக்குப் பின் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களும் தெலுங்கு இலக்கியத்தைப் பேணிக்காத்தனர். தஞ்சையிலுள்ள சரசுவதிமகால் நூலகத்தில் தென்னகத்தில் தோன்றிய பல தெலுங்கு நூல்கள் இருக்கின்றன.

தென்னகத் தெலுங்கு இலக்கியம் சிறப்புமிக்கதாயினும் அந்நாட்களில் சுவைமிக்க காப்பியங்கள் பெருமளவில் வரவில்லை. அந்தக் காப்பியங்களிலும், காமச்சுவை அதிகமாக இருப்பதால், தென்னகத் தெலுங்கு இலக்கியம் இலக்கிய வரலாற்றில் தளர்ச்சிக் காலம் என்று சிலர் கூறுவர். ஆயினும் சிறந்த இராமபக்தரும், மிகச்சிறந்த இசைப்பாடலாசிரியருமான தியாகராசர் (1767-1847) வாழ்ந்ததால், அக்காலத்திற்கு ஒரு தனிப் பெருமை ஏற்பட்டது. இராமபிரானைப் பற்றிப் பாடியவர்களில் அவர் தான் முன்னோடியாக இருக்கின்றார். அவரது கீர்த்தனைகளில் அக்காலத்துச் சமூகத்தை நாம் காணலாம். மனதை அடக்கிக்கொள்ள வேண்டியதின் அவசியத்தை அவர் பல கீர்த்தனைகளில் திட்டவட்டமாகக் கூறியுள்ளார். தன் காலத்தில் இருந்த தீயொழுக்கங்களை அவர் சாடியுள்ளார். சில சான்றுகள் :

"மனம் தன்வசத்தில் இருப்பவனுக்கு
மந்திரங்களும் தந்திரங்களும் எதற்கு?"

"மனதை அடக்கிக் கொள்ளாவிடில்
இனிய ஒலியும் பூக்களும் கொண்ட பூசை என்ன
செய்யும்?"

"தீயொழுக்கமுள்ளவன் மூழ்கினாலும்
காவேரியும் கங்கையும் அவனை எவ்வாறு
காப்பாற்றும்?"

இத்தகைய தியாகராசரின் கீர்த்தனைகளால் தெலுங்கு மொழி அண்டை மாநிலங்களுக்கும் பரவியது.

## 7. சி.பி.பிரவுனும் மற்ற ஐரோப்பியப் புலவர்களும்

நாளடைவில் இலக்கிய ஆர்வம் கொண்ட ஜமீன்தார்களும், செல்வந்தர்களும் தெலுங்கு இலக்கியத்தை ஆதரித்தனர். அந்தக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் சிறந்தவர்கள் அல்லர். எனவே அவர்களின் எழுத்துக்களில் சிறப்புத் தன்மைகள் காணமுடியாது. அது தளர்ச்சிக் காலம் என்று கூறுவதே பொருத்தம். ஆயினும், கங்கன்டி பாப்பராஜு, கூசிமன்சி திம்மகவி போன்ற சில பெரும் புலவர்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். அச்ச தெலுகுவில் திம்மகவி இராமாயணக் காப்பியம் எழுதியுள்ளார்.

பின்னர் நம்நாட்டில் கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரத்தைக் கைப்பற்றியது. அதனுடன் கிறித்துவப் பாதிரிமார்களும், வியாபாரிகளும், சிவிலியன் அதிகாரிகளும் நம் நாட்டில் பல பகுதிகளில் வாழத் தொடங்கினர். அவ்வண்ணம் தெலுங்கு நாட்டில் குடியேறிய சிவிலியன் அதிகாரிகளுள் சி.பி. பிரவுன், ஜே.சி. மாரிஸ், ஏ. எச். ஆர்டென் முதலியோர் குறிப்பிடத்தக்கவர். அந்த மேல் நாட்டறிஞர்கள் தெலுங்கில் தரமான நிகண்டுகள், இலக்கண நூல்கள், தெலுங்கிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்ப்புகள் முதலியவற்றை எழுதுவதில் ஈடுபட்டார்கள்.

தெலுங்கு மொழிக்கு சி.பி.பிரவுன் (1798—1884) புரிந்த தொண்டு பாராட்டுதற்குரியது. அவர் தமது சொந்தப் பணத்தைச் செலவழித்துப் பல இடங்களில் இருந்து கையெழுத்துப் பிரதிகள் சேகரித்து, புலவர்களின் உதவியுடன் அவற்றை நன்றாக முறைப்படுத்தி அச்சிட்டார். இவ்வாறு செம்மையான பதிப்புகள் தோன்றுவதற்கு அவர் வழிகாட்டியாக இருந்தார். சில காப்பியங்களுக்குச் சிறந்த உரைநூல்களை எழுத வைத்தார். அவர் வாழ்ந்த இல்லத்தை அந்நாட்களில் பிரவுன் கல்லூரி என்று அழைத்தனர். தெலுங்கு இலக்கியத்தை விஞ்ஞான முறை

யில் ஆராய்வதற்கு அவர்தான் வழிகாட்டியுள்ளார். அவர் இல்லாவிடில் எத்தனையோ தெலுங்கு நூல்கள் மறைந்திருக்கக்கூடும்.

வேமன்னா செய்யுட்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்ததுடன், அவர் ஆங்கிலம்—தெலுங்கு நிகண்டு (1852), தெலுங்கு—ஆங்கிலம் நிகண்டு (1852), கலப்பு மொழிகளின் நிகண்டு[1] முதலியவற்றைத் தொகுத்து வெளியிட்டார். "நான் இந்தப் பணிகளில் ஈடுபடும் பொழுது தெலுங்கு இலக்கியம் மரண நிலையில் இருந்தது" என்று அவர் கூறி இருப்பது முழுக்க முழுக்க உண்மை. அவர் ஆற்றிய தொண்டு எழுத்திற்கு அப்பாற்பட்டது.

### 8 கந்துகூரி வீரேசலிங்கம் காலம்

மேல் நாட்டு இலக்கியத்துடன் உறவு ஏற்பட்டதால்' நம் நாட்டின் இலக்கியங்களுக்குப் புதியதோர் ஒளி உண்டாயிற்று. இந்த உறவினால் தெலுங்கில் புதிய இலக்கியம் தோன்றியது. அதனுடன் பல புதிய இலக்கியவகைகளும் தோன்றின. புதிய இலக்கியம் தோன்றுவதற்கு நாட்டில் ஏற்பட்ட சமூக, கலாச்சார இலக்கியத்துறைகளில் ஏற்பட்ட பல மாறுதல்களும் மிகவும் உதவியாக இருந்தன. கந்துகூரி வீரேசலிங்கம் பந்துலு (1848-1910) அவர்கள் அம்மாறுதல்களை நன்குணர்ந்து அவற்றிக்கேற்பப் புதிய தெலுங்கு இலக்கியத்திற்கு ஒரு செம்மையான வழி வகுத்தார்.

அவருடைய காலத்தில் சின்னயசூரி (1809-1862), வேதம் வேங்கடராய சாஸ்திரி (1853-1929), குரஜாடா அப்பாராவ் (1886-1950) போன்ற சிறந்த புலவர்கள் வாழ்ந்தனர். சூரி புகழ் பெற்ற இலக்கண ஆசிரியர். அவர் நல்ல தெலுங்கில் சிறந்த உரைநடை நூல்கள் எழுதியுள்ளார். வேங்கடராய சாஸ்திரி சிறந்த திறனாய்வாளர், ஆய்வுப் புலவர், மொழிபெயர்ப்பாளரும் கூட. தெலுங்குக் கவிதை

1. Mixed Dictionary

யில் புதுமையைத் தோற்றுவித்த கவிஞராகக் குரஜாடா கருதப்படுகின்றார்.

முதல் புதிய தெலுங்குக் கவிஞர் யார் என்பதனைப் பற்றிச் சில கருத்து வேறுபாடுகள் இருப்பினும் குரஜாடா வைப் புத்தம் புதிய கவிஞராகக் கருதுவது பொருத்தமாக இருக்கும். அவரைச் சிலர் 'குரஜாட வால்மீகி' என்றும் அழைப்பதுண்டு. 'தேச பக்தி' என்னும் தமது அருமை யான பாடலில் அவர் 'தேசமன்டே மட்டிகாதோய், தேசமன்டே மனுஷுலோய்' என்று கூறியுள்ளார். 'நாடென்றால் மண்ணல்ல; மனிதர்கள்' என்று இதற்குப் பொருள். நாட்டிற்கு இப்படிப்பட்ட ஒரு புது இலக்கணத்தை முதன் முதலில் கூறியவர் அவரே ஆவார். எனவே இலக்கியத்திற்கு ஒரு புதுநோக்கு—அதாவது மக்கள் நோக்கு—அளித்தவரும் அவரே ஆவார். முழுக்க முழுக்கப் பேச்சுமொழியில் கன்யாசுல்கம் (பெண் தட்சிணை) (1896) என்னும் சிறந்த நாடகத்தை அவர் இயற்றியுள்ளார். கவிதையிலும் நாடகத் துறையிலும் வழி காட்டிய குரஜாடா தெலுங்குச் சிறுகதைத் தந்தையாவும் கருதப்படுகின்றார்.

புதிய தெலுங்கு இலக்கியத்தின் தந்தையாக வீரேச லிங்கம் போற்றப் படுகிறார். அவர் பெரும் புலவர், சிறந்த நாடகாசிரியர், நாவலாசிரியர், இலக்கிய வரலாற்று ஆசிரியர், கட்டுரையாளர், மொழிபெயர்ப்பாளர். சுருக்க மாகக் கூறினால், அவரது கை படாத இலக்கிய வகைகள் இல்லையெனலாம். அவர், நூற்றுக்கும் மேற்பட்ட நூல் கள் எழுதியுள்ளார். அவரது ராஜசேகர சரித்திரம் தெலுங்கில் முதன் முதலாகத் தோன்றிய புதினம். அவரது ஆந்திர கவுல (கவிஞர்களின்) சரித்திரம் (1887) சிறந்த இலக்கிய வரலாற்று நூல். அவரது கையில் எழுத்து ஒரு ஆயுதமகாவே விளங்கிற்று. சமூக நலத்திற்கு இலக்கியத் தைப் பயன்படுத்திய மேதை அவர். விஞ்ஞான நூல்களை யும் அவர் இயற்றியுள்ளார். வீரேசலிங்கம் சிறந்த சீர் திருத்தவாதியும் ஆவார். அவரை ஒரு பாத்திரமாக ஆக்கிப் பாரதியார் சந்திரிகையின் கதை என்னும் புதினம் படைத்

துள்ளார். பெரும் எழுத்தாளரையும் சிறந்த சீர்திருத்த வாதியையும் நாம் கந்துகூரி இலக்கியத்தில் நோக்கலாம்.

இக்கால இலக்கியத்தைப்பற்றிக் கூறுவதற்கு முன் சிறந்த புலவர்களும் சதாவதானிகளுமான திருப்பதி வேங்கடகவுலு (திருப்பதி சாஸ்திரி வேங்கட சாஸ்திரி) என்னும் இரட்டைப் புலவர்களைப் பற்றிக் கூறுவது அவசியம். அந்த இரட்டைப் புலவர்களின் அவதானங்களி னால் ஜமீன்தார்கள் மற்றும் செல்வந்தர் வீடுகளில் சிக்கிக் கொண்டு தவித்த தெலுங்குக் கவிதை பாமரமக்களின் இடத் திற்கு வந்துள்ளது. அவர்களுக்கு முன்னால் தோன்றிய தெலுங்குக் கவிதைநடை கொஞ்சம் கடினமாகவே இருந் தது. ஆனால்அந்த இரட்டைப் புலவர்கள் எளிய நடையில் நூல்கள் எழுதி, தெலுங்கு மக்களிடையில் கவிதைப்பற்று ஏற்படச் செய்தனர். திருப்பதி வேங்கட கவிஞர்களின் நடை பழைய நடைக்குப் பரத வாக்யமும், புதிய நடைக்கு நாந்தி யும் என்று ஒரு திறனாய்வாளர் கூறியுள்ளார்.

## 9. இக்கால இலக்கியம்

### கவிதை

இக்காலத் தெலுங்கு இலக்கியத்தில் மரபுக்கவிதையே யன்றியும் புதுக்கவிதை, நாடகம், சிறுகதை, புதினம், இலக்கியத்திறனாய்வு, கட்டுரை, தன் வரலாறு போன்ற பல இலக்கிய வகைகளும் வளம் பெற்று இருக்கின்றன.

கவிதை வகையிலே பல புதிய செய்முறைகள் செய்யப் பட்டுள்ளன. கவிஞர்களிடையே ஓர் எதிர்ப்புத்தன்மை காணப்படுகின்றது. உதாரணமாக மரபுக்கவிதை எழுது வோர்க்கு எதிராக 'பாவ கவுலு' கவிதைகள் படைத்தனர். அதுபோலவே முற்போக்குக் கவிஞர்கள் பாவகவுலு படைத்த கவிதைகளுக்கு எதிராக எழுதியுள்ளனர். இன்று திகம்பரக் கவிஞர்கள், புரட்சிக்கவிஞர்கள் முதலியோர் புதிய கவிதைகளைப் படைக்கின்றனர். தற்போது உரை நடைக்கவிதை[2] மிகவும் செல்வாக்கு அடைந்துள்ளது.

1. Romanticists 2. Free-verse

மரபுக்கவிதையை பின்பற்றியவர்களில் சிலரும் உரை நடைக்கவிதையை ஆதரித்து வருகின்றனர். துணுக்குக் கவிதைகளும்[1] இடம் பெற்று உள்ளன. எனினும் மரபுக் கவிதையில் எழுதப்பட்ட பெருங்காப்பியங்களும் தோன்று கின்றன. பாரதீய ஞானபீடம் விருது பெற்ற இராமாயண கல்ப விருட்சம் என்னும் சிறந்த காப்பியம் இங்குக் குறிப் பிடத்தக்கது. இதனை எழுதியவர் விசுவநாத சத்திய நாராயணா அவர்கள். குரஜாடா, ராயப்புரோலு சுப்பாராவ், தேவுலபல்லி கிருஷ்ண சாஸ்திரி, ஸ்ரீஸ்ரீபோன்ற பல கவிஞர் களின் சிறந்த படைப்புகளால் கவிதை வகை வளம் பெற்று விளங்கிற்று.

### நாடகம்:

குரஜாடாவிற்குப் பிறகு தெலுங்கில் பல முழுநீள நாடகங்களும், ஓரங்க நாடகங்களும் வெளிவந்துள்ளன. பி. வி. ராசமன்னார் எழுதிய தப்பெவரிதி (1929) (குற்றம் யாருடையது!) என்னும் நாடகத்தை இக்காலத் தெலுங்கு நாடகத்திற்கு வழிகாட்டியாகக் கருதலாம். ராசமன்னார், வி. ஆர். நார்லா, ஆசாரிய ஆத்ரேயா முதலிய பலர் சிறப்பு மிக்க ஓரங்க நாடகங்கள் எழுதியுள்ளனர் சுவைமிக்க பாடல் நாட்கங்கள்[2] எழுதியுள்ளவர்களில். சிவசங்கர சாஸ்திரி, கிருஷ்ண சாஸ்திரி குறிப்பிடத்தக்கவர்கள்.

பழைய எழுத்தாளர்களில் தர்மவரம் ராமகிருஷ்ண மாச்சார்யுலு போன்றோரைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். தெலுங்கு நாடகத்தின் தந்தை எனக் கருதப்படும் தர்மவரம் அவர்கள் 28 முழுநீள நாடகங்கள் எழுதியுள்ளார். தமிழ் நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியார் அவர்களுக்குத் தர்மவரம் அவர்கள் வழிகாட்டியாக இருந்தார்.

### சிறுகதை:

தெலுங்கில் 'பேதராசி பெத்தமா கதலு' (ஏழைப் பாட்டி யின் கதைகள்) போன்றவை எத்தனையோ இருந்தாலும் குரஜாடா எழுதிய கதைகள்தான் புதிய சிறுகதைகளாகக்

1. Mini-Poetry 2. Lyrical Plays

கருதப்படுகின்றன. சமூகப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு அவர் கதை எழுதினார். பின்னர் சலம், கோபி சந்த், புச்சிபாபு, குடும்பராவ், விசுவநாத சாஸ்திரி போன்ற வர்கள் அருமையான கதைகள் எத்தனையோ எழுதியுள் ளார்கள். சிறந்த நாவலாசிரியரும் புகழ்பெற்ற சிறு கதையாசிரியருமான பாலகும்மி பத்மராஜு அவர்கள் எழுதிய காலிவான (புயல்) என்ற கதைக்கு 1951-இல் நியூயார்க் ஹெரால்டு டிரிபியூன் பத்திரிகை நடத்திய சர்வதேசச் சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு கிட்டி யுள்ளது.

## புதினம் (நாவல்)

இன்று பெரும்பான்மையான வாசகர்கள் விரும்பிப்படிக் கும் இலக்கியவகை புதினம். புதினம் தெலுங்கில், 'நவலா' என்று அழைக்கப்படுகிறது. தெலுங்கு வார இதழ்கள் அனைத்துமே புதினப் போட்டிகள் நடத்துகின்றன. இக்காலத் தெலுங்கு நாவலாசிரியர்களில் பெண்பால் எழுத்தாளர்கள் பலர் இருக்கின்றனர். மற்றொரு சிறப்பு என்னவென்றால் தெலுங்குப் புலவர்களும் பல சிறந்த புதினங்களை எழுதி இந்தத் துறை வலிவுபெற முயன்ற றனர். கோபிசந்த், குடும்பராவ், புச்சிபாபு, லதா, மாலதி சந்தூர், ராமலஷ்மி, சீதாதேவி போன்ற பல நாவலாசிரியர் கள் சிறப்புமிக்க புதினங்கள் படைத்துள்ளார்கள்.

இவ்வாறே இலக்கியத்திறனாய்வு, குழந்தை இலக்கியம் முதலிய வகைகளிலும் சிறந்த புத்தகங்கள் பல வெளிவந் துள்ளன.

## முடிவுரை,

பழைய தெலுங்கு இலக்கியமும் புதிய தெலுங்கு இலக்கியமும் சிறப்புமிக்க வகையில் அமைந்துள்ளன. தெலுங்கு திராவிடமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தாலும், அதன் பழைய இலக்கியம் வட மொழி இலக்கியத்தைப் பின்பற்றி வளர்ந்துள்ளது. எனவே திராவிட, வடமொழி அம்சங்களைத் தெலுங்கு இலக்கியத்தில் காணமுடியும். வடமொழி இலக்கியத்தில் இருக்கும் அத்தனை சிறந்த

நூல்களும் தெலுங்கில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. வட மொழி தெரியாவிடினும், அம்மொழி இலக்கியச் செல்வங் களைத் தெலுங்கின் வாயிலாகப் படித்து அறிந்துகொள்ளலா மென ஐயமின்றிக் கூறலாம். ஓர் எடுத்துக்காட்டு. காளி தாசக் கவிப்பெருமானின் சாகுந்தல நாடகத்திற்குத் தெலுங்கில் 25—க்கு மேற்பட்ட மொழிபெயர்ப்புகள் வந்துள்ளன.

பிற இந்திய மொழிகளைப் போலவே, தெலுங்கும் மேல் நாட்டு இலக்கியத்தைச் சேர்ந்த பல இலக்கிய வகைகளை ஏற்றுக்கொண்டு வலிமை பெற்றுள்ளது. தெலுங்கு எழுத்தாளர்கள் பல மொழிகளிலிருந்து சிறந்த நூல்களை மொழிபெயர்த்துக்கொண்டனர். தமிழிலிருந்து திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், பாரதியாரின் சில படைப்புகள் முதலியவை தெலுங்கில் மொழிபெயர்க்கப் பட்டன. தெலுங்கிற்கும் தமிழுக்கும் இருக்கும் தொடர் பினை வைத்துப் பார்க்கும்பொழுது, இன்னும் பல தமிழ் நூல்களைத் தெலுங்கில் மொழிபெயர்க்க வேண்டும் எனக் கருதுவது பொருத்தம். அவ்வண்ணமே தெலுங்கு இலக்கியப் படைப்புகளும் தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டும். அப்போதுதான் தெலுங்கு—தமிழ்ப் பழைய தொடர்புகள் இன்னும் வலிவடையும்.

இக்காலத் தெலுங்குக் கவிதை மிகவும் பரந்து காணப் படுகின்றது. மரபுக் கவிதையுடன் முற்போக்குக் கவிதை, புரட்சிக்கவிதை முதலியவையும் தலை நிமிர்ந்து விளங்கு கின்றன. கவிதை வளர்ந்த அளவிற்குப் புதினம் போன்ற புதிய இலக்கிய வகைகள் வளரவில்லை என்று கூறலாம். பழையதுதான் சிறந்தது - எனும் மனப்பான்மை அகல வேண்டும். மக்கள் நோக்குடன் இலக்கியத்தை ஆராயும் ஆர்வம் இன்னும் வளர வேண்டும்.

குரஜாடாக்கவிஞர் கூறியதைப்போல, நாடென்றால் மனிதர்கள் எனும் உண்மையை எழுத்தாளர்கள் வலியுறுத்த வேண்டும். மக்களுக்குப் பயன்படும் இலக்கியப் படைப்புகள் பெருக வேண்டும். இக்காலத் தெலுங்கு இலக்கியம் மக்கள் இலக்கியமாக மலர்கின்றதெனக் கூறலாம். ★

# 3

# தமிழ் தெலுங்கு காப்பியங்களில் ஒற்றுமை-ஒப்பீடு

தேனுரைத் தமிழைப் போலவே, தெலுங்கும் ஓர் இனிய மொழி. இவ்விரண்டும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை. எனவே தமிழ் தெலுங்கு மொழிக் காப்பியங்களில் ஒற்றுமை காண்பதில் வியப்பில்லை.

தமிழ் மறை என்று கூறப்படும் திருக்குறள் ஒரு தலைசிறந்த நீதி நூல். இதில் குறிப்பிட்டுள்ள சில கருத்துக்கள் தெலுங்கு இலக்கியத்திலும் இடம் பெற்றுள்ளன.

திருவள்ளுவர்,

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை

என்று இல்வாழ்வானைப் பற்றிக் கூறியது அனைவரும் அறிந்ததே. இந்தக் கருத்தினை அனந்தாமாத்தியர் என்னும் தெலுங்குக் கவிஞர்,

''கிரஹஸ்தாஸ்சிரமமுவாடே வெலய ஊத்த''

என்று குறிப்பிட்டுள்ளார். துணை என்னும் சொல்லும், 'ஊத்த' என்னும் சொல்லும் ஒரே பொருளைத் தெரிவிப்பன என்பது இங்கே குறிப்பிடத்தக்க ஒன்றாகும். நன்னய்யா, பெத்தன்னா போன்ற கவிஞர்களும் மனித வாழ்க்கையில் இல்வாழ்க்கை மிகவும் சிறந்ததெனக் கருதினர்,

'கொல்லாமை' பற்றிக் கூறும்போது, வள்ளுவர் பெருமான் அது மிகச் சிறந்தது என்றும் அதற்குப் பின்னரே பொய்யாமையைக் குறிப்பிட வேண்டுமென்றும் கருதியுள்ளார்.

தெலுங்குக் கவிஞர்களும் இந்தக் கருத்தினை ஏற்றுக் கொண்டுள்ளனர். எல்லாத் தருமங்களிலும் கொல்லாமை தலைசிறந்தது எனத் திக்கன்னா குறிப்பிடுவதை நாம் காணலாம்.

'அறிவுடைமை' என்னும் அதிகாரத்தில் வள்ளுவர்,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்று கூறியுள்ளார்.

எப்பொருளை யாரிடம் கேட்டாலும், அப்பொருளின் உண்மையான கருத்தினைக் காண்பதே அறிவாகும் என்று திருவள்ளுவர் கூற, பத்தென்னா என்னும் ஒரு தெலுங்குக் கவிஞர்,

"யார் எதைச் சொன்னாலும் அதனைச் செவ்வையாகக் கேட்டு, அவசரப்படாமல் அந்தப் பொருளின் உண்மையை நன்கு அறிந்தவனே மிகச் சிறந்த நீதிமான் ஆவான்" என்று குறிப்பிட்டுள்ளார்.

"வினதகு னெவ்வரு செப்பின
வினினந்தனெ வேகபடக விவரிம்பதகுன்
கனி கல்ல நிஜமு தெலிசின
மனுஜுடெ போ நீதிபருடு மஹிலோ சுமதீ"
(சுமதி சதகம்)

துன்பமானவை என்று ஒருவன் தன் வாழ்க்கையில் தெரிந்து கொண்டவற்றை அவன் மற்றவர்களுக்குச் செய்யக்கூடாது—என்று வள்ளுவர் 'இன்னா செய்யாமை' என்னும் அதிகாரத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

திக்கன்னாவும் இந்தக் கருத்தினை மிக அழகாகக் கூறியுள்ளார். அது மட்டுமின்றி, அவர் இந்தச் சிறந்த

பண்பு எல்லா நெறிகளிலும் தலை சிறந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்மறையினைத் தெலுங்குக் கவிஞர்கள் பலர் மொழி பெயர்த்துள்ளனர். முதல் தெலுங்கு மொழிபெயர்ப்பு (அறத்துப்பால்) ஆயிரத்து எண்ணூற்று எண்பத்தேழாம் ஆண்டில் வெளிவந்துள்ளது.

சங்க இலக்கியத்தில் கரிகால் சோழனைப் பற்றிப் பல செய்திகள் நமககுக் கிடைத்திருக்கின்றன. ஆயினும் அவன் காவிரிக்குக் கரை கட்டியதைப் பற்றி அவ்வளவு தெளிவாகத் தெரியவரவில்லை.

தெலுங்கு இலக்கியத்தில் இந்தச் செய்தி மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 'குமாரசம்பவம்' என்னும் காப்பியம் இயற்றிய நன்னிசோழன், தான் கரிகால் சோழன் வம்சத்தைச் சேர்ந்தவன் என்று கூறிக் கொண்டான். மற்றும் கட்டா வரதராஜு என்னும் கவிஞரும் தாம் காவிரிக்குக் கரைகட்டிய கரிகாலன் வம்சத்தைச் சேர்ந்தவர் என்பதனால், தம் வம்சத்தார்க்குக் 'கட்டா' எனும் குடும்பப் பெயர் வந்ததாகத் தம் இராமாயண நூலில் குறித்துள்ளார். தெலுங்கில் 'கட்டா' என்றால் கரை என்று பொருள்.

'அதடு காவேரி கல்லன கட்ட கட்ட
நதிசயிம்செனு ததீயான்வ வாயமுன
புட்டின ரவிவம்ச பூபுஜுவளிசி
கட்டான்வயு லனங்க.'

நன்னிசோழன் தனது காப்பியத்தில் வருணித்த யானைமுகனின் வரலாறு தேவாரத்தில் குறிப்பிட்டுள்ள வேழமுகத்தான் கதையைப் போல் காணப்படுகிறது. சிலப்பதிகாரக் காப்பியத்தில் ஆய்ச்சியர் திருமாலைக் கீழ்க் கண்டவாறு துதித்தனர்.

"பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும், கையும், திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே?

கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன
கண்ணே!''
(சிலம்பு 17:படர்க்கைப் பரவல்)
''திருமால்சீர் கேளாத செவி என்ன செவியே!''
(ஷை.ஷை)
''நாராயணா வென்னா நாவென்ன நாவே!''
(ஷை.ஷை)

நம்மாழ்வாரும் தம் பெரிய திருமொழியில், திருமாலை நோக்காத கண் கண்ணல்ல என்றும், அவனைப் பற்றிக் கேட்காத செவி செவி அல்ல என்றும் கூறியுள்ளார்.

தெலுங்கு இலக்கியத்தில் மகாபாகவதம் எழுதிய போத்தன்னா ஒரு சிறந்த கவிஞர். அவர் பாடிய கீழ்க் காணும் பாடலால் தமிழ் தெலுங்கு காப்பியங்களில் இக் கருத்துப் பற்றிய ஒற்றுமை இருப்பதை நாம் அறியலாம்.

'கம்ஜாட்சுனகு கானி காயம்பு காயமே
பவன கும்பித சர்ம பஸ்த்தி காக
வைகுண்டு பொகடனி வக்தரம்பு வக்தரமே
டமடம த்வனி தோடி டக்க காக
ஹரிபூஜனமு லேனி ஹஸ்தம்பு ஹஸ்தமே
தருசாக நிர்மித தர்வி காக
கமலேசு சூடனி கன்னுலு கன்னுலே
தனு குட்யஜால ரம்த்ரமுலுகாக
சக்ரி சிம்த லேனி ஜன்மம்பு ஜன்மமே
தரள சலில புத்புதம்பு காக
விஷ்ணு பக்தி லேனி விபுதுண்டு விபுதுடே
பாதயுகமு தோடி பசுவு காக'.

கமலக்கண்ணனுக்கு பயன்படாத உடல் உடலா? அது காற்றடைத்த தோல் பை. அவனைப் புகழாத செவி செவியா? அது டம டம என்னும் ஒலி செய்யும் உடுக்கை. அவனைப் பூஜை செய்யாத கை கையா? அது மரத்தால் செய்யப்பட்ட கரண்டி. அவனை நோக்காத கண் கண்ணா? அவை சுவரின் துளைகள். அவனை நினைக்காத பிறவி பிறவியா? அது நீர்க்குமிழி. திருமாலின் மேல் அன்பு கொள்ளாத புலவன் புலவனா? அவன் இரண்டுகால் மாடு- என்பது இப்பாடலின் சொல்நடையும் பொருள் நடையும்

மேற்கண்ட சிலப்பதிகாரப் பாடலின் போக்கோடே மிகவும் ஒத்துள்ளமை உணரத்தகும்.

இராவணன் சீதையைப் பர்ணசாலையுடன் தூக்கிக் கொண்டு போனதாகக் கம்பராமாயணம் கூறுகின்றது. இந்தச் செய்தி தெலுங்குப் புலவர்களின் இராமாயணங் களில் சொல்லப்படவில்லை. ஆயினும் தெலுங்கு நாடோடி இராமாயணங்களில் இது காணப்படுவது குறிப்பிடத் தக்கது.

"பூமிபை உன்னட்டி பூபுத்தி தூசி
கட்ட பெல்லாகிஞ்சி ரதமுபை பெட்டி."

தென்னகத்தில் தோன்றிய பக்தி இயக்கத்தினால் தமிழர் களுக்கும், தெலுங்கர்களுக்கும் இடையே ஒரு நெருங்கிய உறவு ஏற்பட்டது. குயவரான திருநீலகண்டரும், தாழ்த்தப் பட்ட இனத்தைச் சேர்ந்த திருப்பாணாழ்வார், கண்ணப்பர் போன்ற பக்தர்கள் எல்லா இனத்தாராலும் போற்றப்பட்ட னர். 'வாசக ஞானத்தால் வருமோ சுகம்' என்றும், 'வித்தை முத்தி தருமா' என்றும் தாயுமானவர் கேட்டார். படிப்பு பயனற்றது என்றும், அதனால் முத்தி கிடைக் காது என்றும், கடவுளின் கருணையால் கடவுளைக் காணும் பெரும் பேறு கிடைக்கும் என்றும் அவர் கூறி யுள்ளார். இதைப்போலவே 'தூர்ஜெட்டி' என்னும் தெலுங்குக் கவிஞர் தமது காப்பியத்தில் கூறியுள்ளார்.

சிலந்தி எந்த வேதம் படித்தது!
பாம்பு எந்த சாத்திரம் கற்றது!
யானை எந்த படிப்பு படித்தது!
கண்ணப்பர் எந்த மந்திரம் ஓதினார்!

அப்பனே! உன் திருவடிகளைச் சேர இந்தப் படிப்புக்கள் பயன்படாது. உனது திருவடிகளின் சேவை மட்டும்தான் பயன்படும் என்றும் அவர் கூறியுள்ளார். தாயுமானவரின் மற்றொரு கருத்தும் தெலுங்கு இலக்கியத்தில் காணப்படு கின்றது.

சொல்லும் பொருளுமற்றுச் சும்மா இருப்பதற்கே
அல்லும் பகலுமெனக் காசை பராபரமே!

என்று தாயுமானவர் பாடியது அனைவருக்கும் தெரிந்த ஒரு கருத்து.

''சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறமரிது''

என்றும் அவர் கூறியுள்ளார். உண்மையில் எல்லாப் புலன் களையும் அடக்கிச் சும்மா இருப்பதை யோகம் என்று கூறலாம். இந்த யோகத்தினை 'வேமன்னா'வும், ''ஊரு குன்னவாடு உத்தம யோகிரா'' என்று குறிப்பிட்டுள்ளார். 'ஊருகுன்னவாடு' என்றால் 'சும்மா இருப்பவன்' என்று பொருள்.

நாயன்மார்களின் கதைகளைப் பால்குருகி சோமநாதர் என்பவர் தெலுங்கர்களுக்கு அறிமுகப்படுத்தினார். சில இடங்களில் அவர் பெரியபுராணத்திற்கு மிகவும் நெருங்கிச் சென்றார்.

'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று துவங்கும் திருத்தொண்டத் தொகையில் நாயன்மார் களின் பெயருக்குப் பின்னே அடியேன் என்று இருக்கும். அவ்வண்ணமே சோமநாதரும்,

'திருவூரி திருமூல தேவுனி பண்ட
சன்ன புராதன சானுல பண்ட'

என்று கூறியுள்ளார். அடியேன் என்னும் சொல்லுக்குத் தெலுங்குச் சொல் 'பண்டு' என்பதாம். ஆனால், சோமநாதர் சில இடங்களில் மூலத்திற்கு முக்கியத்துவம் தரவில்லை என்பது புலப்படும். உதாரணமாகப் பூசலார் நாயனாரின் கதை பெரியபுராணத்தில் எழுபத்திரண்டு வரிகளில் இருக் கிறது. சோமநாதர் அதனை எட்டு வரிகளில் முடித்து வைத்தார். ஆயினும், சோமநாதர் கவிதை விறுவிறுப்பாக இருப்பதனால், அவரது நூல் இன்றைக்கும் தெலுங்கு மக்களிடையே செல்வாக்குப் பெற்றுத் திகழ்கின்றது.

சில நாயன்மார்களின் கதைகளைச் சோமநாதர் மிகவும் விரிவுபடுத்தி எழுதியுள்ளார். ஆனால் அந்தக் கதைகள்

பெரியபுராணத்தைத் தழுவி எழுதப்படவில்லை என்று கூறலாம். இதற்கு உருத்திரப்பசுபதி நாயனாரின் கதையைச் சான்றாகக் கூறலாம். அந்த நாயனாரின் கதை பெரியபுராணத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

சோழநாட்டில் பசுபதி என்னும் ஒரு சிவனடியார் இருந்தார். அவர் ஒவ்வொருநாளும் 8 உருத்திரசூக்தம் ஓதிக் கொண்டிருந்தார். அவ்வாறாகப் பல நாட்கள் கழிந்தன. அதற்குச் சிவபெருமான் மகிழ்ச்சி அடைந்து பசுபதிக்குத் தன் அருளைப் புரிந்தார். "உருத்திர சூக்தம்" ஓதி, சிவபெருமானின் கருணையைப் பெற்றதனால், அவருக்கு 'உருத்திரபசுபதி' என்ற பெயர் வழக்கில் உண்டாயிற்று.

இனி, சோமநாதர் தம் 'பசவப்புராணத்தில்' கூறிய உருத்திர பசுபதியின் கதையைக் கேட்போம்.

உருத்திரபசுபதி என்னும் ஒரு சிவபக்தர் இருந்தார். பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய நஞ்சினைச் சிவபெருமான் அருந்திய கதையை அவர் ஒரு நாள் கேட்டார். அதைக் கேட்ட அவர் பெரும் துயரம் அடைந்தார். யாரேனும் நஞ்சினை அருந்துவார்களா? தாய் இல்லாத சிவபெருமானைக் காப்பாற்றுவதற்கு யாரும் இல்லையா? தாய் இருந்தால் பிள்ளை நஞ்சுண்ணும் பொழுது பார்த்துக் கொண்டு இருப்பாளா?—என்று அவர் கதறினார். கதறிக் கொண்டே அவர் ஒரு குளத்தில் குதித்தார். அப்போது சிவபெருமான் தோன்றி அவரைக் காப்பாற்றினார். ஏதேனும் ஒரு வரம்கேள்! என்று சிவபெருமான் கேட்டார். அதற்கு அவர், 'எனக்கு ஒரு வரமும் வேண்டாம், உண்ட நஞ்சினை நீர் வெளிப்படுத்தினால் போதும்' என்று கேட்டுக்கொண்டார். இவ்வாறு சோமநாதர் உருத்திர பசுபதியின் கதையை விளக்கினார். இந்தக் கதைக்கு அடிப்படை எது என்று தெரியவில்லை. பெரியபுராணத்தில் உருத்திரபசுபதி ஞானபக்தராகக் காட்சி அளிக்க, தெலுங்குக் காப்பியத்தில் அவர் ஓர் உணர்வுடை அன்பராகக் காட்சி அளிக்கிறார்.

பால்குருகி சோமநாதர் சித்திரித்த நாயன்மார்களின் கதைகளுக்கு அடிப்படை எதுவாக இருந்தாலும், அறுபத்து மூவர்களைப் பற்றி முதன் முதலாகத் தெலுங்கு மக்களுக்கு அறிமுகப்படுத்தியவர் அவரே ஆவார். அவரைப் பின் பற்றித் தெலுங்குக் கவிஞர்கள் நாயன்மார்களின் கதை களைக் காப்பியங்களாக எழுதியுள்ளனர்.

'தூர்ஜெட்டி' என்னும் கவிஞர் ''ஸ்ரீகாளஹஸ்தி மகாத்மியம்'' என்னும் காப்பியம் எழுதியுள்ளார். இதற் கும் சீகாளத்திப் புராணத்திற்கும் ஒற்றுமைகள் இருக் கின்றன.

விடஜெங்கமச் சருக்கம், தென்கைலாயச் சருக்கம், பொன் முகரிச் சருக்கம், நான்முகச் சருக்கம், கண்ணப்பச் சருக்கம், நக்கீரச் சருக்கம், கன்னியர் சருக்கம், சிலந்தி முற்கதை - என்று சீகாளத்திப் புராணத்தில் பகுதிகள் இருப்பதைப் போலவே தெலுங்குக் காப்பியத்திலும், ''மாயா ஜெங்கம சொரூபம், சுவர்ண முகரி ஜனன பிரகாரம், பிரம்மனுக்குச் சரஸ்வதியால் புதல்வர்கள் பிறந்த கதை, காளஹஸ்தி மகாத்மியம், திண்ணனின் பிறப்பு, நக்கீரரின் கதை, மாணிக்கவல்லியின் கதை, சிலந்தி பூர்வஜன்ம விர்த்தாந்தம்'' என்ற தலைப்புக்களில் கதைகள் கூறப்பட்டுள்ளன.

கவிஞர் தூர்ஜெட்டி அங்கையற்கண்ணியை மீனாட்சி என்று அழைக்காமல் 'அங்கைய கன்னியா', 'அங்கைய கன்னியாம்பா' என்று அழைத்திருப்பது குறிப்பிடத் தக்கது. இவருக்குப்பின் தோன்றிய சில கவிஞர்கள் அங்கைய கண்ணம்மா, அங்கைய கன்னியம்மா என்று அழைத்தனர்.

சில தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தியதுடன் 'தூர்ஜெட்டி' ஒன்றிரண்டு தமிழ் மரபுகளையும் தம் காப்பியத்தில் குறிப்பிட்டுள்ளார். பணம், பெண், மக்கட் பேறு முதலியவற்றின்மேல் ஆசை கொள்வது நன்றன்று என்பது தெலுங்கர்களின் மரபு. ஆனால் 'தூர்ஜெட்டி'

ஒரு செய்யுளில் தமிழ் மரபினைப் பின்பற்றிப் பின்வரு மாறு கூறியுள்ளார்.

'உண்ணாமுல ஜகதம்பிக
அண்ணாமல விஸ்வநாது நாராதிம்சன்
மண்ணாசையு பொன்னாசையு
பெண்ணாசையு லேனிவாரி பென்னிது லகுடன்.'

திருவண்ணாமலையில் குடிகொண்டுள்ள 'அபீதகுசாம்பா', 'அருணாசலேஸ்வரர்' என்று கூறாமல், 'உண்ணாமுல என்றும், 'அண்ணாமல' என்றும் 'தூர்ஜெட்டி' கூறியிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. அப்படியே மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்று தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்தியதும் குறிப்பிடத் தக்கது. எனவே தமிழ் மொழி மேல் 'தூர்ஜெட்டி' கவிஞருக்கு மிகுந்த ஆர்வம் உண்டு என்பதை நாம் அறியலாம்.

நக்கீரரின் கதையை முதன்முதலாகத் தெலுங்கில் எழுதியவர் 'தூர்ஜெட்டி' கவிஞர் ஆவார். ஆனால், நக்கீரர் என்பதற்குப் பதிலாக 'நத்கீரர்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார். கதையில் சில மாற்றங்களும் செய்துள்ளார்.

தெலுங்குக் கவிஞர்களின் ஆதரவைப் பெற்ற மற்றொரு தமிழ் நூல் திருவிளையாடற்புராணம். இந்தப் புராணத்தை மொழிபெயர்க்காவிட்டாலும், அதில் கூறப்பட்டுள்ள சொக்கநாதரின் அறுபத்துநான்கு லீலைகளைத் தெலுங்குக் கவிஞர்கள் விரிவுபடுத்தி எழுதியுள்ளனர். பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த பச்ச கப்பூரப்பு திருவேங்களகவி என்பவர் சொக்கநாதர் சரித்திரம் என்னும் நூல் எழுதியுள்ளார். இதற்கு 'மதுராபுராணம்' அல்லது 'சௌஷஷ்டி லீலாவிலாசம்' என்னும் பெயர்களும் உள்ளன. பின்னர்ச் சொக்கநாதரின் கதையை விளக்கி மூன்று காப்பியங்களும், ஒரு உரைநடை நூலும தோன்றி யுள்ளன.

திருவேங்களகவி வடமொழி நூலைத் தழுவிக் காப்பியம் இயற்றினாலும், அவர் தமிழ் நூலையும்

ஒப்பிட்டுப் பார்த்து எழுதியுள்ளார் என்று கூறலாம். ஏனென்றால் அவர் தமிழகத்தைச் சேர்ந்தவர். அவரைக் காப்பியம் எழுதத் தூண்டியவர் திருப்பத்தூர்ச் சீமையைச் சேர்ந்தவர். எனவே, திருவேங்கள கவிஞர் தம் காப்பியத்தில் திருவாலவாய், அங்கைய கண்ணம்மா, பொத்தாமரை (பொற்றாமரை), பொதியமாமல போன்ற பல தமிழ்ச் சொற்களைக் கையாண்டுள்ளார். அவர் நத்கீரர் என்று கூறாமல் நக்கிரர் என்றே குறித்துள்ளார். சங்கப் பலகையை 'சங்க பலகம்' என்று அழைத்தார். இவ்வாறு தமிழில் தோன்றிய சைவ நூல்கள் சில, தெலுங்கு மொழியில் எழுதப்பட்டுள்ளன. வைணவ நூல்களும் பல தோன்றியுள்ளன. பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிருஷ்ணமாச்சரியலு என்பவர் தெலுங்கு வைணவ இலக்கியத்தின் தந்தையாகக் கருதப்படுகின்றார். அவர் நம்மாழ்வாரின் பாசுரங்களை மொழிபெயர்த்ததாகத் தெரிய வருகின்றது.

'சடகோப மௌனி
வேதம்பு தெலுகு காவிஞ்சி சம்சார
கேதம்பு மான்பின கிருஷ்ணமாச்சரியு

என்று பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த தாள்ளபாக திருவேங்களநாதர் என்னும் கவிஞர் கூறியுள்ளார். இவர் 'பரமயோகிவிலாசம்' என்னும் நூலை இயற்றியுள்ளார். இது திராவிட வேதமாகிய நாலாயிரத் திவ்யப்பிரபந்தத்தைத் தழுவி எழுதப்பட்டுள்ளதாக உறுதிபடக் கூறலாம்.

பரமயோகி விலாசம் பன்னிரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பத்து நான்கு வரிகள் கொண்ட நூல். இதில் பன்னிரு ஆழ்வார்கள், நாதமுனி, யாமுனாச்சாரியர் என்று அழைக்கப்படும் ஆளவந்தார், இராமனுசர், பராசரபட்டர் முதலியோரைப் பற்றி விரிவாகவும், தெளிவாகவும் கூறப்பட்டுள்ளது. திவ்வியப்பிரபந்தத்திற்கு இந்த நூல் மொழி பெயர்ப்பு இல்லாவிடினும், இது சிறந்த வைணவ நூல் என்பதில் ஐயப்பாடு இல்லை. திருவேங்கடவருக்கு இஃது அர்ப்பணிக்கப்பட்டது.

திருவேங்களநாதர் வைணவராகிய காரணத்தினால், அவர் சில பாசுரங்களை அழகுபட மொழிபெயர்த்துள்ளார். பூதத்தாழ்வார் இயற்றிய,

'அன்பே தகழியா, ஆர்வமே நெய்யாக,
இன்புருகு சிந்தை யிடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணர்க்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்'

என்னும் பாசுரத்தை அத்தெலுங்குக் கவிஞர் கீழ்க்கண்ட வாறு தெலுங்கு செய்தார்.

'...... ...... ...... பிரேம
பந்திய, மிதிலேனி பக்தியே சமுரு
ஆனந்தபரித உற்ருதம்ஜம்பெ வத்தி
கா நொநரிம்சி விகாசமை ஆத்ம
திரமொந்து ஞானதீபம்பு சேசி'

அவரே, வையம் தகழியா வார்கடலே நெய்யாக' என்று துவங்கும் பொய்கையாழ்வார் பாசுரத்தையும் அனு பவித்துப் பின்வருமாறு மொழிபெயர்த்துள்ளார்.

"தரன் பந்திய ஸமுத்ரபுலு நேயி
அருணு தீபமு சேசி அருணாம்சுததுல
காராபு சக்ரம்புகை பூஞ்சி னட்டி
நீரஜாட்சுவனசிச்செ நீராஜனம்பு"

விப்ரநாராயணராகத் தெலுங்கு மக்களுக்கு அறிமுக மான தொண்டரடிப்பொடி ஆழ்வாரின் திருப்பள்ளி எழுச்சியையும், திருவேங்களநாதர் சுவைபட மொழி பெயர்த்துள்ளார். இது முழுக்க முழுக்க மொழிபெயர்ப்பு அன்று. ஆயினும் தமிழ்ப் பாசுரங்களில் உள்ள கருத்துக் களை அவர் மொழிபெயர்ப்பில் வெளிப்படுத்தியுள்ளார்.

'அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே'

என்னும் மகுடத்தைத் தெலுங்குக் கவிஞர்,

'பாலிஞ்சி கருண சொப்பட யோகநித்ர
சாலிஞ்சி ஸ்ரீ ரங்கசாமி மேல்கனவே'

என்று மொழி பெயர்த்தார். இனி, அவர் செய்த திருப்பள்ளி எழுச்சி மொழி பெயர்ப்பைக் காண்போம்.

தமிழில் காணப்படும் கஜேந்திரனின் கதையை விட்டு விட்டார். சில கருத்துக்களையும் விட்டுவிட்டார். ஆயினும் தெலுங்கு மொழிபெயர்ப்பைப் படிக்கும் போது, பாசுரங்களின் சுவை தெரியவருகின்றது.

"முலமுல விகசிம்சு மொல்ல குரொன்னலல
வலபுல தூர்புவீவலு லெச்சரிம்ப
மன்சு குப்பலுல வேமருது கேலின்சு
நின்சு ரெக்கல மின்சு லெசக ஜாடிஞ்சி
நெத்தாலி இன்ட்லலோ நிதுரிஞ்சு சன்ன
மத்தகம்சலு அம்சமாகலு மேல்கனிரி"

திருவேங்களநாதர் வைணவத்தில் பற்று மிக்கவர். ஆதலால் நாலாயிரத் திவ்யப்பிரபந்தத்தை அவர் பல இடங்களில் போற்றியுள்ளார். அவர் அதனை அப்படியே மொழிபெயர்த்துத் தந்திருந்தால், தெலுங்கு வைணவ உலகத்திற்கு அவர் சிறந்த தொண்டாற்றி இருப்பார் என்று ஐயமின்றிக் கூறலாம். தெலுங்கு வைணவக் கவிஞர்கள் தஞ்சம், திருமேனு, தளிகசாதம், அடியேன், திருநாளு, திருநாடு, திருமுடி, திருநாமம், திருச்செவி போன்ற பல தமிழ்ச் சொற்களைக் கையாண்டுள்ளார்.

இத்தருணத்தில் ஸ்ரீ கிருஷ்ணதேவராயர் இயற்றிய "ஆமுக்த மாலியதா" என்னும் பெருங் காப்பியத்தைப் பற்றிக் கூறுவது பொருத்தமாக இருக்கும். "சூடிக் கொடுத்த நாச்சியார்" என்று இதற்குப் பொருள். ஆண்டாளின் கதையை அந்நாட்களில் ஒரு பெருங் காப்பியமாகக் கூறியவர்களில் கிருஷ்ணதேவராயரே முதல்வர் என்று சொல்வது மிகையாகாது. அவர் தம் காப்பியத்தில் நாலாயிரத்திவ்வியப்பிரபந்தத்தைப் பற்றி பல இடங்களில் குறித்துள்ளார். தமிழ் மகளிரைக் குறிப் பிடும்பொழுது திவ்வியப்பிரபந்தம் பாடும் மகளிர்—திவ்வியப்பிரபந்த யுகாசியல்—என்று கூறுகிறார்.

பிற்காலத்தில் ஆண்டாளின் திருப்பாவை தெலுங்குக் கவிஞர்களை மிகவும் கவர்ந்தது. திருப்பாவைக்குப் பல மொழி பெயர்ப்புக்கள் வந்துள்ளன.

பன்னிரு ஆழ்வார்களில் விப்ரநாராயணர் என்னும் தொண்டரடிப் பொடி ஆழ்வார் தெலுங்குக் கவிஞர்களை மிகவும் கவர்ந்தார். கிட்டத்தட்ட பதினைந்து நூல்கள் அந்த ஆழ்வாரைப்பற்றித் தெலுங்கில் வந்துள்ளன. அவற்றில் காப்பியங்கள், யக்ஷகானங்கள், நாடகங்கள் இருக்கின்றன. தேவதேவி எனும் மங்கையின் வலையில் சிக்கியபின்னர், ஆழ்வாரின் நிலையைச் சாரங்குத் தம்மையா என்னும் கவிஞர் இவ்வாறு விளக்குகிறார்.

வச்சிரத்தைப் போல் மிகவும் உறுதியாக இருந்த அந்த ஆழ்வாரின் நெஞ்சம் படிப்படியாக இரும்பு போல், கல்லைப்போல், மரத்தைப்போல், செடிபோல், பழத்தைப் போல், பூவைப்போல், தேனைப்போல், கடைசியில் தண்ணீரைப்போல் மிருதுவாகி விட்டது.

தெலுங்குக் காப்பியங்களில் கூறப்பட்ட தொண்டரடிப் பொடி ஆழ்வாரின் கதைக்கும், தமிழ் இலக்கியத்தில் காணப்படும் கதைக்கும் ஒற்றுமைகள் இருக்கின்றன.

ஆழ்வார்களின் கதைகளைப்போலவே, தமிழ்நாட்டில் குடிகொண்டுள்ள தெய்வங்களைப் பற்றியும் சில தெலுங்குக் கவிஞர்கள் சுவைமிக்க சதகங்கள் இயற்றியுள்ளனர். சம்பங்கி மன்னர் (மன்னார்குடிப் பெருமாள்) சதகம், மன்னாரு கிருஷ்ண சதகம், பார்த்தசாரதி சதகம் முதலியவற்றை இங்குக் குறிப்பிடலாம். திருவல்லிக்கேணி பட்டணப்பட்டி குணநீரதி பார்த்தசாரதி— என்பது பார்த்தசாரதி சதகத்தின் மகுடமாக விளங்குகிறது.

தெலுங்கில் எழுதப்பட்ட சைவ நூல்களையும், வைணவ நூல்களையும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது தெலுங்கு வைணவ நூல்களுக்கும், தமிழ் வைணவ நூல்களுக்கும் இடையே ஒற்றுமைகள் மிகுதியாகக் காணப்' படுகின்றன. இன்றைக்கும் பழைய தலைமுறையைச்

சேர்ந்த தெலுங்கு வைணவர்கள் தெலுங்கு எழுத்தில் எழுதப்பட்ட ஆழ்வார்களின் பாசுரங்களைப் படிப்பதை நாம் காணலாம்.

செப்பு மொழி பதினெட்டுடையாள்—எனில்
*சிந்தனை ஒன்றுடையாள்*

என்று மகாகவி பாரதியார் கூறியதைப்போல, நம் நாட்டு மொழிகள் வெவ்வேறாக இருப்பினும், அவற்றில் காணப் படும் இலக்கியப் போக்கும் உட்கருக்தும் ஏறத்தாழ ஒன்றே என்று கூறலாம். தெலுங்குக் கவிஞர் 'வேமன்னா' வும் இந்தக் கருத்தினைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தமிழ் தெலுங்கு மொழிக் காப்பியங்களில் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இவை தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்குப் பெரிதும் துணை புரியும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ★

# 4

# தமிழர்களின் தெலுங்கு மொழித் தொண்டு

தேசபக்தரும் கவிஞருமான பாரதியார் நாட்டுப்பற்று ததும்பும் பாடல்கள் எத்தனையோ இயற்றியுள்ளார் அவற்றில் ஒன்று எங்கள் தாய் என்னும் பாடல். அந்தப் பாடலில்,

''முப்பதுகோடி முகமுடையாள் உயிர்
மொய்ம்புற வொன்றுடையாள்—இவள்
செப்புமொழி பதினெட்டுடையாள் எனில்
சிந்தனை ஒன்றுடையாள்''

என்று அவர் அருமையாகப் பாடியுள்ளார். பாரதத்தாய் பதினெட்டு மொழிகள் பேசினும், அவளது சிந்தனை மட்டும் ஒன்றுதான் என்று அவர் நம் நாட்டின் சிந்தனையில் காணப்படும் ஒற்றுமையைத் தெளிவுபடக் குறிப்பிட்டார். மகாகவி கூறியது இந்திய இலக்கியத்திற்கும் பொருந்தும்.

நம் நாட்டில் எத்தனையோ இலக்கியங்கள் வழக்கில் இருப்பினும் மூலக்கதைகளைப் பொறுத்தவரையில் அவற்றில் ஒரு ஒற்றுமை காணப்படுகிறது. எடுத்துக் காட்டாக அனைத்து மொழிகளிலும் இராமாயணம் இயற்றிய கவிஞர்களுக்கு வால்மீகிமுனிவர் எழுதிய இராமர் கதை தான் அடிப்படையாய் இருந்தது. எனினும், பழங்கவிஞர் களில் ஒருவராவது வடமொழி இராமாயணத்தை அப்படியே மொழிபெயர்க்கவில்லை. அந்தக் கதையினை மட்டும் எடுத்துக்கொண்டு, தனித்துவம் காணப்படத் தம்மொழி

களில் இராமாயணக் காப்பியங்கள் இயற்றியுள்ளனர். எனவே, வெவ்வேறு மொழிகளில் எழுதப்பட்டாலும் இந்திய இலக்கியம் ஒன்றுதான் என்று புலவர்கள் கூறுவர். பிராந்திய மொழிகளில் எழுந்துள்ள இலக்கியச் செல்வங்களை நன்கு தெரிந்துகொள்ளாவிட்டால், இந்திய இலக்கியத்தின் முழு உருவத்தையும் நாம் காணமுடியாது; அதனைச் சுவைக்கவும் முடியாது. கிருஷ்ண கிரிபலானி அவர்கள் கூறியதுபோல் இந்திய இலக்கியம் தனிப்பட்ட ஒரு காட்சியைவிட பல காட்சிகள் கொண்ட படத்தை வருணிக்கிறது. இந்தியமொழிகளில் தமிழும் தெலுங்கும் குறிப்பிடத்தக்கவை. இம்மொழிகள் மிகப்பழமை வாய்ந்தவை. அது மட்டுமின்றி நீண்ட வரலாறு கொண்ட இலக்கியங்கள் உடையவை. இம்மொழிகள் திராவிடக் குடும்பத்தைச் சேர்ந்தவை. தமிழ் தென்திராவிட மென்றும், தெலுங்கு நடு திராவிடமென்றும் அறிஞர்கள் கூறுவர். இந்த மொழி உறவோடு, இவ்விருமொழிகள் பேசப்படும் மக்களிடையிலும் நீண்ட காலமாக ஒரு நெருங்கிய தொடர்பு உள்ளது. இந்தத் தொடர்பானது பிற்காலத்தில் தோன்றிய பக்தி இயக்கத்தினாலும், சமுதாய உறவுகளினாலும் மிகவும் வலிவுபெற்றது.

பழந்தமிழர்கள் தெலுங்கு மக்களை வடுகர் என்று அழைத்தனர். சங்க இலக்கியங்களான அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை முதலியவற்றில் பத்து இடங்களில் வடுகரைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. வடுகர் என்ற சொல் பொதுவாகத் தெலுங்கு மக்களையும், கன்னட மக்களையும் குறிக்கும் என்று சிலர் கருதுகின்றனர். இக்கருத்தினை மு. இராகவையங்கார் போன்ற தமிழ்ப் பெரும் புலவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். அவரது கொள்கையின் படி, சங்ககாலத்தில் வடுகர் என்ற சொல் தெலுங்கு மக்களையும், வடுகு என்ற சொல் தெலுங்குமொழியையும் குறிப்பதற்குப் பயன்பட்டன எனக் கொள்ளலாம். ஆகவே, வடுகர் என்ற சொல் தெலுங்கு மக்களை மட்டும் குறிப்பிடும் என்று கூறலாம். ஆயினும் இந்தச் சொல் பழைய தெலுங்கு கன்னட நூல்களில் குறிப்பிடப்படவில்லை.

சுருக்கமாகக் கூறினால் பழந்தமிழர்கள் தெலுங்கு பேசுவோரை வடுகர் என்றும், பிற்காலத்தில் அவர்களைத் தெலுங்கர் என்றும் அழைத்தனர்.

பழைய தெலுங்குக் கவிஞர்கள் தமிழ்மொழியைத் திராவிட பாஷா என்றும் தமிழர்களைத் திராவிடர் என்றும் அழைத்தனர். பிற்காலத்தில்தான் தமிளம், அரவம் போன்ற சொற்கள் திராவிடச் சொல்லுக்கு நிகராகப் பயன் படுத்தப்பட்டுள்ளன. 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பால்குரிகி சோமநாதர் என்பவர் தம் விருஷாதிப சதகம் என்னும் நூலில் திராவிட பாஷா (தமிழ்) என்று கன்னட பாஷா என்றும், ஆரெபாஷா (மராத்தி) என்றும் இம்மொழிகளை வெவ்வேறாகக் குறிப்பிட்டுள்ளார். அது மட்டுமின்றி இம்மொழிகளில் தனித்தனியாகவும் மணிப் பிரவாளத்திலும் சில செய்யுட்கள் இயற்றியுள்ளார்.

தெலுங்கு நாட்டின் பல மாவட்டங்களில் திராவிட பிராமண குடும்பங்கள் எத்தனையோ வாழ்கின்றன. பேருரு திராவிடர், புதூரு திராவிடர், ஆராம திராவிடர், தும்ம குண்ட திராவிடர் போன்ற பல திராவிடர்களை நாம் தெலுங்குநாட்டில் பார்க்கலாம். இவர்கள் இன்று தெலுங்கு மக்களாகக் கருதப்பட்டாலும் இவர்களைத் திராவிடர்கள் என்று அழைப்பதுதான் வழக்கம். இவர்களில் சிலர் இன்றும் தெலுங்குச் சொற்கள் எத்தனையோ கலந்த தமிழ் மொழியினை-வீட்டில் பேசுவதைப் பார்க்கலாம். இவர் களது சில பழக்க வழக்கங்கள் தெலுங்குப் பிராமணர்களது வழக்கங்களுக்கு மாறுபட்டிருக்கும். இந்தத் திராவிடர் களின் தெலுங்கு இலக்கியத்தொண்டு மிகவும் பாராட்டத் தக்கது.

புதூர் திராவிடர்களைப் பற்றி வேதம் வேங்கடராய சாஸ்திரி அவர்கள் புதூர் திராவிடர் என்னும் ஒரு அருமை யான புத்தகம் வெளியிட்டார். முற்காலத்தில் புதூர் திராவிடர்கள் தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் அருகில் உள்ள கண்டரமாணிக்கம் என்னும் ஊரைச் சேர்ந்தவர் என்றும், ஒரு சோழ மன்னனுக்கு கண்டராதித் யன் என்னும் விருது இருந்ததாகவும் அவர் குறிப்பிட்

டுள்ளார். இன்று புதூர் திராவிடர்கள் பெரும்பான்மையாக ஆந்திரப் பிரதேசத்தில் நெல்லூர் மாவட்டத்திலும், சென்னையிலும் வாழ்கின்றனர்.

சோழர்கள் ஆண்டகாலத்தில் பல தமிழ்க் குடும்பங்கள் தெலுங்கு நாட்டிற்கு வந்திருக்கக்கூடும் எனக் கருதப் படுகின்றது. அவர்களில் சிலர் இன்று கடப்பை மாவட்டம் என்று கூறப்படும் ரேணுலுக்கு வந்ததாக வரலாறு கூறுகின்றது. அந்தச் சோழர்கள் ரேணாட்டி சோடுலு (ரேணாட்டுச் சோழர்கள்) என்று அழைக்கப்பட்டனர். சோழ மரபினைச் சேர்ந்த தெலுங்குக் கவிஞர்களுள் 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நன்னிச்சோடா குறிப்பிடத்தக்கவர். 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கட்டா வரதராஜு என்பவரும் ஒரு சிறந்த கவிஞர். இவ்விரு அரசக்கவிஞர்களும் தாம் கரிகாலச் சோழன் மரபினைச் சேர்ந்தவர்கள் என்று தம் காப்பியங்களில் கூறிக்கொண்டனர். அதுமட்டுமின்றிச் சில தமிழ் மரபுகளையும் அந்தக் கவிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். தெலுங்கு மொழியில் கட்ட என்றால் கரை என்று பொருள். தன் முந்தையரான கரிகால் சோழன் காவிரிக்குக் கரைகட்டிய காரணத்தினால்தான் தம் வீட்டுப்பெயர் கட்ட என்று ஆகியது என்று வரதராஜு கூறியுள்ளார். எனினும் கரிகால் சோழன் காவிரிக்குக் கரை கட்டிய செய்தியை வரலாற்று ஆசிரியர்கள் சிலர் ஏற்றுக் கொள்ளவில்லை.

பல்லவர் காலத்தில் தோன்றிய பக்தி இயக்கத்தினால் தெலுங்கு, தமிழ் மக்களிடையே உள்ள உறவு மிகவும் வலிமை பெற்றது. எனவே, தெலுங்கு, தமிழ் மாநிலங்களைச் சேர்ந்த சைவத் தொண்டர்கள் ஒருவரைப் பற்றி ஒருவர் நன்கு புரிந்துகொள்ள முடிந்தது, திருக்காளத்தி எனப்படும் ஸ்ரீகாளகஸ்தியும், திருப்பருவதம் எனக் கூறப்படும் ஸ்ரீசைலமும் தமிழ்ச் சைவர்களுக்குப் புனிதத்தலங்கள் ஆகிவிட்டன. இத்தலங்களைப் புகழ்ந்து மூவர் பாடல்கள் பாடியுள்ளார்கள். இந்தப் பாடல்கள் தமிழ் மறையாகிய தேவாரத்தில் இடம் பெற்றுள்ளன. இன்றும் இவ்விரு புனிதத் தலங்களைத் தமிழ்ச்சைவர்கள் தரிசிப்பதை நாம் காணலாம்.

பக்தி இயக்கத்தின் விளைவாக நாயன்மார்களும் ஆழ்வார்களும் தெலுங்கு மக்களைக் கவர்ந்தனர். அவர்கள் இயற்றிய நூல்களும் தெலுங்குப் புலவர்களை மிகவும் கவர்ந்தன. எனவே, திரு என்ற அடைச் சொல்லுக்கு எத்தனையோ சொற்கள் தெலுங்கு மொழியில் புகுந்து விட்டன. சைவ, வைணவ நூல்களும் தெலுங்கு இலக்கியத்தில் மொழிபெயர்ப்புகளாக இடம் பெற்றுள்ளன.

கி.பி.15,16,17 ஆம் நூற்றாண்டுகளில் மதுரையிலும், தஞ்சையிலும் ஆண்ட நாயக்க மன்னர்களின் காலத்தில் தெலுங்கு தமிழ் உறவுகள் முன்பைவிட வலிவு பெற்றன. அந்தக்காலத்தில் தெலுங்கு நாட்டிலிருந்து படை வீரர்கள், புலவர்கள், கவிஞர்கள், இசை அறிஞர்கள் பலர் தமிழ் நாட்டிற்குக் குடிபெயர்ந்து வந்தனர். அங்கேயே தங்கி விட்டனர். தமிழ்க் குறுநில மன்னர்களும், மக்களும் சிலர் தெலுங்கு மொழியினைக் கற்றறிந்தனர். அவருள் சிலர் தெலுங்கு மொழியில் படைப்புக்கள் செய்து அம்மொழியை வளர்த்தனர். எடுத்துக்காட்டாகத் திருநெல்வேலி மாவட்டத்தில் (தற்போது நெல்லை கட்டபொம்மன் மாவட்டம்)உள்ள எட்டையபுரத்தை ஆண்ட அரசர்கள் தெலுங்கு மொழியினைக் கற்றனர். தெலுங்குப் புலவர்களை ஆதரித்தனர். சிறப்பாக, இராமகுமார எட்டப்ப மகாராசா போன்றவர்கள் தெலுங்குப் புலவர்களை மிகவும் ஆதரித்தனர்.

தெலுங்குக் காப்பியங்கள் சில தமிழில் வருவதற்கும் அந்தச் சூழ்நிலை பெரிதும் உதவி புரிந்தது. இராமராச பூஷணர் இயற்றிய பெருங்காப்பியமான வசுசரித்திரம் அப்படிப்பட்ட நூல்களில் ஒன்று. அம்பலத்தாடும் ஐயன் என்னும் தமிழ்க் கவிஞர் அணிகள் நிரம்பிய இந்தக் காப்பியத்தை பாலய்ய தேவன், நமச்சிவாய தேவன் என்ற தெலுங்கு நண்பர்களின் உதவியுடன் தமிழ்ப்படுத்தினர். இம்மொழிபெயர்ப்பு 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலோ 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலோ தோன்றியிருக்க வேண்டும். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த மடுவையை ஆண்ட திம்மன் என்ற அரசன் ஆதரவில் இந்த மொழிபெயர்ப்புத் தோன்றியது. இதனைச்

சென்னை அரசாங்கம் பதிப்பித்துள்ளது. எனவே, அம்பலத்தாடும் ஐயன் தெலுங்குக் காப்பியத்தைத் தமிழ்ப் படுத்தும் துறையில் ஒரு முன்னோடியாக விளங்குகின்றார். மூலமொழியில் புலமை இல்லாத தருணத்தில் அம்மொழி யைச் சேர்ந்த ஒரு புலவனின் உதவியைக் கொண்டு மொழி பெயர்ப்பதுதான் சாலவும் நன்று.

தமிழ்-தெலுங்கு உறவுகள் மிகப்பழமை வாய்ந்தவை. ஆயினும் தெலுங்கிலிருந்து தமிழிற்கோ, தமிழிலிருந்து தெலுங்கிற்கோ நூல்கள் வர வேண்டிய அளவில் வர வில்லை என்பது கவலைக்குரியது. அண்மையில்தான் இந்த நிலையில் சிறிது மாற்றம் தென்படுகிறது.

இந்தப் பின்னணியை வைத்து நோக்கும் பொழுது தெலுங்குத் தொண்டு செய்த தமிழ்ப்புலவர்களை எவ்வளவு புகழ்ந்து பேசினாலும் அது மிகையாகாது. அவ்வாறு தெலுங்குத் தொண்டு புரிந்த தமிழர்களில் முதல் வரிசையில் நிற்பவர் தி. சு. முருகேசன் பிள்ளை அவர்கள். தமிழிலும் தெலுங்கிலும் புலவரான அவர் இன்று ஓர் தெலுங்கு எழுத் தாளராகத் திகழ்கின்றார்.

திருச்சிராப்பள்ளியில் பிறந்தவர் முருகேசன் பிள்ளை அவர்கள். திருச்சியை வடமொழியில் திரிசிரபுரம் என்று அழைப்பர். அவரது தந்தை சுப்பிரமணியபிள்ளை ஆவார். திருச்சியில் கல்வி கற்ற பின்னர் இளைஞரான முருகேசன் எட்டையபுரத்தில் இராசா உயர் நிலைப்பள்ளியில் எழுத்தராகச் சேர்ந்து பணிபுரிந்தார். பின்னர் அவர் மதுரை மாவட்டத்திலுள்ள பெரிய குளத்தில் நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராகச் சேர்ந்தார். அந்நாட்களில் வடகரை ஜமீன்தார் பெரிய குளம் நகராட்சிக்குத் தலைவராக இருந்தார். அவர் தெலுங்கர். அவரது அவையில் முருகேசன் பிள்ளை தெலுங்குப் புலவராகப் பணிபுரிந்தார். எட்டைய புரம் அவையிலும் அவர் தெலுங்குப் புலவராகச் சில காலம் இருந்தார். அவருக்குத் தெலுங்கு கற்றுக் கொடுத் தவர் வீரராகவைய்யர் என்பவர்.

1929 ஆம் ஆண்டில் சிதம்பரத்தில் உள்ள மீனாட்சி கீழைமொழிகள் பயிற்சிக் கல்லூரியில் முருகேசன் பிள்ளை மாணவராகச் சேர்ந்தார். அவ்வாண்டு அந்தக் கல்லூரியில் தமிழாசிரியர்களுக்குப் பயிற்சி வகுப்புத் தொடங்கப்பட்டது. மாணவராகச் சேர்ந்த பொழுது பிள்ளை அவர்களின் வயது 50. எனவே, கல்லூரியின் இளைஞரான துணை முதல்வர் அவரைப் பார்த்துப் பரிகாசம் செய்தார். அதன் விளை வாகப் பயிற்சி வகுப்பில் சேர்ந்த ஆசிரியர் மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். கல்லூரியின் முதலவர் தலை யிட்ட பின்னர்தான் மாணவர்கள் வகுப்புகளுக்குத் திரும் பினர்.

ஜோதிடத்திலும் முருகேசன் பிள்ளை வல்லுநர். இசை, நாட்டியங்களிலும் அவர் சிறந்தவர். அவர் மிகுந்த பக்தியுடன் மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தைத் தினமும் படித்துக்கொண்டிருப்பார். மனைவியுடன் தினமும் கோவிலுக்குச் செல்வார். பூஜை முதலியவை முடிந்த பின்னர்தான் சாப்பிடுவது அவருக்கு வழக்கம். அவர் உள்ளொன்று வைத்துப்புறமொன்று பேசுவது கிடையாது. அவர் எவரையும் இகழ்ந்து பேசியதில்லை. பெரியகுளத்தில் அவர் சிவலோகமடைந்தார். முருகேசன் பிள்ளை அவர் களின் புலமையை அந்நாட்களில் வாழ்ந்த தெலுங்குப் புலவர்கள் மதித்தனர். ஆந்திர சாகித்திய பரிஷத் என்னும் தெலுங்கு இலக்கிய மன்றத்தை நிறுவிய ஜெயந்தி ராமய்ய பந்துலு (1861-1941) பிள்ளை அவர்களின் புலமையை நன்கு அறிந்தவர். பந்துலு அவர்களின் பெருமுயற்சியால் மதுரையில் 1918 ஆம் ஆண்டில் மன்றத்தின் 7ஆவது மாநாடு மிகச் சிறப்பாக நடந்தது. அந்த மாநாட்டிற்கு அழைப்புப் பெற்றவர்களில் ஒருவர் பிள்ளை அவர்கள். மாநாட்டில் தமிழ்-தெலுங்கு மொழிகளுக்குள்ள ஒற்றுமை யைக் குறித்து அவர் அரியதோர் கட்டுரை வாசித்தார். இந்தத் தலைப்பின் கீழ் ஆராய்ச்சிக்கட்டுரை எழுதியவர் களில் முருகேசன் பிள்ளை அவர்கள்தான் முதல்வர் என்று கூறலாம். அச்சில் 24 பக்கங்கள்கொண்ட அந்தக் கட்டுரை யில் தெலுங்கு-தமிழ் உறவுகள் நன்கு குறிப்பிடப் பட்டுள்ளன. பந்துலு அவர்களுக்கு அந்தக் கட்டுரை

மிகவும் பிடித்தது, எனவே, தான் பதிப்பிட நினைத்த பெரும் அகராதிக்கு பிள்ளையவர்களின் உதவியை நாடி அவரைத் திராவிட மொழிகளில் உறவுச் சொற்கள் தருமாறு கேட்டுக்கொண்டார். பிள்ளை அவர்கள் 7,500 சொற்களைத் தேர்ந்து எடுத்துக் கொடுத்தார். அவர்களுக்குத் தெலுங்கிலும், தமிழிலும் உள்ள புலமையினை இது நன்கு புலப்படுத்துகின்றது.

பிள்ளை அவர்கள் 100 செய்யுட்கள் கொண்ட ஒரு சதகம் இயற்றியுள்ளார். அதன் பெயர் திரிசிரகிரீச சதகம். திரிசிரகிரீச என்பது திருச்சியில் உள்ள தாயுமானவரைக் குறிப்பிடும் சொல். கந்தம் என்னும் தெலுங்கு யாப்பில் இச்சதகம் இயற்றப்பட்டுள்ளது. கடைசி 50 செய்யுட்களும் தூய தெலுங்கில் எழுதப்பட்டுள்ளன. அதாவது வடமொழிக் கலப்பில்லாத தெலுங்கில் (அச்சதெலுகு) அவர் கவிதை பாடினார்.

பாயிரத்தில் தன்னை ஒரு தொண்டனாகப் பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுக் கொண்டார். தாம் காராள குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றும், மோட்சத்திற்கு வாயிலாக பயன்படும் என்னும் நோக்கத்தில் தாம் இந்தச் சதகத்தை இயற்றியதாகவும் அவர் கூறியுள்ளார். முருகேசன்பிள்ளை ஒரு சிறந்த புலவர் என்றுரைக்க இச்சதகம் ஒரு சான்றாகத் திகழ்கிறது.

ஒரு செய்யுளில் பிள்ளை அவர்கள் ஆண்டவனைக் கீழ்க்கண்டவாறு துதித்துள்ளார்.

"காவேரி தோய முண்டக
பாவினி நீராடுவாரி பகிதினி நின்னுன்
சேவிம்பக பெற தய்யமு
தேவுனிகா கொலுவநீகு திரிசிர கிரிசா"

திருச்சியில் குடிகொண்ட ஐயனே, காவிரியில் குளிக்காமல் கிணற்றுத் தண்ணீரால் குளிப்பதைப்போல். உனக்கு மாறாகப் பிற தெய்வத்தைத் தெய்வமாகக் கருதி வழிபட என்னைச் செய்யாதே!

காவிரி ஆற்றின் மேல் பிள்ளையவர்களுக்கு இருக்கும் பற்றும், அவரது கடவுள் பற்றும் இந்தச் செய்யுளின் வாயிலாக நமக்கு நன்கு தெரியவருகின்றது. அவர் தூய தெலுங்கில் எழுதினாலும் ஓசைநயம் அதில் நிரம்ப இருக்கும். அவரது மொழி இயல்பானது. கடினமான சொற்களையோ, அகராதியைப் பார்த்துப் பொருள்புரிந்து கொள்ளும் சொற்களையோ அவர் பயன்படுத்தவில்லை. அன்றாட வாழ்க்கையில் செவியில்படும் சொற்களுக்கு அவர் முக்கியத்துவம் அளித்தார். தென்னகத்தில் வாழ்ந் தாலும் இயல்பான தெலுங்கு நடையில் அவர் இயற்றி யுள்ளார் என்பதனால் அவரது தெலுங்குப் புலமை நன்கு புலப்படுகின்றது. அந்த நடைக்கு ஏற்பக் கருத்துக்களும் அமைந்துள்ளன. ''திருச்சியில் வாழும் ஐயனே! உன் பொற்பாதங்களை நினைக்காமல் பெண், பொன், பிள்ளைப் பேறு இவற்றை சிறப்பாகக் கொண்டிருக்கும் எனக்கு நீ எவ்வாறு அருள்வாயோ?'' என்று அவர் மற்றொரு செய்யுளில் தன் இதயத்தில் குடிகொண்ட வேதனையை வெளிப்படுத்தினார்.

பிள்ளையவர்களின் கவிதைநடை கேட்கக் கேட்க இனிதாக இருந்தாலும், அவரது உரைநடை அவ்வாறு அமையவில்லை. கடினமான சொற்களை உரை நடையில் பயன்படுத்தினார். கவிச்சக்கரவர்த்தி கம்பன் வாழ்க்கை வரலாற்றை முதன் முதலாகத் தெலுங்கு மக்களுக்கு அறி முகப்படுத்தியவர் பிள்ளையவர்களே. அவ்வண்ணமே சிலப்பதிகாரக்கதையை நூபுரமகிமா என்னும் தலைப்பின் கீழ் எழுதியுள்ளார். இவ்விரண்டும் ஆந்திர சாகித்திய பரிஷத் பத்திரிகையில் வெளிவந்துள்ளன. இவை இன்னும் புத்தகவடிவில் வராதது வருந்தத்தக்க ஒன்றாகும். முருகே சன் பிள்ளை யவர்களின் எழுத்துக்கள் புத்தகவடிவில் வந் தால், அவரது புதுமையை அறிந்து கொள்ள இன்றைய தலைமுறை மக்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பு கிடைக்கும்.

மாத்தூர் அப்பாவு மொதலி (முதலியார்) என்னும் தமிழரும் தெலுங்குக் கவிஞராகப் பெயரும் புகழும்பெற்றார். அவர் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவர். மீனாட்சியம்மை

யின் தொண்டன். 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். அவர் மாத்ருசதகம் என்னும் ஓர் அருமையான நூலினை இயற்றியுள்ளார். 'தாயைப் போன்றவர் எவரு மில்லை' என்பது சதகத்தின் மகுடம். தெலுங்கு இலக்கியத் தில் நூற்றுக்கணக்கான சதகங்கள் இருக்கின்றன. ஆயினும் தாயைப் பற்றி ஒரு சதகமும் இயற்றப்பட வில்லை. எனவே, விண்மீன்கள் நடுவில் மதியைப் போல், இந்தச் சதகம் தெலுங்கு இலக்கியத்தில் ஒளிமிக்கதாய் விளங்குகின்றது.

பெண்ணின் வாழ்க்கையில் தாய்மை ஒரு சிறப்புமிக்க நிலை என்று அப்பாவுமொதலி எடுத்துக்காட்டியுள்ளார். அவள் சிறுமியாக இருக்கும்போதும் தாய்மையின் சிறப்புத் தன்மைகள் புலப்படுகின்றன. சாதாரணமாகச் சிறுமியர் பொம்மைகளை வைத்துக்கொண்டு திருமணங்கள் செய்து வைப்பார்கள். பொம்மைகளுக்கு உணவு ஊட்டுவார்கள். குளிப்பாட்டி மகிழ்வார்கள். இந்த அனைத்துச் செயல்களும் தாயின் செயல்களே. அப்பாவு மொதலி இப்படிப்பட்ட கருத்துக்களை நன்கு சித்திரித்துள்ளார். ஒவ்வொரு தாயும் தன் பிள்ளை பார்வைக்கு நன்றாக இருக்க வேண்டும் என்றும், ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்றும் முயல்வது வழக்கம். எனவே தாய் பிள்ளைக்கு விளக் கெண்ணெய் தருவாள். விளக்கெண்ணெய் ஊட்டும் பொழுது பிள்ளையின் கண்கள், மூக்கு, தொடை, கை முதலிய உறுப்புக்களை மெல்ல மெல்ல அமுக்கி அந்த அழகினைப் பார்த்து மகிழ்வாள். அப்பேர்ப்பட்ட தாயின் பெருமையை மாத்தூர் கவிஞர் கீழ்க்கண்ட செய்யுளில் கூறியுள்ளார்.

"அனுதின மாதம் சம்பவுன
காமுத முக்கிடு நம்த மீத லோ
சனமுலு முக்கு பெங்தொடலு
சங்கலு காள்ளுனு சேதுவாதிகா
கனு சம மொரந்தக நிமிரி
சக்கினி வாடகு நட்லு சேயுநேர்
புறலராறா அன்ன னபோடிகி..."

விளக்கெண்ணெய் ஊட்டுவதும், தாய்ப்பால் ஊட்டுவதும் போன்ற செயல்கள் இன்றைக்கும் நாட்டுப் புறங்களில் பார்க்கலாம். இயல்பான இந்தச் செயல்களை புலவர் அழகுபடக் கூறியுள்ளார். பிள்ளைக்கு மருந்து கொடுக்கும்போது அவள் தேவலோகத்தில் சிறந்த மருத்து வரான தன்வந்திரியைப் போல் காணப்படுவாள் என்று அவர் கூறுவது மிகவும் பொருத்தமாக இருக்கிறது. அதாவது பிள்ளையின் உடல் நலத்தில் தாய் கொள்ளும் அக்கறை, என்னென்ன மருந்துகள் தரவேண்டுமோ அதையெல்லாம் அறிந்து அவற்றைச் கொடுப்பாள் என்று புலவர் சொல்லாமலேயே சொல்லிவிட்டார். தாயின் பாசம், அக்கறை, கவனிப்பு முதலியவற்றை அவர் நன்கு விவரித்தார்.

மாத்ரு சதகத்தைப் படிக்கும்பொழுது அதன் ஆசிரியர் மதுரைக்காரராக தென்னகத்தில் வாழும் ஒரு தமிழராகத் தென்படமாட்டார். அவ்வளவு இயல்பாக அவரது தெலுங்குநடை அமைந்துள்ளது. அவர்தம் எழுத்தில் சுவைமிக்க பழமொழிகள் முதலியவற்றைப் பயன் படுத்தியுள்ளார்.

தெலுங்குப்புலவராகத் திகழும் ஆர்க்காடு தியாகராச முதலியாரும் தமிழர்தான். அவர் இயற்றிய சுப்பிரமணிய விஜயம் (முருகனின் வெற்றி) ஒரு சிறந்த தெலுங்குக் காப்பியம். அது தவிர முருகனைப் பற்றித் தெலுங்கில் வேறு சிறந்த காப்பியங்கள் இல்லையென்றாலும் அது மிகையாகாது. புல்லூரி முனிரத்தினம் பிள்ளை என்பவர் சென்னை திருவல்லிக் கேணியில் குடிகொண்ட பார்த் சாரதி சுவாமியைப் பற்றி அருமையான ஒரு சதகம் படைத்துள்ளார். கண்ணனின் விளையாட்டுகள், லீலைகள் சதகத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளன. சிவபிரான் கோரிக்கை களை ஏற்றுக் கண்ணன் மோகினியாய்த் தோன்றுவதாகக் கூறுவதும், துந்துபி என்னும் அரக்கனால் சிறைசெய்யப் பட்ட மங்கையர்களைத் தான் விடுவிப்பதாகக் கண்ணன் கூறியதும் இந்தச் சதகத்தில் நாம் காணும் சில மாற்றங்

கள். இச்செய்திகளை மற்றைய தெலுங்குக் காப்பியங்களில் காணமுடியவில்லை. திருமங்கையாழ்வாரின் பத்துப் பாசுரங்களை மொழிபெயர்த்துச் சதகத்தின் கடைசியில் ஆசிரியர் இணைத்துள்ளார்.

கம்பீரமான உரை நடையில் இராமலிங்க அடிகளாரின் வரலாற்றை முனிரத்தினம்பிள்ளை சுருக்கமாக எழுதியுள்ளார். 1947 ஆம் ஆண்டில் வெளிவந்த இந்நூலின் பெயர் ஸ்ரீ ஜோதி இராமலிங்க சுவாமி வாரி ஜீவித சரித்திர சங்கரகமு. தெலுங்கில் இலக்கிய படைப்புகள் படைத்த தமிழர்கள் இன்னும் சிலர் இருக்கலாம். எனவே நான் குறிப்பிட்டுள்ள இந்தப் பட்டியல் முழுமை பெறாத ஒன்று.

தமிழ் இசை அறிஞர்களும், இசை நூலோரும் புரிந்த தெலுங்குத் தொண்டு மிகவும் போற்றத்தக்கது. கர்நாடக இசை அறிஞர்களில் சிறந்தவரும் இசை மும்மூர்த்திகளில் ஒருவருமான தியாகராஜரின் கிருதிகளை பாதுகாத்த பெருமை தமிழ் இசை அறிஞர்களைச் சாரும் என்பதில் ஐயப்பாடில்லை. சியாமாசாஸ்திரி, பட்டிணம் சுப்ரமணிய ஐயர், திருவொற்றியூர் தியாகராஜ ஐயர் போன்ற பல தமிழ் அறிஞர்கள் தெலுங்கு மொழியிலே சுவைமிக்க கிருதிகள் (பாடல்கள்) படைத்துள்ளனர் என்பது அனைவரும் அறிந்ததே. அப்பாடல்கள் இன்றைக்கும் வழக்கில் இருக்கின்றன. தியாகராசரின் கிருதிகளுக்கு இராமநாதபுரம் ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்கள் நல்லதொரு உரை எழுதியுள்ளார். டி. எஸ். பார்த்தசாரதி அவர்கள் தியாகராசர் கிருதிகளைச் சுவைபடத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இந்த எழுத்துக்கள் அந்த இசைமேதையின் பாடல்களை நன்கு புரிந்து கொள்வதற்கு மிகவும் உதவியாக இருக்கின்றன என்று கூறலாம். தியாகராசரின் பிரகலாத சரித்திரம் என்னும் இசை நூலினைப் பார்த்தசாரதி அவர்கள் மொழிபெயர்த்துள்ளார்.

எட்டையாபுரம் மகாராசாவான இராமவெங்கடேஸ்வர எட்டப்பரின் ஆதரவில் சுப்பராம தீட்சிதர் சங்கித சம்பிர

தாய பிரதர்சினி என்னும் ஓர் அரிய நூலினைப் படைத்தார். இசை மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துச்சாமி தீட்சிதரின் வளர்ப்புப் புதல்வர் சுப்பராம தீட்சிதர். அவர் விளாத்திக்குளம் கிருஷ்ணய்ய அமாத்யரிடமும் தஞ்சை இராமைய்யா என்பவரிடமும் தெலுங்கு மொழியினைச் செம்மையாகப் பயின்றார். தெலுங்கு இலக்கியத்தில் சிறந்த காப்பிய நூல்களாகிய மனுசரித்திரம், வசுசரித்திரம் முதலியனவற்றை விமரிசையாகப் படித்தார். தெலுங்கு இலக்கணமும் பயின்றார்.

தெலுங்கு இலக்கியத்திலும், இசையிலும் புலமை பெற்ற சுப்பராம தீட்சிதர் நம் நாட்டில் இசைமரபினை வெளிப்படுத்தும் சங்கீத சம்பிரதாய பிரதர்சினியை எழுதுவதற்கு மிகவும் தகுந்தவர். எட்டையபுரம் அரசரால் இந்த நூல் 1904ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் வெளியாகியது. மகாராசாவின் வித்யாவிலாசினி அச்சகத்திலேயே இந்த நூல் அச்சிடப்பட்டது. இதுவும் குறிப்பிடத் தக்க ஒன்றாகும்.

இசை அறிஞர்கள் இரகசியமாகத் தம்முள் வைத்துக் கொண்ட இசை மரபினை இந்த நூல் சிறந்த முறையில் விவரிக்கின்றது. சென்னையைச் சார்ந்த ஏ. எம். சின்னச்சாமி முதலியார் அவர்கள் மேல் நாட்டுக் குறிகளுடன் நம் பாடல்களைப் பதிப்பிக்க முதன்முதலாக முயன்றார். ஆனால் அவரது முயற்சி வெற்றிபெறவில்லை. எனவே, அவர் தெலுங்கு மொழியிலாவது இப்படிப்பட்ட ஒரு நூலினைப் பதிப்பிக்க வேண்டுமென்று எட்டையபுரம் மன்னர் அவர்களை வேண்டினார். மன்னரும் இசைந்து அந்தப் பணியை சுப்பராம தீட்சிதரிடம் ஒப்படைத்தார். அதன் விளைவுதான் சம்பிரதாய பிரதர்சினி என்னும் மாபெரும் நூல். இசை அறிஞர்களுக்கு இந்த நூல் வேதம் போன்றது.

எட்டையபுரம் இராமகுமார எட்டப்பரின் ஆதரவில் மாக்கவிஞர் மூவர் நன்னய்யா, திக்கன்னா, எர்ரன்னா தெலுங்கில் இயற்றிய மகாபாரதத்தைச் சுப்பராம தீட்சிதர்

தமிழ் உரை நடையில் மொழிபெயர்த்துள்ளார். இந்த நூலும் அச்சிடப்பட்டது. இதனை நான் பார்க்கமுடிய வில்லை.

இந்த நேரத்தில் எட்டயபுரம் மன்னர்களைப் பற்றி ஓரிரண்டு வார்த்தைகள் கூறுவது பொருத்தமாக இருக்கும். அம்மன்னர்களில் சிலர் தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் முதலிய மொழிகளில் வல்லுனர்களாக இருந்தனர். புலவர்களை ஆதரித்தனர். சிறந்த புத்தகங்கள் பதிப்பித்தனர். கோவில் களுக்கும், அறப்பணிகளுக்கும் நிதி உதவி செய்தனர். அவர்களில் சிலர் இசை அறிஞர்களும் ஆவர்.

இவ்வாறு தமிழ்ப்புலவர்களும், இசை அறிஞர்களும், மன்னர்களும் மற்றும் பலரும் தெலுங்கு இலக்கியத்திற்குச் சிறந்த தொண்டு செய்தனர். அந்தத் தொண்டினைப் பற்றி ஆராய்தல் இன்றியமையாததாகும்.

தமிழ்—தெலுங்கு உறவுகள் ஆராய்ச்சிக்குத் தகுந்த தலைப்பு எனக் கூறலாம். இந்த உறவுகள் மிகப்பழைய காலத்திலேயே ஏற்பட்டதாலும் தெலுங்கு மக்களும், தமிழ் மக்களும் ஒரே மாநிலத்தில் பல்லாண்டு வாழ்ந்ததாலும், இந்த ஆராய்ச்சியினால் நல்ல விளைவுகள் ஏற்படுமென்று நம்புகின்றேன். அது மட்டுமன்றி, தென்னகத்தின் கலாச்சார வரலாற்றினை நன்கு புரிந்து கொள்வதற்கும் இந்த ஆராய்ச்சி மிகவும் பயன்படுமென்றும் கருது கின்றேன். ★

# 5

# ‘கந்துகூரி’யின் சிந்தனைகள்

கந்துகூரி வீரேசலிங்கம் பந்துலு (*1848—1919*) தெலுங்கு நாட்டில் சமுதாய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர். அவர் புதியதோர் சமுதாயத்தை உருவாக்கத் தமது வாழ் நாட்கள் முழுமையும் அர்ப்பணித்த அண்ணல் ஆவார். கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த அப்பெரியார், சமுதாய மறுமலர்ச்சிக்காக இலக்கியத்தை ஓர் அரிய கருவியாகப் பயன்படுத்தினார். டாக்டர் சி. ஆர். ரெட்டி கூறியதுபோல வீரேசலிங்கத்தின் சமாதியில் நினைவுச் சின்னமாக ஒரு வீரவாளைத்தான் அமைக்க வேண்டும்; அத்துடன் ஒரு கோடாரியையும் சேர்த்துப் பொருத்தி வைத்தால் மேலும் வீரேசலிங்கத்தின் குணமேம்பாடு நன்றாகப் புலப்படும். அதாவது வீரேசலிங்கம் பந்துலு சமுதாயத்தின் மேம் பாட்டிற்காக மிகவும் தீவிரமாக முயன்ற பெரும் சீர்திருத்த வாதி என்று ஐயமின்றிக் கூறலாம். அவர் வாய்ப் பேச்சு வீரர் அல்லர்; முழுக்க முழுக்கச் செயல் வீரர்.

தாம் வாழ்ந்த சமுதாயத்தை நோக்கி வீரேசலிங்கம் பல கட்டுரைகள், புத்தகங்கள், நகைச்சுவை நாடகங்கள் முதலியவற்றை எழுதியுள்ளார். அந்நாட்களில் அன்றைய தெலுங்கு சமுதாயத்தில் பிரபலமாக இருந்த பால்யவிவாகம் (இளம் வயது திருமணம்), கன்னியாசுல்கம் (மணப் பெண்ணுக்குப் பணம் அளிக்கும் முறை) வயது முதிர்ந்த ஆண்கள் இளம் பெண்களைத் திருமணம் செய்துகொள் வது, திருமணம் போன்ற மங்கலக் காரியங்களில் விலை மகளிர் நடனமாடுவது போன்ற கொடிய பழக்கங்கள் வழக் கில் இருந்தன. அவற்றை ஒழித்துக்கட்டுவதற்கு வீரேச

லிங்கம் அவர்கள் கடும் எதிர்ப்பினையும் சமாளித்துக் கொண்டு போர் புரிந்தார். அவ்வாறு செயல் புரிவதற்குத் திடமான நெஞ்சம் வேண்டும். இதனைப்பற்றி அவர் ஓரிடத்தில் தம் கருத்தினை இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார். "படித்தவர்கள்தாம் எதை நல்லதெனக் கருதுகின்றனரோ அதனைப் பாமரர்களுக்குப் பயப்படாமலும் சந்தேகத்திற்கு இடமில்லாமலும் செய்யத் தொடங்க வேண்டும். அப்போது தான் நம்நாடு முன்னேறத் தொடங்கும். செயலற்ற வெறும் பேச்சுக்களால் ஒரு நாளும் முன்னேறாது." இந்தக் கருத்து அன்றல்ல, இன்றும் ஏற்கத் தக்கதே.

பெண்களும் ஆண்களும் சரிசமமாகக் கல்வி கற்று நாட்டின் நன்மைக்கு உழைக்க வேண்டும் என்பது வீரேச லிங்கம் பந்துலுவின் அடிப்படையான கருத்து. கல்வியின் அவசியத்தை அவர் பல இடங்களில் வலியுறுத்தியுள்ளார். கற்றவர்களால்தான் சமுதாயமும், நாடும் முன்னேறும் என்று அவர் கருதினார். சமுதாயம் உயர்ந்தால் தனி மனிதனும் உயர்வடைவான். ஆனால் மனிதனிடத்துப் பிறருக்கு நன்மை செய்யும் சிந்தனை தவறாது இருக்க வேண்டும். அத்தகைய மனிதன்தான் சமுதாய வளர்ச்சிக்குப் பேருதவி புரிகின்றான் என்பது அவரது கருத்து.

நம்மிடத்து வேரூன்றி இருக்கும் மூட நம்பிக்கைகள் ஒழிய வேண்டும் என்று வீரேசலிங்கம் பந்துலு விரும்பினார். இந்த நேரத்தில் அவர் வெளிப்படுத்திய சில கருத்துக்களை ஆராய்வோம். "மூடப் பழக்கங்கள் ஒரேநேரத்தில் அழிவதில்லை. ஏனெனில் மக்கள் அவற்றைத் தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றி வருகின்றனர். ஆகவே நாட்டின் நலனைக் கருதுகிறவர்கள் அவசரப்படாமலும் பொறுமையுடனும் வேலை செய்து மக்களிடையில் வேரூன்றியிருக்கும் மூடப் பழக்கங்கள் என்னும் நச்சு மரங்களை ஒவ்வொன்றாகப் பெயர்த்தெடுத்தல் வேண்டும். மூடப் பழக்கம் என்னும் மரம் எவ்வளவு பலமாக விரிவடைந்திருந்தாலும் அறிவு என்னும் கோடரியால் அந்த மரத்தை வெட்டிவிடலாம்."

நம் பழக்கவழக்கங்களுக்கு நாம் அடிமையாகாமல் சுதந்திரமாகச் சிந்தித்து அப்புறம் செயல்பட வேண்டும் என்று வீரேசலிங்கம் பந்துலு கூறியுள்ளார். இந்த அரிய கருத்து எக்காலத்திற்கும் பொருந்தியிருக்கிறது. உணர்ச்சி வசப்பட்டுச் செயல்புரிவதைவிட, தானாகச் சிந்தித்துச் செயல்படுவதுதான் சிறந்தமுறை என்பது அவரது கருத்து.

* * *

மக்கள் அனைவரும் கல்வி கற்கவேண்டும் என்று வீரேசலிங்கம் பந்தலு கருதினார். ஆனால் பண்பு இல்லாத படிப்பு, காட்டில் காய்ந்த வெண்ணிலா என்று அவர் கருதினார். கல்வியில் எவ்வளவு சிறந்தவனாக ஒருவன் திகழ்ந்தாலும், அவன் கெட்டவனாக இருந்தால், அவனை ஆதரிக்கக்கூடாது எனவும் அவர் மொழிந்துள்ளார். ஆகவே பண்பு மிகவும் சிறந்தது எனக்கூறுவது மிகையாகாது.

பயன்படாத படிப்பு ஒரு படிப்பல்ல என்று அவர் கருதினார். உண்மையான படிப்பினால் பண்பு ஏற்படும் என்பதும், தீய குணங்கள் அனைத்திற்கும் மூடத்தனம் காரணமாகுமேயன்றிக் கல்வி ஒருபோதும் காரணமாகாது என்பதும் அவரது கருத்தாகும். ஆகவே கல்வி கற்றவர்பால் அவருக்குப் பேரன்பும் பெருமதிப்பும் இருந்தன. ஆயினும் அவர்களிடையே காணப்படும் சில குறைகளையும் அவர் எடுத்துக்காட்டினார்.

ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னம்பிக்கை இருக்க வேண்டும். தன்னம்பிக்கை இருக்கும் போது, தான் முன்னேற வேண்டும் என்று மனிதன் விரும்புவான். அதற்காக முயற்சியும் செய்வான். தான் முன்னேற விரும்பும்போது அவனுக்குச் சுயமரியாதையும் ஏற்படும். அதோடு தன் சுதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்ள ஆசைப்படுவான். அப்படிப்பட்டவன் மற்றவரின் உரிமைகளையும் மதித்து நடப்பான்.

உண்மையை நாடும் நாட்டம் படித்தவர்களிடையே அவசியமாக இருக்கவேண்டும் என்பது அவரது அவா. கடந்த காலம்தான் சிறந்தது என்று நினைப்பது அவ்வளவு பொருந்துவதன்று. ஏனெனில் மனிதன் நாளுக்கு நாள் முன்னேற்றம் அடைந்து கொண்டிருப்பது இயல்பு. ஆகவே உண்மையை நாடுவதுதான் மிகச் சிறந்தது என்று அவர் கருதியுள்ளார். இந்தக் கருத்து இன்றைய சமுதாயமும் ஏற்கத்தக்கதே.

ஒவ்வொருவனும் நன்கு ஆராய்ந்து செயல்படுவதுதான் முறை என்று வீரேசலிங்கம் அவர்கள் கூறியுள்ளார். எது நல்லது, எது கெட்டது என்று ஆராய்ந்து நல்லதையே நாடும்போது தீய பழக்கங்கள் மறைந்து நல்ல பழக்கங்கள் தோன்றும். நல்ல பழக்கங்கள் வளர வளர முன்னேற்றம் ஏற்படும். பாமரர்களும், ஆராய்ந்து செயல்படாதவர்களும் பழைய வழக்கங்களை மட்டும் ஆதரிப்பர்.

கல்வி கற்றவர்களிடம் உண்மையான நாட்டுப்பற்று இருக்க வேண்டும். நாட்டிலுள்ள எல்லாரையும் நேசிப்பதும், நாடுமுன்னேற முயல்வதும் நாட்டுப்பற்றுக்கு அறிகுறிகளாகும். நாட்டுமக்களிடம் உள்ள குறைகளைப் போக்குவதற்கும், மற்றவர்களின் பெருமையை உணர்வதற்கும் முயலுதல் வேண்டும். மற்ற நாட்டவரின் பழக்கவழக்கங்கள் தீயவை என்னும் ஒரு கொள்கை இருத்தல் கூடாது.

படித்தவர்களிடையே பேச்சு வீரர்கள் அதிகமாகக் காணப்படுகிறார்கள் என்றும், அவர்கள் செயல் வீரர்களாகத் திகழவேண்டும் என்றும் வீரேசலிங்கம் வெளிப்படுத்திய கருத்து சிந்தனைக்குரியது. செயல் படுத்தும் போது இன்னல்கள் வந்துசேரும். அவற்றைக் கண்டு அச்சம் அடைவது நன்றன்று. ஏனெனில் இன்னல்கள் இல்லாமல் எந்த நற்பணியும் நிறைவேறாது. இன்னல்கள் இல்லாமல் நாட்டுப்பணியும் நடைபெற முடியாது. மற்ற விசயங்களில் ஈடுபடாமல் அரசியல் விசயமாகத் தான் ஈடுபடுவது உண்மையான நாட்டுப்பற்று ஆகாது. நீதி நெறியிலும், அறிவிலும் பொதுமக்களை முன்னேற்றுதல் மிகவும் அவசியம்,

இவ்வாறு சிறந்த கருத்துக்களை வெளியிட்ட வீரேச லிங்கம் பந்துலு படித்தவர்கள் பொறியியல்துறை முதலிய வற்றில் அக்கறை காட்டித் தமது நாட்டுப்பற்றினை வளர்க்க வேண்டும் என்றும் யோசனை தெரிவித்தார். அவ் வண்ணமே இன வேற்றுமைகளையும், கையூட்டு முதலிய தீய பழக்கங்களையும் நீக்குவதற்குப் படித்தவர்கள் முயலவேண்டும் என்றும் அவர் வற்புறுத்தியுள்ளார்.

மனிதப் பிறவி மிகமிகச் சிறந்ததென்று நாம் கருது கின்றோம். இதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆயினும் மனித வாழ்க்கையின் குறிக்கோளை அறிந்து சிறந்த முறையிலே வாழ்க்கையை நடத்திக் காட்டுவதுதான் அரிதாக உள்ளது. இந்தப் பிரச்சினையைப் பற்றி வீரேச லிங்கம்பந்துலு அவர்கள் அருமையான கட்டுரை ஒன்று எழுதியுள்ளார்.

மனிதனிடத்து உடல் சம்பந்தப்பட்ட விசயங்களும், அறிவிற்குச் சம்பந்தப்பட்ட அம்சங்களும் பொதுவாகக் காணப்படுகின்றன என்று வீரேசலிங்கம் கூறியுள்ளார். எல்லா உயிர்களைப் போலவே உடலைக் காப்பாற்றிக் கொண்டும், உடல் இன்பத்தில் ஈடுபட்டும் வாழ்க்கை நடத் தினால் அது சிறந்த வாழ்க்கை ஆகாது என்பது அவரது கருத்து. இது எக்காலத்திற்கும் பொருந்து வதாக உள்ளது. அறிவு வளர்ச்சியினால் ஏற்படும் மகிழ்ச்சியே சிறந்ததென்றும், உடலைவிட மனம்தான் மேலானதென்றும் அவர் கருதியுள்ளார். சிந்தனையால் மனிதனுக்குச் சிறப்பு ஏற்படும். எனவே அதனை ஒரு கருவி யாகக் கொண்டு மனிதன் முன்னேறுவதற்கு முயல வேண்டும்.

மனிதனிடத்தே அன்பு தவறாது இருக்க வேண்டு மென்று வீரேசலிங்கம் பந்துலு கூறியுள்ளார். இது மனித னுக்கு அணிபோன்றது. அன்பினால்தான் மனிதன், பிறருக்கு உதவி புரிய வேண்டும் என்று நினைக்கிறான். அதன் காரணமாகத்தான் அவன் பெரியோர்களை மதிக் கிறான். அவர்களுக்குத் தேவையானபொழுது பணியும் புரிகின்றான்.

மனிதனிடத்துக் குடிகொண்டிருக்கும் மற்றொரு சிறந்த தன்மை நீதியின்பால் கொண்டுள்ள பற்று. இந்தப் பற்று எல்லாக் குணங்களிலும் தலையானது என்று வீரேசலிங்கம் கருதியுள்ளார். நீதியின்பால் கொண்டுள்ள பற்று நம் நடத்தையை உருவாக்குகிறது. ஆகவே ஒருவன் நல்லவனாகத் திகழவேண்டுமானால் இந்தப் பற்று மனிதனிடம் அதிகமாக இருக்க வேண்டும். நீதியைக் கடைப் பிடிக்காதவன் ஒரு விலங்கு என்றும், மனிதன் என்னும் பெயருக்கே அவன் தகுதியில்லாதவன் என்றும், இது செய்யத்தகாதது இது செய்யத் தக்கது என்று அறிவுரை கூறும் ஒரு சட்டம் நம் இதயங்களில் இருக்கிறது என்றும், அதனை மீறியவர்கள் தண்டனைக்குரியவராவார்கள் என்றும் அவர் கருதியுள்ளார்.

மனிதனுள் மற்றொரு குணமும் இருக்கிறது. கண்ணுக்குத் தெரியாத ஆண்டவனின் கட்டளைகளுக்கு உட்பட்டு நான் செயல்புரிகின்றேன் என்ற நம்பிக்கை மனிதனுக்கு இருக்கிறது. ஆண்டவனைத் தொழவேண்டும் என்ற அவாவும் இருக்கிறது. ஆயினும் மனிதனின் மகிழ்ச்சிக்கும், இன்பத்திற்கும் அறிவும் நீதியும் சிறந்த கருவிகளாகும். அறிவே மிகச் சிறந்ததென்று சிலர் கருதினாலும், செயல் முறைக்கு அது ஒத்துவராவிட்டால் அதனால் அவ்வளவு பயனில்லை என்பது அவரது கருத்து. வீரேசலிங்கம் பந்துலு அவர்களின் நோக்கத்தில் நீதிதான் தலைசிறந்தது எனக் கூறலாம். வெளிவேசத்தில் பக்தர்களாகத் தோன்றியும் நீதி தவறிய செயல்களைச் செய்பவர்கள் ஆத்திகர்களாக இருந்தாலும் உண்மையில் நாத்திகர்கள்தாம். நடத்தையை நல்ல வழியில் செலுத்தாத சமயமும் சமயமன்று. அந்தச் சமயத்தினால் உலகத்திற்கு யாதொரு பயனும் இல்லை. அறமே உருவாகிய கடவுளும் நாம் செய்யும் பூசைகளையும், பாடும் பாடல்களையும் விட நம் நடத்தையைக் கண்டு நம்மை ஆதரிப்பார் என்று அவர் திட்டவட்டமாகக் கூறியுள்ளார். எனவே நம் நடத்தையை நல்வழியில் செலுத்துவதற்கு நீதிச் செயல்கள்தான் துணை புரிகின்றன. ஆட்சிமுறை மாறலாம்; நம்பிக்கைகளில் மாறுதல்கள் ஏற்படலாம். ஆனாலும் இந்தக் கருத்து மட்டும் நிலைத்து நிற்கும்.

உண்மையை வெறுக்கக் கூடாது என்றும் அப்படி வெறுப்பது உண்மையே உருவாகிய கடவுளை வெறுப்பது போலாகும் என்றும் அவர் கூறியுள்ளார். பக்தி செலுத்தாதவரும் உண்மையைத் தவறாது கடைப்பிடிக்கவேண்டும் என்று வீரேசலிங்கம் வற்புறுத்தியுள்ளார். ஆகவே இவையெல்லாம் மனித வாழ்க்கைக்குக் குறிக்கோள்களாக இருக்க வேண்டும்.

* * *

இன்றைய தெலுங்கு இலக்கியச் சிற்பியான வீரேசலிங்கம் பந்துலு ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு நட்பு அடிப்படையானதென்று கருதியுள்ளார். உண்மையான பண்பாட்டிற்கு நட்பு ஒரு சின்னம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். நட்பு இல்லாத புலமையும், உடல் வலிமையும் மணமில்லாத பூக்களாகும். மக்களிடையே நட்புக் குறைந்து விட்டால் வெறுப்பு உண்டாகும். அப்போது நாடும் உன்னதமான நிலையை அடையாது.

மக்கள் அனைவரும் கல்விகற்க வேண்டும் என்று விரும்பிய வீரேசலிங்கம் நீதி போதனைக்கு முக்கியத்துவம் அளித்தார். எவ்வளவு கற்றவனாக இருந்தாலும் செம்மையான நடத்தை மேற்கொள்வதற்கு நீதிபோதனை இன்றியமையாதது.

எழுத்தாளர்களைப் பற்றியும் வீரேசலிங்கம் சில கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். சில எழுத்தாளர்கள் தமக்குத் தெரியாத விசயங்களையும் கூறுவதுண்டு. சில சமயம், இவ்வாறு வியாசர் தெரிவித்துள்ளார் என்று கூறிப் பாமரர்களை ஏமாற்றுவதும் உண்டு. இவ்வாறு நூல்கள் எழுதுவதை விட எழுதாமல் இருப்பதே நன்று என்றும், அது மக்களுக்குத் தொண்டு புரிவது போன்றது என்றும் கருதியுள்ளார். அதாவது, முடிந்தவரையிலும் உண்மையை எழுதவேண்டுமென்பதும், மக்களின் நலன் கருதி நூல் படைத்தல் வேண்டும் என்பதும் அவரது கருத்து. பிராந்திய மொழிகளில் அதிக எண்ணிக்கையில் நூல்கள்

வருவதை அவர் வரவேற்றார். அந்த நூல்களும் உரை நடையில் எழுதப்படவேண்டுமென்பது அவர் நோக்கம். வீரேசலிங்கம் பந்துலு தொடக்கத்தில் காப்பியங்கள் படைத்தாலும், நாளடைவில் அவர் இலக்கிய நூல்கள் மட்டும் செய்யுள் வடிவமாக இருக்க வேண்டுமேயன்றி, அறிவு வளர்ச்சிக்காக எழுதப்படும் விஞ்ஞான நூல்கள் போன்றவை உரைநடையில்தான் இருக்கவேண்டும் என்பது அவர் கருத்து. அவர் செய்யுளை வெறுக்காவிட்டாலும் சாத்திர நூல்கள் எழுதுவதற்கு, உரைநடைதான் மிகவும் பொருத்தமானது என எண்ணினார்.

கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் தத்தம் துறைகளில் வல்லுநர்களாக இருக்கவேண்டுமென்று அவர் கருதியுள்ளார்.

பத்திரிகை ஆசிரியர்களைப் பற்றியும் வீரேசலிங்கம் பந்தலு அவர்கள் சில கருத்துக்கள் தெரிவித்துள்ளார். பத்திரிகை ஆசிரியர்கள் எப்போதும் நீதியின்பால் மிகுந்த அக்கறை காட்ட வேணடும். என் கருத்துதான் சிறந்தது என்னும் மனப்பான்மையை விடடு விட்டு, பகைவனாக இருந்தாலும் அவன் சொல்லும் நல்ல கருத்தினை முழு மனதுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். பொய்யை மெய்யென்றும், மெய்யைப் பொய்யென்றும் கூறுவது போன்ற விபரீதமான வாதங்களை அவர்கள் பின்பற்றுதல் கூடாது. அதுபோன்ற ஆசிரியர்களால் மக்களுக்கு ஒருபோதும் நன்மை ஏற்படாது. நாட்டின் நலத்தைக் கருதியும், மக்களுக்குப் பயன்படும் வகையிலும் அவர்கள் பாடுபட வேண்டும்.

தாம் வாழ்ந்த காலத்தில் பல விசயங்களில் முன்னோடியாக இருந்த வீரேசலிங்கம் அவர்கள் பேய், பிசாசு முதலியவற்றை நம்பவேண்டாம் என்று வற்புறுத்தியுள்ளார். பெண்களுக்குச் சுதந்திரம் தரவேண்டுமென்றும் அவர் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். நம் சமுதாயத்தில் வேரூன்றி இருக்கும் இனவேற்றுமைகளை அவர் கடிந்துரைத்தார். அவரவர் செய்யும் வேலையைப் பொறுத்துச்

சிறப்பு உண்டாகுமேயன்றி, குலத்தினால் பெருமை ஏற்படாதென்றும் அவர் கருதினார். மக்கள் அனைவரும் சோம்பலை விட்டுவிட்டு நாட்டிற்குப் பயன்படும் வேளாண்மை, வாணிபம் முதலிய தொழில்களில் ஈடுபட வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

சமுதாய மறுமலர்ச்சிக்கும் இலக்கிய மேம்பாட்டிற்கும் தம் வாழ்நாட்களை அர்ப்பணித்த வீரேசலிங்கம் அவர்கள் மறைந்து இன்றைக்கு ஏறத்தாழ 70 ஆண்டுகள் ஆயினும் அவர் தெரிவித்துள்ள கருத்துக்கள் இன்றைக்கும் பொருத்தமாக இருக்கின்றன.

* * *

சிந்தனைச்சிற்பியாகத் திகழ்கின்ற வீரேசலிங்கம் ஒரு பெரும் புலவர்; சிறந்த எழுத்தாளர்; புகழ்பெற்ற சீர்த்திருத்தவாதி. பெண்களின் முன்னேற்றத்திற்கும், சமுதாய மேம்பாட்டிற்கும், இலக்கிய வளர்ச்சிக்கும் அவர் தமது வாழ்நாட்களை அர்ப்பணித்தவர். தமக்கென வாழாத மாமனிதர். எனவே அவர் பேரும் புகழும் இன்றைக்கும் நிலைத்திருக்கின்றன. அறிவை மட்டுமல்ல, தான் பெற்ற செல்வத்தையும் நாட்டு மக்களின் நலத்திற்குக் கொடுத்து விட்ட தியாகி அவர். அவர் பெயரால் இராஜ மகேந்திரவரம் நகரில் பள்ளிகள் பல நடைபெறுகின்றன.

மாணாக்கராக இருக்கும்போதே வீரேசலிங்கம் தெலுங்கில் புலமை பெற்றுள்ளார்; கவிதை படைக்கவும் வல்லமை பெற்றுள்ளார். படிப்பு முடிந்தவுடனே அவர் ஆசிரியராக வாழ்க்கை தொடங்கினார். கடைசி வரையிலும் ஆசிரியராகவே பணி புரிந்தார். வெகு காலம் சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரியில் தெலுங்குப் பண்டிதராகப் பணி புரிந்தார். உடல் நலம் குன்றியிருந்தும், சமுதாயத்தில் ஒரு பெரும் பதவியில் இல்லாவிட்டாலும் அவர் சமுதாயச் சீர்திருத்தப் பணியில் முழு மூச்சுடன் வேலை செய்து ஒரு மகானாக விளங்கினார்.

பெண்களின் பிரச்சனைகள் அவரை முதன்முதலாகக் கவர்ந்தன. அக்காலத்தில் பெண்களுக்குப் படிக்க வாய்ப்பு இல்லை. கணவன் இறந்துவிட்டால் மறுபடியும் திருமணம் செய்து கொள்ளும் வாய்ப்பு இல்லை; அவர்களுக்கு வேலை வாய்ப்புகளும் இல்லை. அந்த அவல நிலையை மாற்றி வைப்பதுதான் தன் கடமை என அவர் நினைத்தார். அதற்கேற்பச் செயல்பட்டார். பத்திரிகைகள் நடத்தினார். அவற்றில் பல கட்டுரைகள் இயற்றினார்; பல இடங்களில் சொற்பொழிவுகள் ஆற்றினார். வேதங்கள், புராணங்கள் முதலியவற்றிலிருந்து மேற்கோள்கள் காட்டிப் பெண்கள் மறுபடியும் திருமணம் செய்துகொள்ளலாம் என வாதாடினார். இராஜமகேந்திரவரத்தில் 'விதந்து சரணாலயம்' (விதவைகளின் புகலிடம்) ஒன்று நிறுவி அதற்கு **30,000** ரூபாய் நன்கொடையாக அளித்தார். மகளிரும் படித்து முன்னேறினால்தான் சமுதாயம் முன்னேறும் என்று அவர் கருதியுள்ளார். தீய பழக்க வழக்கங்களைச் சாடுவதிலும், அவற்றை அகற்ற முயற்சி செய்வதிலும் அவர் எடுத்துக்கொண்ட அக்கறை போற்றத்தக்கது.

சமுதாயத்தில் மட்டுமின்றி தெலுங்கு இலக்கியத்திலும் மாற்றங்கள் வர வேண்டுமென வீரேசலிங்கம் கருதியுள்ளார். அவர் முதலில் கவிதையில் அக்கறை காட்டினாலும், நாளடைவில் எல்லோருக்கும் நன்கு புரியும் எளிய உரைநடையினைப் பின்பற்றினார். புதினம், கட்டுரை, திறனாய்வு, சுய சரிதம் மற்றும் பல துறைகளில் அவர் பல நூல்களைப் படைத்தார்.

வீரேசலிங்கமே முதல் தெலுங்குப் புதினம் இயற்றினார். முதல் வாழ்க்கை வரலாற்று நூலையும் அவர்தாம் எழுதியுள்ளார். சுய சரிதத்திலும் அவர் தாம் வழிகாட்டி. சாத்திர நூல் எழுதியவர்களிலும் அவரே முன்னோடி. இவ்வண்ணம் பல துறைகளில் முதல்வராகத் திகழ்ந்து அவர் தெலுங்கு உரைநடையை வலுப்படுத்தினார். உரைநடையில் அவர் திக்கன்னாவைப் போன்றவர் என்றும் புகழ் பெற்றார்.

நூற்றுக்கு மேற்பட்ட நூல்கள் இயற்றினாலும், வீரேசலிங்கம் என்ற உடனே அவர் படைத்த தெலுங்குக்

கவிஞர்களின் வரலாற்று நூல்தான் முதலில் நினைவிற்கு வரும். அவ்வளவு சிறந்த நூல் அது. அவருக்குப் பின் ஆராய்ச்சி எவ்வளவோ நடந்தாலும், இன்றைக்கும் அந்த வரலாற்றுநூல் ஆராய்ச்சியாளர்களுக்கு ஆதார நூலாக விளங்குகின்றது.

அவர் காலத்தில் தெலுங்கில் நாடகம் இல்லாததைக் கருதி வீரேசலிங்கம் வடமொழியிலிருந்தும், ஆங்கிலத்தி லிருந்தும் பல நாடகங்களை மொழிபெயர்த்துள்ளார். அவற்றில் சாகுந்தலம், வெனீசு வர்த்தகோதந்தம்[1] முதலி யவை குறிப்பிடத்தக்கவை. காளிதாசரின் சாகுந்தலத் திற்குத் தெலுங்கில் இருபதிற்கு மேற்பட்ட மொழிபெயர்ப்பு கள் தோன்றினாலும், வீரேசலிங்கம் அவர்களின் மொழிபெயர்ப்பே மிகச் சிறந்ததாகக் கருதப்படுகின்றது.

இலக்கியத் தொண்டும், சமூகச் சேவையும் இரண்டு கண்களாக விளங்கிய வீரேசலிங்கம் பந்தலுவைப் போன்ற மகான்களின் எண்ணிக்கை எந்த மொழியிலும் குறைவாகத் தான் இருக்க முடியும்! ★

1. Merchant of Venice

# 6

# தெலுங்கு நாட்டின் பாரதியார்

நமது நாட்டின் விடுதலை இயக்கம் தீவிரமாக நடை பெற்றிருந்த காலத்தில் பாரதியார் பாடல்களைப்போலவே, 'மாகொத்தீ தெல்ல தொரதனம்' (எமக்கு வேண்டாம் இந்த வெள்ளையரின் ஆட்சி) என்ற பல்லவியுடன் துவங்கும் ஒரு நீண்ட பாடல் தெலுங்கு நாட்டில் விடுதலை வீரர் களுக்கு அளவிலா உற்சாகம் ஊட்டியது. 'மாகொத்தீ தெல்ல தொரதனம்' என்னும் சொற்றொடர் ஒரு மந்திரமாக விளங்கியது. அந்தப் பாடலைக் கேட்டு அவர்கள் விடுதலைப் போர்க்களத்தில் குதித்தனர். 160 சரணங் களைக்கொண்ட அப்பாடல் வெள்ளையரின் கொடுங்கோல் ஆட்சியினைச் சித்திரித்தமையால் அக்காலத்தில் அதனைப் பாடுவதே பெருங்குற்றமாகக் கருதப்பட்டது; பாடினோருக் குச் சிறைத் தண்டனை கிடைத்தது. எழுச்சிமிக்க அந்தப் பாடலை இயற்றிய கவிஞருக்கும் ஓராண்டு கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டது. பிற்காலத்தில் தெலுங்கு நாட்டின் பாரதியாராகப் புகழ் வாய்ந்த அந்தக் கவிஞரின் பெயர் கரிமெள்ளா சத்தியநாராயணா.

நம் நாட்டில் தோன்றிய தேசியக் கவிஞர்களில் பாரதி யாரும், கரிமெள்ளாவும் போற்றத்தக்கவர்கள்; அவ்விரு வரும் சிறந்த தேசபக்தர்கள், கவிஞர்கள், பாரத நாடுமுழு வதுமே நம் தாய்நாடு என்று கருதிய தேசியவாதிகள்.

1882இல் பிறந்த பாரதியாரைவிடக் கரிமெள்ளா 11வயது சிறியவர். அதாவது கரிமெள்ளா 1893ஆம் ஆண்டில் தோன்றினார். ஆந்திர மாநிலத்தில் பின்தங்கிய

மாவட்டமாகக் கூறப்படும் ஸ்ரீகாக்குளம் மாவட்டத்தில், நரசன்னபேட்டா வட்டத்திலுள்ள கோனெப்பாடு என்னும் சிற்றூரில் அவர் பிறந்தார். தந்தையின் பெயர் வேங்கட நரசிம்மம்; தாய் சூரம்மா என்பவர். அவர்கள் குடும்பம் பெரியது. 1952ஆம் ஆண்டில், டிசம்பர் 18ஆம் தேதியன்று கரிமெள்ளா மறைந்தார். 39ஆவது வயதில் பாரதியார் காலமாக, கரிமெள்ளா 59ஆவது வயதில் காலமானார். ஆனால் அந்தத் தேசியக் கவிஞர்கள் இருவரும் கால மானது சென்னை மாநகரத்தில் தான். அந்நாட்களில் தெலுங்கு, தமிழ்நாடுகள் சென்னை மாநிலத்தில் இருந் தன.

தேசியவாதியான பாரதியும், கரிமெள்ளாவும் நடுத் தரக் குடும்பத்தில் தோன்றி வளர்ந்தவர்கள். இருவரும் ஏழ்மையால் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள். காணி நிலத்திற்காகப் பராசக்தியை மன்றாடியவர் பாரதி. தனது ஏழ்மையைக் குறித்து அவர் பல இடங்களில் கூறியது அனைவரும் அறிந்ததே. நமது கரிமெள்ளாவின் நிலை மிகமிக இரங்கத்தக்கதாக இருந்தது. தமது உறவினர் ஒருவரின் பண உதவியால் அவர் விஜயநகரத்திலும் பின்பு மசூலிப் பட்டினத்திலும் கல்வி கற்றார். இறுதியாக அவர் பி. ஏ. பட்டதாரி ஆனார்.

வாழ்க்கை முழுவதுமே கரிமெள்ளா வறுமையுடன் போராடினார். சென்னையில் கற்பகாம்பாள் பெயரில் ஒரு உணவு விடுதியும் நடத்தினார். ஆனாலும் வறுமை மட்டும் அவரை விடவில்லை. சிலகாலம் புத்தக வெளியீட்டில் ஈடுபட்டார். சாரதா கிரந்த மாலா என்னும் பெயரில் அவர் ஏழெட்டு நூல்கள் வெளியிட்டார். ஆனால் அவரது பொருளாதார நிலை மேம்படவில்லை. சிறிது காலம் பாரதியாரைப் போலவே பள்ளி ஆசிரியராகவும் பத்திரிகை யாளராகவும் வாழ்க்கை நடத்தினார். ஆந்திரப்பிரபா, திரிலிங்கம் போன்ற பத்திரிகைகளில் பணிபுரிந்தார். ஆயினும் வறுமையுடன் போராடிக் கொண்டே இருந்தார். அதோடு முதுமையும், மங்கிய கண் பார்வையும் சேர்ந்தன. அந்நாட்களில் அவர் பட்ட இன்னல் ஒன்றிரண்டல்ல.

இறுதியாக மாலை நேரங்களில் அறிமுகமானவர்களின் கண்களில் படாமல் சென்னை மயிலாப்பூரில் பிச்சையும் எடுத்தார். அந்நாட்களில் ஒரு நண்பர் அவரைப் பார்த்து 'தாங்கள் ஏன் இங்கு அவதிப்பட வேண்டும்?' என்று கேட்டதற்குக் கரிமெள்ளா அளித்த பதில், 'இந்த மூலையில் பிச்சை எடுத்துக் கொண்டது இன்னொரு மூலையில் இருப்பவனுக்குத் தெரியாது; அதுதான் இந்த நகரத்தின் பயன்' என்பதாம்

பாரதியாரைப் போலவே கரிமெள்ளா கவிஞருக்கும் மொழிப்பற்று மிகுந்திருந்தது. தெலுங்குமக்கள் சிறந்த நூல்களைப் படித்து முன்னேறவேண்டும் என்று கரிமெள்ளா விரும்பினார். புதிய கருத்துக்களை அவர்கள் வரவேற்க வேண்டும் என்பது அவரது அவா. தாய்மொழி களைப் போற்றியது போலவே பாரதியும், கரிமெள்ளாவும் பிறமொழிகளின் மேலும் ஆர்வம் காட்டினர். இது மிகவும் போற்றத்தக்கது. ஏனெனில் தாய்மொழிப்பற்று எவ்வளவு அவசியமோ பிறமொழிப்பற்றும் அவ்வளவு அவசியம் எனக் கூறுவது மிகையாகாது. இப்படிப்பட்ட பரந்த மனப்பான்மை, கருத்து ஒற்றுமைக்கும் தேசிய ஒருமைப் பாட்டிற்கும் வலுவூட்டும். இந்த மனப்பான்மையை இக்கவிஞர்கள் இருவரிடத்துமே நாம் காணலாம்.

'சிந்து நதியின் மிசை நிலவினிலே, சேர நன்னாட்டு இளம்பெண்களுடனே, சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத், தோணிகள் ஓட்டி விளையாடி வருவோம்' என்றும், காசி நகரப் புலவர்கள் பேசும் உரை காஞ்சியில் ஒலிக்கவேண்டும் என்றும் பாரதியார் விரும்பினார். உண்மை யில் இவ்வாறு விரும்பிய தேசியக் கவிஞர்கள் அந்நாட் களில் வேறெவரும் இல்லை எனக் கூறலாம். இந்தச் சிறந்த மனப்பான்மைதான் பாரதியை அனைத்திந்தியக் கவிஞராகவும் உலகக் கவிஞராகவும் ஆக்கியது.

இனி கரிமெள்ளாவின் பிறமொழிப் பற்றினைக் காண்போம். திருச்சிராப்பள்ளிச் சிறையிலிருக்கும்போது அவர் தமிழ் மொழியினைக் கற்றுக்கொண்டார். பின்னர்க்

கன்னட மொழியையும் கற்றார். அந்த அளவில் நிற்காமல், அவர் திருக்குறளைத் தமிழிலிருந்து நேரடியாகத் தெலுங்கில் மொழிபெயர்த்தார். குறள் ஏழு சீர்களில் அமைந்த காரணத்தினால் கரிமெள்ளாவும் தமது தெலுங்கு மொழிபெயர்ப்பை ஏழு கணங்களில் அமைத்தார். அதாவது மூலநூல் எந்த வடிவில் இருக்கின்றதோ மொழிபெயர்ப்பும் கிட்டத்தட்ட அதே வடிவத்தில் இருப்பது சாலவும் நன்று. அப்பொழுதுதான் மூலத்தில் உள்ள அழகினைப் பிற மொழியாளர் ஓரளவாவது அறிந்துகொள்வதற்கு நல்ல வாய்ப்புக் கிடைக்கும். சான்றாக இந்தக் குறளைக் காணலாம்.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

இதனைக் கரிமெள்ளா இவ்வாறு மொழிபெயர்த்துள்ளார்:

*தினுவாரி கிம்பு போஜன மிச்சுகத, வான*
*தினுவாரி திண்டியுனு தானே.*

பரிமேலழகர் இயற்றிய உரையின் உதவியோடு கரிமெள்ளா அவர்கள் திருக்குறளை மொழிபெயர்த்தார். அவன் தலைப்பு "அர்த்தத் திரய சர்வஸ்வம்" முப்பால் என்பதற்கு திரயம் என்பது பொருள். அம்மொழிபெயர்ப்பின் முதல் பகுதி மட்டுமே வெளிவந்துள்ளது. அதனை அவர் 1926ஆம் ஆண்டில் வெளியிட்டார். 107 பக்கங்கள் கொண்ட அந் நூலின் விலை ரூ ஒன்று. மற்றப் பகுதிகள் என்னவாயிற்றென்றே தெரியாது. இந்தத் தெலுங்கு மொழிபெயர்ப்பை வ. வே. சு. ஐயர் அவர்கள் தமது ஆங்கிலத் திருக்குறள் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளது மகிழ்ச்சி தருகின்றது.

கரிமெள்ளா நாலடியாரையும் மொழிபெயர்த்துள்ளார். இவ்வாறு மொழிபெயர்பபுகள் செய்ததோடு, அவர் பாரதியாரைப் போலவே ஆங்கிலத்திலும் சில கவிதைகள் இயற்றினார்.

கரிமெள்ளர் தமிழ் மற்றும் பிறமொழிகளை எவ்வாறு பயின்றார் என்பதனை அவர் கூற்றாகவே தெரிவிக்க

ஆசைப்படுகிறேன். தம் திருக்குறள் தெலுங்கு மொழி பெயர்ப்புக்கு எழுதிய முன்னுரையில் அவர் இவ்வாறு கூறி யுள்ளார்: "திருவாளர் ஆங்கில ஆட்சியாளர்கள் எனக்கு நீண்ட காலக் கடுங்காவல் தண்டனை விதித்தும், இறுதி யாண்டில் தனி அறையைக் கொடுத்தும் நூல்கள் எழுது கருவிகள் முதலியவற்றைப் பெறுவதற்கு அனுமதி கொடுத் தும், இந்தப் பழைய (தமிழ்) மொழியை மட்டுமல்லாமல் மற்றும் சில மொழிகளையும் கற்றுக் கொள்வதற்கு எனக்குப் பெரும் வாய்ப்பினை அளித்து உதவினர். ஆலாஸ்யம் அய்யர் அவர்களும், ஏ.என். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்களும் எனக்குத் தமிழ் மொழியைக் கற்பித்தும் தம் மொழியிலுள்ள சிறந்த நூல்களை அளித் தும் அவற்றைத் தெலுங்கில் மொழிபெயர்க்கும் திறனை அளித்தும் எனக்கு உதவினர்."

பாரதியாரைப் போலவே கரிமெள்ளாவும் பல புனை பெயர்களுடன் எத்தனையோ கட்டுரைகள் எழுதியுள்ளார். அரிஜனப் பாடல்கள், சுயராஜ்யப் பாடல்கள், மதுவிலக்குப் பாடல்கள், ஒத்துழையாமை இயக்கப் பாடல்கள் முதலிய வற்றையும் அவர் எழுதியுள்ளார். இன்று அவருடைய சில பாடல்கள் மட்டுமே கிடைக்கின்றன; அவரது பெரும் பான்மையான எழுத்துக்கள் கிடைப்பதே இல்லை. விடுதலை இயக்கத்தில் பங்கு கொண்டவரும் கவிஞருமான திரு. குரஜாட இராகவசர்மா அவர்கள் தொகுத்த, 'ஜாதீய கீதாலு' (தேசியப் பாடல்கள்) என்னும் நூலில் கரிமெள்ளா வின் பாடல்கள் பல இடம் பெற்றுள்ளன. அவரது எழுத்துத் திறமையை அறிந்து கொள்வதற்கு இவை மிகவும் உதவுகின்றன. மற்றும் அவருடைய பல எழுத்துக் கள் திரிலிங்க, பாரதி, கிருஷ்ணா பத்திரிகா போன்ற பழைய ஏடுகளில் எத்தனையோ வெளியாகியுள்ளன. அவற்றைத் திரட்டி ஒரு நூலாகக் கொண்டுவர வேண்டிய தேவை இருக்கிறது.

பாரதியும் கரிமெள்ளாவும் இசைவல்லுனர்கள் என்று கூறலாம். சிறப்பாக நாடோடிப் பாடல்களின் மெட்டுக்கள் அவ்விருவருக்கும் நன்கு தெரியும். அம்மெட்டுகளுக்கு

அந்தத் தேசியக்கவிஞர்கள் புத்துயிர் தந்தனர். நாடோடிப் பாடல்களின் மெட்டுக்களில் அவர்கள் பல பாடல்கள் இயற்றியுள்ளனர். ஆகவே அந்தப் பாடல்கள் இன்றைக்கும் கேட்கக் கேட்க இனியவாய் இருக்கின்றன.

கரிமெள்ளா கவிஞருக்குப் பேரும் புகழும் தந்த "மாகோத்தீ தெல்ல தொரதனம்" காலத்தில் அந்தப் பாடலைப் பாடாத தேசபக்தனே இல்லை. அவ்வளவு செல்வாக்கு அதற்கு ஏற்பட்டது. அந்தப் பாடலை இயற்றிய காலத்தில், அதாவது 1920ஆம் ஆண்டில் அவர் ஸ்ரீபாத காமேசுவரராவ் என்பவரின் பணவுதவியுடன் இராசமகேந்திரவரத்தில் எல்.டி.வகுப்பில் மாணவராகச் சேர்ந்தார். 'சுயராஜ்யம் என் பிறப்புரிமை' என்று சிம்மகர்ஜனம் செய்த பாலகங்காதர திலகர் பெருமான் விண்ணுலகம் அடைந்த காலமது. 1920 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதத்தில் கல்கத்தாவில் காங்கிரஸ் மாநாடு கூடியது. அந்த மாநாட்டில் ஒத்துழையாமை இயக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் விளைவாகக் கத்தியின்றி இரத்தமின்றிப் போர் புரியத் தேசியவாதிகள் நினைத்தனர். காந்தியடிகளின் குரல் பேரிகை ஒலிபோல் நாடனைத்தும் முழங்கியது. அதனைக் கேட்டுப் பல தேசியவாதிகள் தாம் செய்யும் வேலைகளை மனப்பூர்வமாகக் கைவிட்டனர். மாணவர்கள் பள்ளிக்குச் செல்லவில்லை. இளைஞர்கள், இரயில்வே தொழிலாளர்கள், வழக்கறிஞர்கள், உழவர்கள் ஆகிய பலரும் அதற்கு முன் கண்டிராத அந்தப் போரில் கலந்து கொண்டனர். 1921 ஆம் ஆண்டில் மார்ச்சு மாதத்தில் இன்று விஜயவாடா எனக் கூறப்படும் பெஜவாடாவில் அனைத்திந்தியக் காங்கிரஸ் கூட்டம் நடந்தது. திலகர் பெருமானின் சுயராஜ்ய நிதிக்கு ஒருகோடி ரூபாய் வசூல் செய்ய வேண்டும் என்றும், ஒரு கோடி உறுப்பினர்களை இயக்கத்தில் சேர்க்க வேண்டும் என்றும், ஒருகோடி இராட்டினங்களைச் சேகரிக்க வேண்டும் என்றும், ஒரு தீர்மானம் நிறைவேறியது. அதன் பயனாக நாட்டில் ஒரு புதிய உணர்ச்சி பெருவெள்ளமாக எழுந்தது. இந்தச் சூழ்நிலையில் "மாகொத்தீ தெல்ல தொரதனம்" என்னும் பாடலைப் பாடிக்கொண்டு கரிமெள்ளா சத்திய நாராயணா கல்லூரியிலிருந்து வெளியேறினார்;

எல்.டி. வகுப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தார். அவர் சிறை யில் கடுங்காவலில் இருந்த நாட்களிலே அவருடைய முதல் மனைவி இறந்தார்.

கரிமெள்ளா கைது செய்யப்பட்டு நீதிபதி முன் கொண்டுவரப்பட்டார். அப்போது, 'உங்கள் மேல் குற்றம் சாட்டப்பட்டுள்ளது; இதற்கு நீங்கள் என்ன பதில் அளிப் பீர்கள்' என்று நீதிபதி கேட்டவுடனே, 'இதோ என் பதில். எழுதிக் கொள்ளுங்கள்' என்று ஆவேசத்துடன், 'வீழ் கின்றது, வீழ்கின்றது; மடத்தனமான ஆங்கில ஆட்சி அடி வேருடன் வீழ்கின்றது!' என்று பாடல் வடிவத்திலேயே அவர் பதில் கூறிவிட்டார். அத்தகைய உண்மைக் கவிஞர் கரிமெள்ளா. எனவேதான் ஆந்திரகேசரி, பிரகாசம் பந்துலு அவர்கள் மாகொத்தீ தெல்ல தொரதனம் என்ற பாடலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தமது சுவராஜ்யப் பத்திரிகையில் அச்சிட்டார். பேராசிரியர் என். ஜி.ரங்காவும் பாரதிய ஞானபீடத்தின் பரிசைப் பெற்ற முதல் தெலுங்குக் கவிஞராகிய விசுவநாத சத்திய நாராயணாவும் கரிமெள்ளாவைத் தேசியக் கவியரசர் என்றும் போற்றி யுள்ளனர்.

இந்த நேரத்தில் சபர்மதி ஆசிரமத்தில் நடந்த நிகழ்ச்சி யொன்றைக் குறிப்பிடவேண்டும். அண்ணல் காந்தியடிகள் ஒருமுறை தேசியக் கவிஞர்கள் கூட்டமொன்றை நடத்தி னார். அதில் கரிமெள்ளாவும் பங்கு பெற்றார். அந்தந்த மாநிலங்களைச் சேர்ந்த கவிஞர்கள் தாம் இயற்றிய பாடல் களைப் பாடினார்கள். கரிமெள்ளாவும் மாகொத்தீ தெல்ல தொரதனம் என்ற பாடலை வீராவேசத்துடன் பாடி, 'இதனை இயற்றியதற்காக எனக்கு ஓர் ஆண்டு சிறைவாசம் பரிசாகக் கிடைத்தது'—என்று கூறினார். முதலில் அதனை நம்பாதவாறு இருந்த காந்தியடிகள், பின்னர், 'இவரைப் போல நீங்களும் தேசியப் பாடல்கள் எழுத வேண்டும்' என்று மற்றவர்களுக்கு யோசனை கூறினாராம்.

பாரதியாரும் கரிமெள்ளாவும் தம் பாடல்களில் தெரி வித்த சில கருத்துக்களில் ஒற்றுமை இருக்கின்றது.

''ஆயிரமுண்டிங்கு ஜாதி—எனில்
அன்னியர் வந்து புகலென்ன நீதி—ஓர்
தாயின் வயிற்றில் பிறந்தோர்—தம்முட்
சண்டைசெய்தாலும் சகோதர ரன்றோ?''

என்று பாரதியார் கூறியதைப் போலவே கரிமெள்ளாவும் கூறியுள்ளார். யார் என்ன கூறினாலும், இந்நாட்டின் மக்கள் அனைவரும் சகோதரர்கள்தான். அண்ணன் தம்பிமார்களில் அன்னியனான வெள்ளைக்காரன் வேற்றுமைகள் தோற்றுவித்தான். ஆகவே, அந்நாட்களில் தேசியவாதிகளின் கருத்துக்களைப் பாரதியாரும் கரிமெள்ளாவும் தமது பாடல்களில் பொருத்தியுள்ளனர் என்பது உண்மை.

நாடென்றால் வெறும் மண்ணல்ல, மனிதர்கள் என்னும் உணர்வு அந்நாட்களில் பரவியிருந்தது. அதனைப் பாரத சமுதாயம் என்ற பாடலில் பாரதியார் வெகு அழகாகக் கூறியுள்ளார்.

முப்பதுகோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத்துக்கொரு புதுமை—

அதுபோலவே கரிமெள்ளாவும் பாரதத் தாயை நோக்கி, 'முப்பது கோடி மக்களுக்குத் தாய் நீ, எங்களது தலைவியும் நீ' என்று கூறியுள்ளார். மக்களின் அன்புதான் எங்களுக்குச் சரணம் என்றும் அவர் மற்றொரு பாடலில் பாடியுள்ளார்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே

என்று பாடினார் பாரதியார். ஒற்றுமையோடு நாம் அனைவரும் வாழ்வோமாக என்று பாடியுள்ளார் கரிமெள்ளா.

அவ்விரு கவிஞர்களும் கத்திச் சண்டையை வெறுத்தனர்; அன்பு நெறியைச் சிறப்பாகக் காந்தியடிகளின்

நெறியைப் போற்றினர்; அகிம்சையை ஆதரித்தனர்; இன வேறுபாடுகளை இகழ்ந்தனர்.

"ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜன்மம் இத்தேசத்தில் எய்தினராயின்
வேதியராயினும் ஒன்றே"

என்று பாரதியார் முழங்க, கரிமெள்ளா, ஆணித்தரமாக இவ்வாறு கூறியுள்ளார்:

"தாழ்த்தப்பட்டோரை ஆதரியுங்கள்;
இல்லையெனில் உங்களுக்குப் படுகுழிதான்;
பறையர்களை நம்முன் சேர்ப்போம்;
மதமென்றால் நம்முயர்வுக்கே;
மதம் ஒற்றுமையை அழிப்பதற்கல்ல"

என்றெல்லாம் அவர் கூறியுள்ளார்.

பாரதியும் கரிமெள்ளாவும், பிற மொழிகளைப் போலவே பிற சமயங்களையும் ஆதரித்தனர். அல்லாவைப் பற்றியும், இயேசுவைப்பற்றியும் பாரதியார் பாட, 'இஸ்லாமின் புகழை நாம் வளர்ப்போம்' என்று கரிமெள்ளா கூறினார்.

சில பாடல்களை நோக்குவோமாயின் நடையிலும் ஆங்காங்கே அவ்விருவர்க்கும் ஓர் ஒற்றுமை புலப்படு கிறது.

'நாட்டிலெங்கும் சுதந்திர வாஞ்சையை
நாட்டினாய் கனல்மூட்டினாய்'

என்று பாரதியார் கூற,

'உபநிஷத்து லுத்பலிம்செ உதரமந்துன—
உதரமந்துன—அவி நிதுர செந்துன'

என்று கரிமெள்ளா கூறியுள்ளார்.

வாஞ்சையை நாட்டினாய் கனல் மூட்டினாய் என்பது போலவே உதரமந்துன நிதுரசெந்துன என்னும் போது ஒலிக்கும், ஒலிச்சுவையைக் காணலாம்.

காந்தி மகான்—
உலகினிலே ஏற்றிவைத்தான்
அமைதி, அன்பு என்னும் ஒளிவிளக்குகள்;
அவன் இந்தப்புது எழுத்தினைத் தோற்றுவித்தான்;
நம் சக்தியிலிருந்து எழுப்பினான் சுதந்திரம்;
வலிமை வலியின்மை என்னும்
வேறுபாடு இனி இல்லையே'

என்று கரிமெள்ளா பாடியுள்ளார். அவர் விரும்பிய அன்பும், அமைதியும் இன்றைய உலகத்திற்கு மிகவும் தேவையானவை.

பாரதியாரும் கரிமெள்ளா சத்தியநாராயணாவும் தாய் நாட்டிற்காகத் தமது வாழ்நாளை அர்ப்பணித்த தியாகிகள். மொழி, மாநிலம் போன்ற வேறுபாடுகளை மறந்து அந்தத் தேசியக்கவிஞர்களைப் போற்றுவது தான் நம் கடமை. ★

# 7

# மக்கள் கவிஞர் வேமன்னா

தெலுங்கு நாட்டில் தோன்றிய மகான்களில் ஒருவர் வேமன்னா. அவர் சிறந்த கவிஞர். அதுமட்டுமன்றி, அவர் தலைசிறந்த பகுத்தறிவாளர்; தத்துவஞானியுமாவார். பலர் அவரை யோகி வேமன்னா என்று அழைப்பர். அவர் எழுத்திற்குச் சமூகநீதி வலுவூட்டியது.

மழையில் நனையாதவரும், வேமன்னா பத்தியங்கள் (பாக்கள்) தெரியாதவரும் தெலுங்கு நாட்டில் எவருமே இருக்க முடியாது. அவரது பாக்களுக்கு அவ்வளவு செல்வாக்கு இருப்பினும், அவரது வாழ்க்கையைப் பற்றி அவ்வளவாகத் தெரியவராதது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாகும்.

மக்கள் கவிஞராகத் திகழும் வேமன்னா வாழ்ந்த காலத்தைப் பற்றியும், இடத்தைப் பற்றியும் கருத்து வேறுபாடுகள் உள்ளன. அவர் 14 ஆம் நூற்றாண்டுக்கும் 17 ஆம் நூற்றாண்டுக்கும் இடையில் வாழ்ந்திருக்கக் கூடுமெனப் புலவர்கள் கருதியுள்ளனர். ஆயினும் வேமன்னா 17 ஆம் நூற்றாண்டில் *(1650)* வாழ்ந்ததாகப் பெரும்பான்மையான புலவர்கள் கருதுகின்றனர். அவரைப் பற்றி முதன் முதலாகக் குறிப்பிட்ட அபே துபாய் என்னும் பிரான்சு நாட்டுப் பாதிரியார் வேமன்னா 17 ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் காலமானாரென எழுதியுள்ளார்.

வேமன்னா பல இடங்களில் வாழ்ந்தவர். இன்றைய சித்தூர் மாவட்டம் சந்திரகிரி வட்டத்தில் ஓர் ஊரில் பிறந்த

தாகவும், கொண்டவீடு என்னும் மண்டலத்தில் வளர்ந்த தாகவும், கடப்பை கர்னூல் மாவட்டங்களில் சஞ்சாரம் செய்ததாகவும் கருதப்படுகின்றது. இந்த இடங்கள் அனைத்தும் இராயலசீமைப் பகுதியில் உள்ளன. எனவே, வேமன்னா இராயலசீமைப் பகுதியில் பிறந்து வாழ்ந்தா ரென்று உறுதியாகக் கூறலாம். அவருடைய பாக்களில் காணப்படும் சில சொற்கள், ஊர்களின் பெயர்கள், வழக்கில் இருக்கும் கதைகள் முதலியவற்றை ஆதாரமாகக் கொண்டு இந்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

வேமன்னாவின் வாழ்க்கைச் செய்திகளும் சரிவரத் தெரியவரவில்லை. அவர் கொண்டவீடு ரெட்டி அரசக் குடும்பத்தைச் சேர்ந்தவர் எனச் சிலர் கருதுவர். அவர் இராச வேமாரெட்டி அரசரின் இளவல் என்றும் தெரிய வருகின்றது என்பர். எனினும் அவர் ஓர் வேளாளக் குடும்பத்தைச் சார்ந்தவர் என்று கூறுவது பொருத்தமாக இருக்கும்.

வேமா, வேமன்னா என்ற பெயர்கள் இராயலசீமைப் பகுதியில் இன்றைக்கும் வழக்கில் இருக்கின்றன. இந்தச் சொல்லுக்கும் சரியான பொருள். விளங்கவில்லை. வட மொழியில் வேமா என்றால் தறி என்று பொருள். தெலுங்கில் வேப்ப மரத்திற்கு 'வேமு' என்று சொல்லுவது வழக்கம். எனவே. வேமு அன்னா (அண்ணா) வேமன்னா ஆகிய தென்றும், இது தூய தெலுங்குப் பெயர் என்றும் கொள்ளலாம்.

வேமன்னாவைப் பற்றி நம்ப முடியாத விந்தைக் கதைகள் வழக்கில் உள்ளன. அவர் எத்தனையோ மகிமை கள் புரிந்ததாகவும் கூறப்படுகின்றது. கையால் தொட்டு அவர் கொம்மட்டிக்காயைத் தங்கமாக்கியதாகவும் கதைகள் உள. இரும்பைப் பொன்னாக்குகின்ற இரசவாத வித்தையில் அவர் வல்லவரென்றும் இவரோடு சம்பந்தப்பட்ட கதைகள் கூறுகின்றன.

வேமன்னாவுடன் மிகவும் சம்பந்தப்பட்ட இன்னொரு கதையை இங்கு ஆராய்வோம்,

வேமன்னாவின் பத்தியங்களுக்கு 'விசுவதாபிராம வினுரவேம' என்னும் அடி மகுடமாக அமைந்துள்ளது. இந்த மகுடத்திலுள்ள 'அபிராம' என்னும் சொல் வேமன்னாவின் குருவைக் குறிக்கிறதென்று சிலர் கருதுகின்றனர். அபிராமய்யாவை வஞ்சித்து வேமன்னா ஒரு யோகியிடம் தங்கம் செய்யும் இரகசியத்தைத் தெரிந்து கொண்டாரென்றும், பின்னர்த் தான் செய்த குற்றத்தை உணர்ந்து வேமன்னா பெருந்துயரம் அடைந்தாரென்றும் அதன் விளைவாகவே அவர் குருவின் பெயரால் பாக்கள் இயற்றியுள்ளாரென்றும் கதை ஒன்று கூறப்படுகின்றது. இதுவும் நம்பத்தகாததுதான். தெலுங்கு நாட்டில் பட்டாபி, ராமய்யா, சீதாரமய்யா, சிவராமய்யா போன்ற பெயர்கள் இருக்கின்றன. ஆனால் அபிராமய்யா என்ற பெயர் மட்டும் வழக்கில் இல்லை. எனவே, இந்த அபிராமய்யா என்னும் பெயர் கற்பனைப் பெயராக இருக்கவேண்டும்.

'விசுவதாபிராம வினுர வேம' என்னும் மகுடத்திற்கு இன்றைக்கும் சரியான பொருள் விளங்கவில்லை. புலவர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. 'விசுவதாபிராம' என்பது தவறான பாடமெனக் கருதுவோரும் உள்ளனர். அது 'விசுவதோபிராம' என்று இருக்கக்கூடும் எனச்சிலர் குறிப்பிடுவர். 'உலகத்திற்கினியவனே கேளடா வேமனே'—என்று இந்த மகுடத்திற்குப் பொருள் கூறலாம்.

வேமன்னாவின் காலம், வரலாறு முதலியவற்றைப் போலவே, அவரது பத்தியங்களின் எண்ணிக்கை பற்றியும் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. அவை ஆயிரக் கணக்கில் உள்ளனவென்று தெரியவருகின்றன. 1960 இல் வெளிவந்துள்ள வேமன்னா பத்தியங்கள் தொகுப்பில் 5000 பாக்கள் இடம் பெற்றுள்ளன. இவை அனைத்தும் வேமன்னா பத்தியங்கள் என்று கூற இயலாது. அவரது பெயரில் மற்றவர் இயற்றிய பாக்களும் இருக்கக்கூடும். வேமன்னா பத்தியத் தொகுப்புகளும் மொழிபெயர்ப்புகளும் 1829 ஆம் வருடத்திலிருந்து இன்றைய வரையிலும் ஏத்தனை எத்தனையோ வெளிவந்துள்ளன, சார்லெஸ்

பிலிப் பிரௌன் என்னும் மேனாட்டறிஞர்தான் முதன் முறையாக ஆங்கிலத்தில் வேமன்னா பத்தியங்களை மொழிபெயர்த்து உலகத்திற்கு அக்கவிஞரின் திறமையை அறிமுகப்படுத்தியவர்.

சீதாராம் பிரசாத் என்பவர் 100 வேமன்னா பத்தியங் களைத் தமிழ் எழுத்துக்களில் எழுதியும் மொழிபெயர்த்தும் 'வேமன்ன பத்தியங்கள்' என்னும் பெயரில் ஒரு தொகுப் பினை 1892 இல் வெளியிட்டார். பின்னர் மங்கபுட்டி நாயுடு, புதுவை நாரயணதாசர், சுத்தானந்த பாரதி முதலியோர் தம் தமிழாக்கங்களை வெளியிட்டுள்ளனர். அறிஞர் அண்ணா அவர்கள் வேமன்னாவைப் பற்றிப் பத்துப் பக்கங்களில் திராவிட நாடு இதழில் (8-4-1945) சிறந்த கட்டுரை ஒன்று எழுதியுள்ளார். வேமன்னா பத்தியங்கள் வெடிகுண்டுகள் போன்றவை என்று அவர் கூறியது குறிப்பிடத்தக்கது. ஆங்கிலம், இந்தி, வடமொழி, உருது முதலிய பலமொழிகளில் வேமன்னா பத்தியங்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

வேமன்னா என்ற உடனே திகம்பரமாக உட்கார்ந்து, முழங்கால் மேல் தலையைச் சேர்த்து ஆழ்ந்த சிந்தனையில் இருக்கும் ஓர் யோகியின் உருவம்தான் நினைவிற்கு வரும். இவ்வகையான உருவப்படம்தான் பல வேமன்னா பத்தியத் தொகுப்புகளிலும் காணப்படுகின்றது. இவை அனைத் திற்கும் ஆதாரம் தஞ்சை அரண்மனையில் இருந்த வேமன்னா உருவச் சித்திரமே. இப்பொழுது அந்தச் சித்திரம் அங்குக் காணவில்லை. நாடோடியாகத் திரிந்த வேமன்னா தஞ்சை முதலிய தமிழக மாவட்டங்களிலும் சஞ்சாரம் செய்ததாகவும், அவருக்குப் பல இடங்களில் சீடர்கள் இருந்ததாகவும் தெரியவருகின்றது.

தஞ்சை அரண்மனையில் கிடைத்த வேமன்னா உருவப் படம்தான் 1972 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 3 ஆம் தேதியன்று இந்திய அரசாங்கத்தார் வெளியிட்ட 20 பைசா அஞ்சல் தலையிலும் இடம் பெற்றுள்ளது. ★

# 8

# தெலுங்கு இலக்கியத்தில் ஒரு மேரு

'விசுவநாத' என்ற வீட்டுப்பெயரைக் கேட்டவுடனேயே தெலுங்கு மக்களுக்கு 'கவிசாம்ராட்' விசுவநாத சத்தியநாராயணாவின் பெயர்தான் நினைவிற்கு வரும். 'கவிசாம்ராட்' என்னும் சொல்லுக்குக் 'கவியரசர்' என்று பொருள். சத்தியநாராயணா ஒரு பெரும்புலவர்; மிகச்சிறந்த கவிஞர்; பிரபலமான நாவலாசிரியர்; புகழ்பெற்ற பாடலாசிரியருங்கூட. இவர் ஒரு சிறந்த திறனாய்வாளருமாவார்; சத்தியநாராயணா சுவைமிக்க நாடகங்கள் எழுதினார். சிறுகதைகளைப் படைத்தார்; சுருக்கமாகச் சொன்னால், இவர் ஈடுபடாத இலக்கியத்துறையே இல்லையெனலாம். இலக்கியச் சிற்பியான விசுவநாத சத்யநாராயணா இன்றைய தெலுங்கு இலக்கிய உலகில் மாமேரு போன்றவர் எனினும் அதுமிகையாகாது. இவர் அனைத்துத் தெலுங்கு இலக்கியத்துறையிலும் தனக்கெனத் தனிமுத்திரையைப் பதித்தவர் ஆவார்.

நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றிய விசுவநாத சத்தியநாராயணா ஒரு கட்டுரையில் தன்னைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'எனக்குச் சோம்பல் சிறிது அதிகம்' என்று கூறியுள்ளார். இதனை அவர் வேடிக்கையாகவே கூறியிருக்கவேண்டும். இவரைச் சிலர் செஞ்சொற்கவிஞர் என்று கூறுவர். மற்றும் சிலர் தலைசிறந்த நாவலாசிரியர் என்று பாராட்டுவர். இங்ஙனம் ஒருவரே கவிஞராகவும், நாவலாசிரியராகவும் இணையான புகழ்

பெற்றுத்திகழ்வது ஓர் அதிசயமேயாகும். எழுத்தாற்றலி னால் ஏற்றம்பெற்று விளங்கிய இவர் அதற்கிணையான பேச்சாற்றலும் மிக்கவராகப் பல இலக்கிய மேடைகளில் பாராட்டைப் பெற்றிருக்கிறார். இவர் கவிதைகள் இவருடைய நாட்டுப் பற்றினையும் மொழிப்பற்றினையும் பறைசாற்றுகின்றன. இத்தனை திறன்களையும் தன்ன கத்தே ஒருங்கேகொண்ட ஒருவர் தன்னைச் 'சோம்பல் மிகுந்தவர்' என்று கூறிக்கொள்வதும்கூட அவருடைய தன்னடக்கத்தையே காட்டுகிறது.

மிகச்சிறந்த தெலுங்கு எழுத்தாளர்களுள் ஒருவரான சத்தியநாராயணாவைப் பட்டங்கள் பல கொடுத்துக் கௌர வித்ததன் மூலமாக இந்திய நடுவண் அரசும், ஆந்திரமாநில அரசும் தம்மைக் கௌரவித்துக்கொண்டன. சாகித்திய அகாதெமி போன்ற பல இலக்கிய நிறுவனங்கள் சத்திய நாராயணாவைப் பாராட்டியதன் மூலம் மக்களிடம் தாம் பாராட்டைப் பெற்றன. இதில் சாகித்திய அக்காதெமி அவருக்குக் கொடுத்த் சிறப்புத் தகைமை[1] குறிப்பிடத் தக்கது. கிருஷ்ணா மாவட்டத்திலுள்ள குடிவாடா நகரில் நடைபெற்ற பெரும் பாராட்டுவிழாவில் இவர் யானை மீது அமர்த்தப்பெற்று 'கஜாரோஹணம்' என்னும் மாபெரும் கௌரவத்தைப் பெற்றார். பிற மாநிலங்களிலும் கூட இவருக்குப் பல பாராட்டு விழாக்கள் நடந்தன. இத்துணைப் பேரும்புகழும் பெற்ற தெலுங்குக் கவிஞர் வேறு யாரும் இல்லை எனலாம்.

இவர் பழைமையைப் போற்றும் பண்பாளர். இவரது இலக்கியப் படைப்புக்கள் கற்பனை வளமும் சிந்தனைத் தெளிவும், உயர்ந்த இலக்கிய நடையும் கொண்டு விளங்கு கின்றன. தொடக்கக் காலத்தில் இவர் புகழ்பெறக் காரண மாகவிருந்தது தெலுங்குக் கவிதைத் துறையேயாகும். இராமாயணக் கதையை அடிப்படையாகக் கொண்டு இவர் இயற்றிய 'ஸ்ரீமத் இராமாயண கல்ப விருஷமு' என்ற கவிதை நூலே இவருக்கு 'ஞானபீடம்' பரிசைப் பெற்றுத்

1. Fellowship

தந்தது. ஏறக்குறைய இரண்டாயிரத்து இருநூறு பக்கங்கள் கொண்ட இந்தக் காவியம் தெலுங்கு இலக்கிய உலகில் ஒரு தலைசிறந்த நூலாகும். இக்காப்பியத்தை எழுதிமுடிக்க இவர் எடுத்துக்கொண்டகாலம் ஏறத்தாழ முப்பது ஆண்டுகள். மற்ற இராமாயணக் கவிஞர்களைப் போலவே இவரும் வால்மீகியைப் பின்பற்றியே எழுதினாலும், கதைப் போக்கில் ஆங்காங்கே ஆந்திரப் பண்பாட்டிற்கேற்பவும், காவியச் சுவை கருதியும் மூலநூலிலிருந்து பல மாறுதல்களைச் செய்துள்ளார். ஞானபீடப் பரிசு பெற்ற தெலுங்கர்களில் இவர்தாம் முதல்வர்.

தெலுங்கிலும் வடமொழியிலும் இலக்கியப்படைப்புக்கள் பலவற்றை உருவாக்கிய சத்தியநாராயணா இயற்றிய நாவல்களில் 'வேயி படகலு' (ஆயிரம் தலை நாகம்) என்னும் நாவல்மிகச்சிறந்த ஒரு படைப்பு ஆகும். தெலுங்கு நாட்டுக் கிராமம் ஒன்றில்,. வேகமாக மாறிவரும் சமுதாய வாழ்க்கையைச் சித்திரிக்கிறது இந்நாவல். சில தலைமுறைகளுக்கு முன் வாழ்ந்தவர்கள் தங்களுக்குள் வகுத்துக் கொண்டிருந்த உறவுக்கும், இளந்தலைமுறையினரின் வாழ்க்கைப் போக்குக்கும் உள்ள வித்தியாசங்களை இக்கதை நிகழ்ச்சிகள் புலப்படுத்துகின்றன. ஒரு புறம் பழமையில் பற்று, மறுபுறம் புதுமையில் மோகம் இவைகளுக்கு இடையே நிகழும் மோதலையே இந்தப் புதினத்தில் பாத்திரங்களின் மூலம் படைத்துக்காட்டியுள்ளார் சத்தியநாராயணா. தொன்று தொட்டுப் பழக்கத்திலிருந்துவரும் ஆயிரக்கணக்கான மரபுகள்—நாகத்தின் ஆயிரம் தலைகளைப் போல மாறி வரும் சமூக அமைப்பில், சமூக மதிப்புக்களிடையே மெல்ல மெல்லத் தேய்ந்தும் மறைந்தும் வருவதையும், தவிர்க்க முடியாத இந்த மாறுதல்களால் பல குடும்பங்களின் வாழ்க்கை எவ்வாறெல்லாம் பாதிக்கப்படுகிறது என்பதையும் இந்நாவலில் சிறப்புறச் சித்திரித்துள்ளார். ஆயிரத்து இருபத்தாறு பக்கங்களில் அமைந்துள்ள இந்நாவலுக்கு ஆந்திரப் பல்கலைக்கழகம் பரிசளித்து இவரைக் கௌரவித்தது. இன்றும் இந்த நாவல் எல்லோராலும் விரும்பிப் படிக்கப்படுகிறது; காலத்தை வென்றுநிற்கும் கலை வடிவ

மாக நின்று நிலவுகிறது. இந்நாவலின் சுருக்கம் தமிழிலும் ஆயிரம்தலை நாகம் என்னும் பெயரில் இந்நூலாசிரியரால் தரப்பட்டுள்ளது. இந்தச் தமிழ்ச் சுருக்கம் க.நா. சுப்பிர மணியம் போன்ற தமிழ் எழுத்தாளர்களை மிகவும் கவர்ந்தது. 1986-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 3-ஆம் நாள் வெளிவந்துள்ள குங்குமம் மலரில் க.நா.சு.,விசுவநாதா வைப் பற்றிக் கட்டுரை எழுதியுள்ளார். 'சி.ஆர். சர்மா எழுதிய, 'ஆயிரம் தலை நாகம்' என்னும் புதினச்சுருக்கத் தின் வாயிலாக நான் முதன்முதலாக விசுவநாத சத்திய நாராயணா அவர்களின் பெயரைக் கேட்டேன்' (பக்கம் 40) என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சத்தியநாராயணா ஏறத்தாழ அறுபது புதினங்கள் படைத்துள்ளார். அவற்றில் சில சமூக நாவல்கள். ஏனையவை வரலாற்று நாவல்கள். நேபாளம், காஷ்மீரம் போன்ற நாடுகளைப்பற்றிய கதைகளையும் நாவல்களாகப் படைத்துள்ளார். இவருடைய நாவல்களில் கதைமாந்தர் களைப் படைக்கும் முறை குறிப்பிடத்தக்கதாகும். சமூகத் தின் பல்வேறுபட்ட படிநிலைகளில் வாழும் மக்களின் வாழ்க்கை நிலைகளையும், உணர்ச்சிகளையும் அப்படியே விளக்கிக் காண்பிப்பது இவருடைய புதினங்களின் தனிச் சிறப்பாகும், இவர் எழுதிய நாவல்களில் 'ஏகவீரா', 'வேயிபடகலு', 'கடிமிச்செட்டு' 'செலியலிகட்டா',' விஷ்ணு சர்மா இங்கிலீஷ் சதுவு' போன்றவை குறிப்பிடத் தக்கன வாம். பொதுவாக இவருடைய படைப்புகள் யாவும் மேலை நாட்டு மோகத்தால் அமையும் வாழ்க்கைமுறையைச் சாடு வனவாகவும், இந்தியப்பண்பாட்டின் உயர்வைக் கூறு வனவாகவுமே படைக்கப்பட்டுள்ளன. இது இவருடைய நாட்டுப்பற்றையும், இவர் நம் பண்பாட்டின் மீது கொண் டுள்ள அசைக்கமுடியாத நம்பிக்கையையும் மரியாதையை யும் உணர்த்துகின்றது.

சத்தியநாராயணாவின் கருத்துக்களை ஏற்காத் சிலரும் கூட அவரது மொழி நடையால் ஈர்க்கப்பட்டுள்ள னர். அவரது நடை அனைவரையும் கவரும் வகையில் அமைந்திருந்தது. சிறிய சிறிய வாக்கியங்கள், எளிய

தொடரமைப்புக்கள். இலக்கியமொழியிலேயே எழுதினாலும் பேச்சுமொழியின் ஒன்றுதலோடு இணைந்து செல்லும் தன்மையுடையது இவரது உரைநடை. இந்நடையும் இவரது சிறப்புக்கு ஒரு காரணமாகும். இவருடைய கவிதை நடையைப் பற்றிக் குறிக்கும்போது அதனுள் பெருமளவில் வடமொழிச் சொற்கள் கலந்திருப்பது குறித்து இவரை வெறுத்தவர்களும் உண்டு என்பது நினைவுகூரத்தக்கது. இவரது கவிதை நடையை அடிப்படையாகக் கொண்டும் கருத்துக்களைக் கொண்டும் இவரைப் போற்றியவர்களுமுண்டு; தூற்றியவர்களுமுண்டு.

மக்களின் மனத்தைக் கொள்ளைகொள்ளும்படி எழுதும் இவருடைய வெற்றிக்குக் காரணமாக இரண்டு அம்சங்களைக் கூறலாம். ஒன்று இவர் எழுத எடுத்துக் கொள்ளும் பொருள். மற்றொன்று இவருடைய தெலுங்கு நடை. பாரதப் பண்பாட்டின் நல்ல இயல்புகளைச் சிறப்புடன் விளக்குவது இவர் எழுத்தின் முக்கியமான லட்சியமாகும். தெலுங்கு உரைநடையின் பூரணமான அழகைக் காண இவரது எழுத்தோவியங்கள் உதவுகின்றன.

மகாகாவியம் எழுதியுள்ள இவர் 'கின்னரஸாணி பாட்டலு' என்ற நயமுள்ள பாடலையும் எழுதியுள்ளார். நதியைப் பெண்ணாக உருவகித்துக் கொண்டு பெண்கள் படும் துன்பங்களை எல்லாம் விளக்கும் பாடலாக இது அமைந்துள்ளது. இவருடைய 'மத்யாக்கரலு' என்னும் கவிதை நூலுக்குச் சாகித்திய அக்காதெமி பரிசளித்துச் சிறப்பித்தது.

இவர் இருபத்தைந்து காவியங்களையும், பதினைந்து நாடகங்களையும், ஐம்பத்தேழு நாவல்களையும், ஒன்பது திறனாய்வு நூல்களையும், பல பத்திரிகைகளுக்கும், புத்தகங்களுக்கும் முன்னுரைகளையும் எழுதித் தெலுங்கு இலக்கிய உலகில் தனக்கென ஒரு தனியிடத்தை நிறுவியுள்ளார். மேலும் இவர் ஒரு சிறந்த மொழிபெயர்ப்பாளராகவும் விளங்கியுள்ளார். குடியரசுத்தலைவராகப் பணியாற்றி

யவரும், உலகமேதைகளில் ஒருவருமாகிய சர்வபள்ளி இராதா கிருஷ்ணனின் 'கல்கி' என்ற தத்துவ நூலையும், விவேகாநந்தர் எழுதிய 'யதி கீதம்' என்ற நூலையும் ஆதிசங்கரரின் துவாதச மஞ்சரி என்ற வடமொழி நூலை யும் தெலுங்கில் மொழிபெயர்த்துள்ளார்.

இவர் ஒரு சிறந்த நாடகாசிரியர் என்பதை இவர் எழுதிய, 'நர்த்தனசாலா', 'அனார்க்கலி' போன்ற நாடகங் களின் சிறப்பினால் நாமறியலாம்.

இத்தகைய சூழ்நிலையில் ஒன்று கவனிக்கப்பட வேண்டும். 'வேயி படகலு' போன்ற பெரு நாவல்களை இவர் தாமாக எழுதவில்லை. இவர் சொல்ல, மற்றவர்கள் அந்நூல்களை எழுதினார்கள். ஆயினும், அவற்றில் கலை நயம் குன்றவில்லை.

கவிதை போன்றவைகளை மட்டும் இவர் தாமாக எழுதி னார். இந்தக் கவிஞரின் சொல்வளம் உண்மையிலேயே பாராட்டுதற்குரியது. வடமொழியிலும் இவர் சில கவிதை கள், நாடகங்கள் இயற்றியுள்ளார். வானொலி நாடகங்கள் பல எழுதியுள்ளார். ஆங்கிலத்தில் ஒரு சில கட்டுரைகள் வழங்கியுள்ளார்.

இவ்வாறு எத்தனையோ இலக்கியப் படைப்புக்களைப் படைத்தவரும், இணையற்ற பேரும் புகழும் பெற்றவரும், பல பாராட்டுக்களையும், பட்டங்களையும் பெற்றவருமான சத்தியநாராயணா 1895 ஆம் ஆண்டில் ஆந்திர மாநிலத்தில் கிருஷ்ணா மாவட்டத்தில் பிறந்தார். இவர் ஒரு கல்லூரி ஆசிரியராகவே தம் வாழ்க்கையைத் தொடங்கினார். வாழ் நாள் முழுவதும் ஆசிரியராகவே வாழ்ந்தார். கல்லூரி முதல்வராகப் பணியாற்றிப் பின் ஓய்வு பெற்றார். சில ஆண்டுகள் ஆந்திரமாநிலத்தின் மேல்சபை உறுப்பினராகப் பணிபுரிந்தார். ஆந்திரப்பிரதேசத்தின் சாகித்திய அக்காதெமியின் உறுப்பினராகவும் பணியாற்றினார். இறுதியில் 1976ஆம் ஆண்டில் இவர் தம் பூதவுடல் விடுத் துப் புகழுடம்பு எய்தினார்.

இந்திய அரசு இவருக்குப் 'பத்ம பூஷண்' விருது வழங்கியது; ஆந்திரப் பிரதேச அரசு அவைப்புலவராக நியமித்துப் பாராட்டியது; பல்கலைக்கழகங்கள் இலக்கிய மன்றங்கள் இவரைச் சிறப்பித்தன. இவருக்குப் பாராட்டு விழா நடத்தாத ஊர் தெலுங்கு நாட்டில் இல்லை என்பது முழுக்க முழுக்க உண்மை. தெலுங்கு இலக்கியத்தில் மேருவாகத் திகழும் விசுவநாதர் அவர்கள் ஒரு பெரும் எழுத்தாளர் என்பதை விட, ஓர் இலக்கிய நிறுவனமே என்று கூறலாம். இவரது புகழ் என்றும் வாழ்க! ★

# 9

# தெலுங்கில் பாரதியார்

**''நேற்று முன்னாளில் வந்த உறவன்றடீ**
**நெடும் பண்டைக்கால முதற் சேர்ந்து வந்ததாம்''**

என்று கண்ணன் பாட்டில் பாரதியார் கூறியது தெலுங்கு—தமிழ் உறவிற்கும் மிகவும் பொருத்தமானது. பண்டைக் காலத்திலிருந்தே தமிழ் மக்களுக்கும் தெலுங்கு மக்களுக்கு மிடையே நெருங்கிய தொடர்பு இருந்தது. தெலுங்கும் தமிழும் ஓர் இனத்தைச் சேர்ந்த மொழிகள். பல தமிழ்ச் சொற்கள் தெலுங்கில் சேர்ந்ததைப் போலவே, தமிழிலும் தெலுங்குச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. அவ்வண்ணமே சில தமிழ் இலக்கியங்களுக்குத் தெலுங்கு மொழிபெயர்ப்புக் கள் வந்துள்ளன. தெலுங்கு இலக்கியங்களுக்குத் தமிழாக் கங்கள் செய்யப்பட்டுள்ளன.

பண்டையச் சோழ மன்னர்களுக்கும் வேங்கிநாட்டை ஆண்ட தெலுங்கு மன்னர்களுக்குமிடையே உறவு இருந் தது. அவர்களில் சிலர் திருமணங்களும் புரிந்து கொண்ட னர். தெலுங்கு நாட்டில் தெலுங்குச் சோழ மன்னர்கள் சில காலம் ஆண்டனர். அவர்கள் கரிகால் சோழனைத் தம் இனத்தின் முதல்வராகக் கூறிக் கொண்டு பெருமை அடைந்தனர். இன்றைக்கும் தெலுங்கு நாட்டில் பல இடங் களில் 'திராவிட பிராமணர்கள்' வாழ்கின்றனர். அதாவது அவர்களைத் தமிழ் பிராமணர்கள் என்று சொல்லலாம். தென்னகத்தில் தோன்றிய பக்தி இயக்கத்தினால் தெலுங்கு —தமிழ் உறவு வலிமை பெற்றது. அந்நாட்களிலே நாயன் மார்கள் சிலர் தெலுங்கு நாட்டில் உள்ள சில கோவில் களைத் தரிசித்து அருமையான பாடல்களைப் பாடியுள்ளார்

கள். நாயன்மார்களும் ஆழ்வார்களும் தெலுங்கு இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளனர். இன்றைக்கும் அத்தொண்டர்களின் வாழ்க்கை வரலாறுகள் தெலுங்கு சமுதாயத்தில் நிலை கொண்டிருக்கின்றன.

இப்படியாகத் தெலுங்கு—தமிழ் உறவு வலிமை பெற்றிருந்தும், பல தமிழ் நூல்கள் தெலுங்கில் மொழி பெயர்க்கப் படவில்லை. அவ்வாறே எத்தனையோ தெலுங்கு நூல்கள் தமிழிலும் மொழிபெயர்க்கப்படவில்லை. மொழியியல், இலக்கியம், வரலாறு, பண்பாடு முதலியவற்றில் தெலுங்கர்களுக்கும், தமிழர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தாலும் ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மொழிபெயர்ப்புக்கள் வராதது மிகவும் வருந்தத்தக்க ஒன்றாகும். ஆயினும் திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம் போன்ற இலக்கியப் பொக்கிசங்கள் இன்று தெலுங்கு மக்களுக்கும் சொந்தமாகி விட்டன. பாரதியார் எழுத்துக்களும் தெலுங்கு வாசகர்களுக்கு ஓரளவு அறிமுகமாகி விட்டது என்று கூறலாம்.

1942-ஆம் ஆண்டில் கொமாண்டூரி சடகோபாச்சார்யுலு என்பவர் 'சுப்ரமண்ய பாரதி' என்ற தலைப்பினில் ஒரு அருமையான கட்டுரை எழுதியுள்ளார். அந்தக் கட்டுரை அந்நாட்களிலே மிகவும் பிரபலமாக இருந்த 'ஆந்திர சாஹித்ய பரிஷத் பத்திரிகா'வில் (ஆந்திர சாகித்திய பரிஷத் பத்திரிகை, காகினாடா) வெளிவந்துள்ளது. பாரதியாரைப் பற்றித் தெலுங்கு மக்களுக்கு முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் சடகோபாச்சார்யுலு அவர்களேதான். பாரதியாரின் கவிதைகளைப்பற்றிக் கூறும்போது அவர் இரண்டு அம்சங்களை வலியுறுத்திக் கூறினார். எதனையும் உறுதியாகக் கூறவேண்டும் என்றும், சமுதாயத்தில் இருந்து அச்சமென்னும் பேயும், பொய்யென்னும் பாம்பும் ஒழிந்தால்தான் உண்மையான வெற்றி கிடைத்தாற்போல் நினைக்க வேண்டுமென்றும் பாரதியார் கூறி உள்ளதாக அவர் தெளிவுபடுத்தினார்.

1947-ம் ஆண்டில் நெல்லூரைச் சேர்ந்த கொமாண்டூரி பார்த்தசாரதி அய்யங்கார் என்னும் சிறந்த தேசபக்தர் 'காங்கிரஸ் பிரச்சார பாட்டலு' என்னும் நூலினை வெளி

யிட்டார். இது காங்கிரஸ் இயக்கத்திற்குச் சம்பந்தப்பட்ட பாடல்நூல். இந்த நூலில் சிறந்த தெலுங்குப் பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. பார்த்தசாரதி அய்யங்கார் பாரதியாரின் சில தேசியப்பாடல்களைத் தமிழிலிருந்து மொழி பெயர்த்து இந்த நூலில் இணைத்துள்ளார். தெலுங்குத் தேசியப் பாடல்களுடன் பாரதியார் பாடல்களும் தெலுங்கு நாட்டில் பாடப் பெற்றுள்ளன. எனவே பாரதியாரின் பாடல் களை முதன் முதலாய்த் தெலுங்கில் மொழி பெயர்த்தவர் பார்த்தசாரதி அய்யங்கார் என்று கூறினாலும் அது மிகை யாகாது.

அனைத்து இந்திய மொழிகளையும் பேணி வளர்க்கும் நோக்கத்தோடு நிறுவப்பட்ட சாகித்திய அக்கா தமிக்காகச் சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள் 'பாரதியார் இன்கவித்திரட்டு' என்ற ஒரு நூலைத் தொகுத் துள்ளார். இந்த நூலினைப் பெரும்புலவர் பூதலப்பட்டு ஸ்ரீராமுலு ரெட்டி அவர்கள் தெலுங்கில் செம்மையாக மொழி பெயர்த்துள்ளார். ரெட்டியாரின் தெலுங்கு மொழிபெயர்ப் பான 'பாரதிவாரி மதுர கவிதா சம்ஹிதா' 1961-ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. இதில் பாரதியாரின் பல பாடல்கள் இடம் பெற்றுள்ளன. பாரதியாரின் கவிதைத் திறனை நன்கு ஆராய்ந்து சேதுப்பிள்ளை அவர்கள் அருமையான முன்னுரை எழுதியுள்ளார். அதனையும் ரெட்டியார் மொழிபெயர்த்துள்ளார். பாரதியாரின் பாடல் களைத் தம் மொழியிலேயே படித்து ரசிப்பதற்குத் தெலுங்கு வாசகர்களுக்கு இந்நூல் மிகவும் உதவியாக உள்ளது.

பின்னர் 1982-ஆம் வருடத்தில் 'பாரதியின் கவிதை' என்ற தலைப்பினில் தெலுங்கில் ஒரு நூல் வெளிவந் துள்ளது. இதனை மொழி பெயர்த்தவர் சி. ஆர். சர்மா. இதில் வந்தே மாதரம், பாரத தேசம், விடுதலை, தமிழ், ஊழிக்கூத்து, பாப்பா பாட்டு, காணிநிலம், அச்சமில்லை, புதிய ருஷ்யா, கண்ணம்மா என் குழந்தை, பாஞ்சாலி சபதம் (சில பகுதிகள்) போன்ற இருபது பாடல்கள் இடம் பெற் றுள்ளன. பாரதியாரின் கவிதைகளை நன்கு புரிந்து கொள்ள இந்த நூலும் மிகவும் உதவியாக இருக்கின்றது.

பாரதியாரைப் பற்றிப் பிரபல தெலுங்குச் செய்தித்தாள் களில் சி.ஆர்.ர்சர்மா பலகட்டுரைகள் எழுதியுள்ளார். 1965—ஆம் ஆண்டில் சர்மா 'சுப்ரமண்ய பாரதி' என்ற தலைப் பினிலே ஒரு புத்தகம் வெளியிட்டார். இதில் பாரதியின் வாழ்க்கை வரலாறு, பாரதியின் எழுத்தோவியங்கள் முதலி யன பற்றிக் கூறுவதோடு பாரதியாரின் எண்ணங்கள், அவரது இரண்டு கட்டுரைகள், அவரது உரைநடைக் கவிதையரன 'காற்றி'ற்கு தெலுங்கு மொழிபெயர்ப்பு போன்றவை சேர்க்கப்பட்டுள்ளன. எனவே பாரதியின் வாழ்க்கை வரலாறு, எழுத்துக்கள் முதலியவை பற்றிச் சிறிது விளக்கமாகச் சொல்லுகின்ற இந்தப் புத்தகத்தை BHARATHI READER என்று கூறலாம். இந்த நூலிற்கு 1969-ஆம் வருடத்தில் தமிழ்நாடு அரசு பரிசு தந்துள்ளது. முதன் முறையாக பாரதியையும், மக்கள் கவியெனப் புகழ்பெற்ற குரசாட அப்பாராவ் அவர்களையும் ஒப்பிட்டு எழுதப்பட்ட கட்டுரையும் இந்த நூலில் அடங்கி உள்ளது.

நேஷனல் புக் டிரஸ்ட் இலக்கிய நிறுவனத்தாருக்காகப் பெரியசாமிதூரன் அவர்கள் 'பாரதி தமிழ்' என்ற ஒரு சிறந்த தொகுப்பு நூலைத் தொகுத்துள்ளார். இதில் பத்து கதைகள், பெண்களைப் பற்றி ஐந்து கட்டுரைகள், சமுதாயத்தைப் பற்றி ஏழு கட்டுரைகள், தத்துவத்தைப் பற்றி பன்னிரண்டு கட்டுரைகள் அடங்கியுள்ளன. இந்தக் கட்டுரைகளைப் படித்தால் பாரதியாரின் உரைநடை நயத்தையும், அவரது எண்ணங்களின் சிறப்பினையும் நன்கு அறியலாம். இந்த நூலினை 'பாரதி வசன ரசனலு' (பாரதியின் உரைநடை எழுத்துக்கள்) என்ற த்லைப் பினிலே சி. ஆர். சர்மா மொழிபெயர்த்துள்ளார். இந்தத் தெலுங்கு மொழிபெயர்ப்பு 1978—ஆம் ஆண்டில் வெளி வந்துள்ளது. தெலுங்கு வாசகர்களைக் கவர்ந்த மொழி பெயர்ப்புகளில் இது ஒன்றாகும்-

பாதியாரின் ஞானரதத்தை சி.ஆர்.சர்மா மொழிபெயர்த் துள்ளார். பாரதியார் சிறுவர், சிறுமியர்களுக்காகச் சுவை படச் சொன்ன கதைகளைச் சர்மா 'பாரதி செப்பின பில்லல கதலு' என்ற தலைப்பினிலே ஒரு புத்தகத்தை 1982—ஆம் ஆண்டில் வெளியிட்டார். இதில் பத்து கதைகள் உள்ளன.

நேஷனல் புக் டிரஸ்டுக்காகத் திருமதி பிரேமா நந்த குமார் அவர்கள் ஆங்கிலத்தில் பாரதியாரைப் பற்றி ஒரு நல்ல நூல் இயற்றியுள்ளார். இந்த ஆங்கில நூலினைக் காலஞ்சென்ற பி.வி. சிங்கராச்சாரியா அவர்கள் தெலுங்கில் மொழிபெயர்த்துள்ளார். சாகித்திய அக்காதமிக்காகவும். பிரேமா நந்தகுமார் அவர்கள் பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் ஒரு நூலினை ஆங்கிலத்தில் எழுதி உள்ளார். இதனை ஆர்.எஸ். சுதர்சனம் அவர்கள் தெலுங்கில் செம்மையாக மொழி பெயர்த்துள்ளார். ஆர். எஸ். பத்மநாபன் அவர்கள் குழந்தைகளுக்காகத் தமிழில் பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றை அருமைப்படச் சித்திரித்து ஒரு நூல் எழுதியுள்ளார். இதனைத் தெலுங்கில் மொழிபெயர்த்தவர் சி. ஆர். சர்மா.

பாரதியார் சந்திரிகையின் கதை என்னும் புதினத்தைப் படைத்த செய்தி அனைவரும் அறிந்ததே. இதனை அவர் பூர்த்தி செய்யாமலேயே இறந்துவிட்டார். இந்தப் புதினத்தில் தெலுங்கு இலக்கியத்திற்கும், தெலுங்கு நாட்டிற்கும் தொண்டு புரிந்த கந்துகூரி வீரேசலிங்கம் பந்துலு அவர்களை ஒரு கதாபாத்திரமாகப் படைத்துள்ளார். ஆகவே இந்தப் புதினம் தெலுங்கு மக்களையும் கவரக்கூடிய வண்ணத்தில் அமைந்துள்ளது. இந்நாவலைத் தெலுங்கு வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும்நோக்குடன் நெல்லூரைச் சேர்ந்த மூன்றுஎழுத்தாளர்கள்—கோபால ரெட்டி, கிருஷ்ண, ராகவன்—நன்றாக மொழிபெயர்த்துள்ளார்கள், இது முதலில் 'ஜமீன் ரய்து' என்ற செய்தித்தாளில் வெளியாகிப் பின்னர்ப் புத்தக வடிவத்தில் வந்துள்ளது.

இவ்வாறு பாரதியின் வாழ்க்கை வரலாறும், அவரது எழுத்தோவியங்களும் தெலுங்கு மக்களுக்கு அறிமுகமாக்கப்பட்டது. ஆயினும், பாரதியாரின் பல கவிதைகள், கட்டுரைகள் தெலுங்கில் வரவேண்டிய அவசியம் இருக்கிறது. அப்போதுதான் அந்தத் தேசிய கவிஞனைப் பற்றி நன்கு அறிவதற்குத் தெலுங்கு மக்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பு கிடைக்கும்.

# 10

# தமிழகம் அறிந்த தெலுங்குக் கவிஞர்கள்

ஓர் இலக்கியத்தின் பெரும் புகழும் அதனைப் படைக்கும் கவிஞர்களைச் சார்ந்து இருக்கும் என்பது அனைவரும் அறிந்த உண்மை. தமிழ் இலக்கியம் என்றவுடனே திருவள்ளுவர், கம்பர் முதலிய கவிஞர்கள் மனக்கண் முன் தோன்றுவது போல, தெலுங்கு இலக்கியம் என்றவுடனே போதன்னா, வேமன்னா போன்ற கவிஞர்கள் நினைவிற்கு வருவது இயல்பு. இவர்களைப் போன்ற கவிஞர்கள் மூலமாகத்தான் ஓரளவாவது தெலுங்கு இலக்கியம் தமிழகத்திற்கு அறிமுகமாகி யுள்ளது.

தெலுங்குக் கவிஞர்களில் போதன்னாவிற்கு ஒரு சிறப்பான இடமுண்டு. அவர் பெரும் புலவர் மட்டுமின்றி சிறந்த இராம பக்தரும்கூட. எனவே அவர் இயற்றிய மகாபாகவதம் இன்றைக்கும் ஒரு சுவைமிக்க இலக்கியமாகக் கொண்டாடப்படுகிறது. 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். தமது சமகாலத்துக் கவிஞர்களைப் போல, அவர்தம் பாகவதத்தை ஓர் அரசனுக்கோ செல்வருக்கோ அர்ப்பணிக்கவில்லை. நக்கீரரைப் போலவே, சுதந்திரக் கருத்து உள்ள போதன்னாவைப் பாரதியார் தமது ''சில கவியரசர்'' எனும் கட்டுரையில் குறிப்பிடுகிறார். 1916ல் காளிதாசன் என்னும் புனை பெயரில் எழுதப்பட்ட இக்கட்டுரையில் திருவள்ளுவர், கம்பர், இளங்கோ அடிகள் போன்ற கவியரசர்களையும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே போதன்னா பெயரில் பாரதியாருக்கு ஆதரவும்

அன்பும் மிகவும் இருந்ததாக நாம் கருதலாம். கதா காலட்சேபம் செய்யும் பாகவதர்கள் ருக்மிணி கல்யாணம், குசேலரின் கதை முதலியவற்றைக் கூறும்போது போதன்னா எழுதிய பாகவதத்திலிருந்து சில செய்யுட்களை எடுத்துரைப்பது கவனிக்கத்தக்க ஒன்று. இந்தப் பாகவதநூல் சிறந்த இராம பக்தரும் இசை மேதையுமாகிய தியாகராஜருக்குப் பாராயண நூலாக விளங்கியுள்ளது. அவரது சீடரான வேங்கடரமண பாகவதர் தமது கைப்பட பாகவதத்தின் ஒரு படிவம் தயார் செய்து அதனை தியாகர்ராஜருக்குக் கொடுத்தார். அந்தப் படிவம் மதுரை செளராஷ்டிர சபாவில் சிறந்த முறையிலே காட்சி அளிக்கிறது. அதனைச் செம்மையாக வைத்துக் கொண்டிருக்கும் சபையினர் போற்றத் தக்கவர்.

தமிழ் நாட்டிற்கு அறிமுகமான மற்றொரு தெலுங்குக் கவிஞர் தெனாலிராமனாவார். தெனாலிராமனாக அறிமுகமான அவரை இராமகிருஷ்ணர் என்றும், இராமலிங்கர் என்றும் அழைப்பது வழக்கம்.

16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தெனாலிக் கவிஞர் ஒரு பெரும் புலவர். அவர் எழுதிய பாண்டுரங்க மாகாத்மியம் ஒரு மாகாப்பியம். ஆனால், அவரைப் பற்றிக் கூறும் கதைகளுக்குத் தமிழகத்தில் மிகவும் விளம்பரம் கிடைத்துள்ளது. அவர் ஒரு விகடகவி. இந்தச் சொல்லை எப்படிப் படித்தாலும் மாறாததைப் போலவே, அவரது காப்பியத்திலும் ஆங்காங்கே இரசமான நகைச்சுவையும் காணப்படுகிறது.

தமிழகத்திற்கு நன்கு அறிமுகமான தெலுங்குக் கவிஞர் வேமன்னா என்று கூறலாம். அவர் காலத்தைக் குறித்துச் சில கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், அவர்

17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று கொள்வது பொருத்தமாக இருக்கும். வேமன்னா சிறந்த கவியாக மட்டுமல்லர், யோகியாகவும், தெய்வத் தொண்டராகவும், பேரும் புகழும் பெற்றிருக்கிறார். என்றாலும் அவர் ஒரு மனிதாபிமானி என்று கூறுவதுதான் மிகவும் பொருத்தமாக இருக்கும். அவர் ஒரு காப்பியமும் எழுதாவிட்டாலும் அவர்பேரில் நூற்றுக் கணக்கான செய்யுட்கள் வழக்கில் இருக்கின்றன. அவற்றுள் சில பிற்காலத்தில் சேர்க்கப் பட்டவையாக இருக்கலாம். ஆயினும் வேமன்னாவின் நடை என்னும் அளவுகோலின் உதவியால், அவர் செய்யுட் களை எளிதில் அறியலாம். எளிய நடை, வாழ்க்கையி லிருந்து தேர்ந்தெடுத்த உவமைகள், எதையும் நகைச் சுவைப் பார்வையுடன் நோக்கும் ஒரு தனி இயல்பு, ஆழ்ந்த மனிதாபிமானம், மூட நம்பிக்கைகளைப் பரிகசிக் கும் தன்மை முதலியவை வேமன்னா செய்யுட்களின் தனிச்சிறப்புகள். அவரது பெயரோ அல்லது அவரது செய்யுளோ தெரியாதவன் தெலுங்கனாக மாட்டான். அவ் வளவு புகழ் அவர் செய்யுட்களுக்குக் கிடைத்துள்ளது. வேமன்னா செய்யுட்கள் சில ஏற்கெனவே தமிழில் வந்திருப்பது கவனிக்கத் தக்கது. ஆயினும் அவரைப் பற்றி இன்னும் தெரிந்து கொள்ளவேண்டியது எவ்வளவோ இருக்கிறது.

பத்திராசலம் இராமதாசர் தமிழர்களுக்கு அறிமுக மானவர். அவர் பாடிய கீர்த்தனைகளை நாம் இன்றைக்கும் இசைக் கச்சேரிகளிலும், பஜனைகளிலும் கேட்கலாம். அவரைப் போலவே க்ஷேத்திரக்ஞர் எனக் கூறப்படும் க்ஷேத்திரய்யா அவர்களும் இசை அறிஞர்கள் அனை வருக்கும் தெரிந்தவர். ஆயினும் தியாகராஜருக் குக் கிடைத்த பேரும் புகழும் மற்றெவருக்கும் கிடைக்க வில்லை என்றால் அது மிகையாகாது.

தியாகராஜர் என்றவுடனேயே பக்தியும் இலக்கியச் சுவையும் கலந்த அவரது கீர்த்தனைகள்தான் நம் நினைவிற்கு வரும். அவர் பிரகலாத சரித்திரம், நௌகா சரித்திரம் என்னும் இரண்டு இசை நாடகங்க எழுதியுள்ளார். இலக்கிய நோக்குடன் பார்த்தாலும் இவ்விரண்டும் சிறந்த படைப்புக்கள் என்று கூறலாம். அவரது கீர்த்தனைகள், மொழி, வட்டாரம், கலாசாரம் போன்ற தடைகளைத் தாண்டிப் பரவியுள்ளன என்று கூறுவது உண்மை.

அன்னார்களின் அருமை மிக்க படைப்புக்களினால் தெலுங்கு மொழியும், தெலுங்கு இலக்கியமும் பிற மொழியாளர்களிடத்தில் பரவியுள்ளன. உண்மையில் போதன்னா வேமன்னா, தியாகராஜர் போன்ற கவிஞர்களை ஒரு மொழிக்கோ ஒரு வட்டாரத்திற்கோ கட்டுப்படுத்திக் கூறுவது பொருந்தாது. அவர்கள் அனைத்துலக இலக்கியச் சிற்பிகள்! ★